# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 17 வியாழக்கிழமை (02.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 280


# அரசமைப்புத் திருத்த யோசனைகள்:
# நீதிமன்ற நிலைப்பாடு சபாநாயகரிடம்

## நாடாளுமன்றில் 8ஆம் திகதி வெளியிடப்படும்

கொழும்பு,செப்ரெம்பர் 2

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாடு நேற்று சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

18ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான தீர்ப்பு இரகசிய ஆவணமாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சார்பில், அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்துக்குரிய யோசனை எதிர்வரும் எட்டாம் திகதி காலையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்போது, உயர் நீதிமன்றத் தீர்ப்பை சபாநாயர் சமல் ராஜபக்ஷ சபையில் அறிவிப்பார்.

அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா என்று அதிகமான கட்சிகள் தீர்மானம் எடுத்து முடித்துவிட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இடதுசாரிக் கட்சிகளுமே இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏழாம் திகதியும் இடதுசாரிக் கட்சிகள் அடுத்த வாரமும் முடிவு எடுக்கும் என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அரசுடன் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளன. அதேபோல் எதிர்க்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## இடதுசாரிக் கட்சிகள் இவ்வாரத்தில் முடிவு

கொழும்பு,செப்.2

அரசமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களிப்பதா இல்லையா என இடதுசாரிக் கட்சிகள் இவ்வார இறுதியில் தீர்மானிக்குமென ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் அரசமைப்புத் திருத்தம் குறித்து தனித்தனியாக ஆராய்ந்து முடிவெடுத்த பின்னர் இக்கட்சிகளின் தலைவர்கள் (24 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவுக்கு எதிராகக் கிளம்பும் அமெரிக்கத் தமிழர் அமைப்பு

வாஷிங்டன்,செப்.2

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா வரவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக கைதுசெய்ய முடியுமா என அமெரிக்காவில் இயங்கும் ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு அமெரிக்க உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் ஜோன் றொபட்டிடம் கருத்துக் கேட்டிருப்பதாக சர்வதேச ரீதியில் இயங்கும் தமிழ் இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு

(24 ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பலின் 36 பயணிகள் மீது கனேடிய அதிகாரிகள் சந்தேகம்

### தனியான இடத்தில் தடுத்துவைப்பு

கொழும்பு,செப்.2

'சன் சீ கப்பலில் கனடாவைச் சென்றடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் 36 பேருக்கு ஆயுதக் குழுக்களுடனோ அல்லது விடுதலைப் புலிகளுடனோ தொடர்பு இருக்கலாம் என்று கனேடிய அதிகாரிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் கப்பலின் தலைவர் கமல்ராஜ் கந்தசாமி அல்லது கப்டன் கமல், கப்பலின் மாலுமி கப்டன் விநோத் ஆகியோரையும், சந்தேகத்துக்குரிய பயணிகள் 36 பேரையும் ஏனைய தமிழ்ப் பயணிகளிடம் இருந்து தனிமைப்படுத்தி வைத்துள்ளனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யினர் துண்டுப் பிரசுரம்

கொழும்பு,செப்.2

அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு எதிராக - மக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக - ஜே.வி.பி. இன்று நாடளாவிய ரீதியில் 20 லட்சம் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெறும். ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உட்பட ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் மற்றும் எம்.பிக்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்வர் என்று ஜே.வி.பி. நேற்றுத் தெரிவித்தது. (24 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் பொது மக்களின் காணிகளை ராணுவம் அபகரிப்பதை இந்தியா தடுக்கவேண்டும்

### இந்திய வெளியுறவுச் செயலரிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்து

கொழும்பு,செப். 2

வன்னிப்பகுதியில் மீள்குடியேற்றுவதற்காகக் கொண்டுசென்ற மக்களை இடைத்தங்கல் முகாம்களில் அடைத்துவிட்டு, அவர்களின் நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக அபகரிக்கும் முயற்சியில் இலங்கை அரசு இறங்கியிருப்பதை இந்தியா தடுத்துநிறுத்த வேண்டும். இதற்கான அழுத்தத்தை இந்திய அரசு இலங்கைக்கு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு இந்தியத் தூதுவர் இல்லத்தில் நேற்று இரவு 7 மணியளவில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தியவெளியுறவுச் செயலர் நிருபமாராவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சந்திப்பில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு :- (24 ஆம் பக்கம் பார்க்க)

### மூன்று வயது மகனைக் கொலைசெய்த வழக்கில்

## மரண தண்டனை கிடைத்த தந்தை ஒருவர் நீதிமன்ற மாடியிலிருந்து குதித்துப் படுகாயம்!

### யாழ்.நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு

யாழ்ப்பாணம்,செப்.2


மூன்று வயது மகனைக் கொலை செய்த வழக்கில் நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்ட கைதியொருவர் நீதிமன்ற இரண்டாம் மாடிக் கட்டடத் தொகுதியில் இருந்து கீழே குதித்துப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தால் யாழ். நீதிமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது :-

2003ஆம் ஆண்டு பருத்தித்துறை வல்லிபுரக் கோயிலடிப் பகுதியில் வசித்துவந்த குறிப்பிட்ட நபர் தமது மூன்று வயது மகனின் இரண்டு காலிலும் பிடித்து நிலத்தில் அடித்துப் படுகொலை செய்தார் என்றும்

(24 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவக் காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



நீலாம்பரி உணவகம்

இல. 744, கே.கே.எஸ்.வீதி
(தட்டாதெருச் சந்தி)
யாழ்ப்பாணம்.

காலம்: நாளை (03.09.2010) வெள்ளிக்கிழமை

காலை 7.50 மணி முதல் 9.00 மணிவரையுள்ள சுபநேரத்தில் திறந்து வைக்கப்படும்.

சுவையான சைவ, அசைவ உணவு வகைகள்
குளிர்பான வகைகள் மற்றும்
சிற்றுண்டி வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(102770)

செ.சுதாகரன்(உரிமையாளர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்
சூசைப்பிள்ளை ஜெபரட்ணம்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
**சூசைப்பிள்ளை அக்வேஸ்**

அவர்கள் காலமான செய்தி கேட்டுத் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் அஞ்சல் அதிபர்களும், ஊழியர்களும்,
நீர்வேலி உப அஞ்சல் அதிபர், ஊழியர்கள்,
கோப்பாய் வடக்கு, அச்செழு, சிறுப்பிட்டி உப அஞ்சல் அதிபர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் தமிழ்ப் பாட ஆசிரியை திருமதி
சௌ.சிவகுமார் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி மகேஸ்வரி கதிரவேலு**
அவர்கள் காலமான செய்தி கேட்டுத் துயரடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கணேசபிள்ளை கமலாம்பிகை



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பன்னாலையை வதிவிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை கமலாம்பிகை நேற்று (01.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி -பரிமளம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற கணேசபிள்ளையின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், N.K. பத்மநாதன் (நாதஸ்வரம்), விநாயகமூர்த்தி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற வரதலஷ்மி ஆகியோரின் சகோதரியும் நவமணிதேவி, நாகசோதி, விக்னேஸ்வரன், அன்பரசி (ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் தாயும் வயலின் வித்துவான் விநாயகமூர்த்தி, கமலநாதன், பானுமதி, குகதாஸன் (குழந்தை) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கோணப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
பிள்ளைகள்.
(0778803774)

### வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை நேற்றுமுன்தினம் (31.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராணியின் (இளைப்பாறிய ஆசிரியை) கணவரும், Dr.குருபரனின் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், Dr.ஸக்ஷியின் (களுபோவில வைத்தியசாலை) அன்பு மாமனும் அமரர் மகேஸ்வரி மற்றும் மாணிக்கவாசகர், சரஸ்வதி, துரைராசா ஆகியோரின் சகோதரரும் அமரர் பரமசாமி மற்றும் இரத்தினம், அமரர் சோமசுந்தரம் மற்றும் ஞானமலர், பாலச்சந்திரன் (66, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13), அமரர் சிவச்சந்திரன் (சிவநேசன்) மற்றும் சிவராணி ஆகியோரின் மைத்துனரும் விமலாதேவி, விஜயகுமாரி, தனேந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் திருபரன் (Demonstrator கொழும்பு பல்கலைக்கழகம்), கலைமதி (Cambio கொம்பனி), கிருபரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்),சியாமினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், துரைராஜன் (பார்த்திபன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவபரன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

*தகவல்:*
Dr.கி.குருபரன் (மகன்).
செ.பாலச்சந்திரன் (மைத்துனர்).

# 4 இஸ்ரேலியர் சுட்டுக்கொலை

ஜெருசலேம், செப். 02

பலஸ்தீனத்தில் மேற்குக்கரை பகுதியில் காரில் சென்றுகொண்டிருந்த இஸ்ரேலியர்கள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு ஹமாஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்களுக்கிடையே அமைதி பேச்சுகள் நடக்கவிருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை பேச்சுகளில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# அமெ.துணை ஜனாதிபதி ஈராக் விஜயம்

பக்தாத், செப். 02

ஈராக்கில் தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் நாடு திரும்புவதற்கான கடைசி திகதியாக ஓகஸ்ட் 31 அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த கெடு திகதிக்குள் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் 90 ஆயிரம் பேர் அமெரிக்கா திரும்பினார்கள். இந்த நிலையில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடேன் ஈராக் வந்துள்ளார்.

அவர் ஈராக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவர் துருப்புகளை திரும்பப் பெற்றுக்கொண்டதால், அமெரிக்கா உங்களைகைவிட்டு விடவில்லை. அது கைவிடாது என்று உறுதி அளித்தார்.

ஈராக்கில் தேர்தல் முடிந்து 6 மாதங்களாகியும் யாருக்கும் இறுதி பெரும்பான்மை கிடைக்காததால், இன்னும் ஆட்சி அமைக்க முடியாத நிலை உள்ளது.

இந்தக் குழப்பநிலையை பயன்படுத்திக் கொண்டு தீவிரவாதிகள் தாக்குதலை அதிகப்படுத்தி வருகிறார்கள். எனவே அரசு அமைப்பதற்கான உதவிகளையும் ஜோ பிடேன் மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்



### செல்வி லூசி தோமா
(ஓய்வுபெற்ற மருத்துவமாது)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், இல.20, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லூசி தோமா நேற்று (01.09.2010) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைத்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் தோமா - திருமதி மேரி தோமா ஆகியோரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, டானியல், ஜேக்கப் மற்றும் திருமதி தேவமணி- துரைசிங்கம், திருமதி ஞானம் - நவனீதகிருஷ்ணன், திருமதி ரோகினி பெஞ்சமின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி செல்வம் - நல்லையா, திருமதி புஸ்பமலர் - ஜேக்கப், செ.துரைசிங்கம், வ.பெஞ்சமின் மற்றும் காலஞ்சென்றவர்களான திருமதி யேசுமலர் - டானியல், ஆ.நவனீதகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (02.09.2010) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0213215774

தகவல்:
குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

பலாலி றோட், கோண்டாவில் சந்தியில் மேல் வீடு விற்பனைக்கு உண்டு. 3 ½ பரப்புக் காணி, வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வீடு.
எஸ். தர்சிகா, தொ.பே.: 0776039578, 0775808933

## தேவை

நல்லூர்ப்பகுதி, வைமன் வீதி, நாவலர் வீதி, பிறவுண் வீதி, திருநெல்வேலியில் 1 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 0777630215


## மரண அறிவித்தல்கள்

### செல்லையா குணரத்தினம்



முள்ளானையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கு, இரட்டையர்புலம் ஞானவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குணரத்தினம் நேற்று (01.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் நாகபூஷணியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, நவரட்ணம், ஜீவரட்ணம் (சிங்கப்பூர்), செல்லம்மா (சிங்கப்பூர்), அமரர் இராசரத்தினம் (பண்டிதர்), அமரர் இராசதுரை மற்றும் மகேஸ்வரி (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோதரனும் விமலாதேவி (ஜேர்மனி), அமரர் குந்ததிதேவி மற்றும் இந்திராணி, சோதிவடிவேல், செல்வராணி, யோகராசா (லண்டன்), அமரர் சிவகணநாதன், அமரர் சிவராசா ஆகியோரின் மைத்துனரும் வசந்தகுமாரி, அமரர் உதயகுமாரி மற்றும் குணேஸ்வரன், யோகேஸ்வரன், லிங்கமதி, அமரர் லிங்கமலர் மற்றும் யோகேந்திரன் (ஜேர்மனி), றட்ணறதி (முன்பள்ளி ஆசிரியர்), ஜமுனா (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாயகமூர்த்தி, கரிகரன், ரவிதாஸ், றமேஸ், தயாவதி, சுசானா (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமனும், டட்ஷா, திலீபன், தர்மினி, ஜயந்தினி, விதூசனா, சஞ்ஜீவனா, தட்சன், தட்ஷாயினி, யதூசன், பியாசுமனா, பியாயமுனா, கிருத்திகா, அகிலா, துஷ்யந்தன், அபிஷேக், பர்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் தர்ஷாயினியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நல்லையா தனபாலசிங்கம்
(கிராம சேவையாளர் - வேலணை J/15)



புங்குடுதீவு, 07ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.245, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தனப்ாலசிங்கம் நேற்று (01.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (பாணந்துரை) - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சத்தியபாமாவின் (ஆசிரியை, யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) அன்புத் துணைவரும் தக்ஷயனின் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும், மகேந்திரலெட்சுமி, புஸ்பராணி, தனலெட்சுமி, தனபாக்கியலட்சுமி, கோமளாதேவி, செல்வராணி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் இலகநாதன், திருலோகநாதன், காலஞ்சென்ற பவா சண்முகம் மற்றும் சோமசுந்தரம், சிவபாலன் (கனடா), கருணதாஸ் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை இல.39, மணிக்கூட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள சகலனின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப.3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.39, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சத்தியபாமா (மனைவி).
க.திருலோகநாதன் (சகலன்).
*சிறி சக்தி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.*

### திருமதி மகேஸ்வரி கதிரவேலு



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும், ஆலங்குளாயினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கதிரவேலு கடந்த (31.08.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மருமகளும், ராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும் வரதலட்சுமி, பகீரதி (ஆசிரியை, வண். நாவலர் மகா வித்தியாலயம்), சௌந்தரராணி (ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், மீன்பிடி இலாகா), சோதி சுந்தரலிங்கம் (கிராம அலுவலர், J/104, கந்தர்மடம்), சிவகுமார் (தொகுப்பாளர், சுவர்ணவாஹினி) ஆகியோரின் அன்பு மாமியும் சுஜீபா (மாணவி, பேராதனை பல்கலைக்கழகம்), சதீபா (மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), டினேஷ்சாந்த் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), டிலக்ஷனா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குளாய் வீதி,
(சனசமூக நிலையம் அருகில்)
ஆலங்குளாய், சண்டிலிப்பாய்.

தகவல்:
சோதி சுந்தரலிங்கம் J.P
(கிராம அலுவலர் J/104)
கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இப்படி எத்தனை காட்சிகள் அரங்கேறுமோ?

முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா குற்றமற்றவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒழுக்காற்றுக் குழு இவ்வாறு தனது தீர்ப்பை வெளியிட்டுள்ளது.

மேர்வின் சில்வாவுக்கு எதிராக எவரும் முறைப்பாடு செய்யவில்லை. மேர்வினால் மரத்தில் கட்டிவைக்கப்பட்டவர் என்று கூறப்படும் சமுர்த்தி அலுவலர், டெங்கு ஒழிப்புப் பிரசாரத்தை மக்களுக்குப் பிரசித்தப்படுத்தும் முகமாகவே தாமும் மற்றொரு சமுர்த்தி அலுவலரும் சேர்ந்து இந்த 'நாடகத்தை' நடத்தியதாக அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை ஒழுக்காற்றுக் குழுவுக்கு அனுப்பிவைத்தார். அதனால் முன்னாள் பிரதி அமைச்சர் குற்றமற்றவர் என்று ஒழுக்காற்றுக் குழு அறிவித்திருக்கிறது.

இவ்வாறு தமது தரப்பு சரியானதைத்தான் செய்திருக்கிறது என்று சடைந்திருக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரான அமைச்சரான மைத்திரிபால சிறிசேன.

மேர்வின் சில்வா எத்தகையவர் என்பது ஊர் அறிந்த உண்மை. சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைப்பதற்கு முன்னர், அவர் செய்த நட்டாமுட்டித் தனங்கள் நாடு அறிந்தவை. அத்தகைய ஒருவர் சமுர்த்தி அலுவலர் ஒருவரைக் கட்டி வைத்துவிட்டு ஊடகவியலாளர்களுக்கு அறிவித்த செய்திகள் நாடு அறிந்த விடயம்.

பொதுவாகப் பார்ப்போமானால் அரச அலுவலர் ஒருவர் தமது கடமையைச் செய்யவில்லை என்றால் அவரை உரிய ஒழுங்கு விதிகளின் கீழ் தண்டிக்கலாம், அல்லது தண்டம் விதிக்கலாம். சம்பந்தப்பட்டவரை கட்டிவைத்துத் தண்டிப்பது காட்டுச் சட்டமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நியமித்த ஒழுக்காற்றுக் குழுவின் முடிவை, தீர்ப்பை சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நாட்டின் குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதனை விடுத்து அரசு நழுவல் போக்கைக் கடைப்பிடித்து சம்பந்தப்பட்டவரைத் தண்டனையிலிருந்து தப்பிவிடச் செய்துள்ளது என்று சாடியிருக்கிறது.

மேர்வின் சில்வாவுக்கு எதிராகப் பொதுமக்கள் கிளம்பிக் குழப்பம் செய்யாமல் தடுப்பதற்காகவே ஜனாதிபதி தம்து கட்சியைச் சேர்ந்தவர்களையே உறுப்பினர்களாகக் கொண்ட ஒழுக்காற்றுக் குழு ஒன்றை நியமித்தார். மொத்தத்தில் அரச உத்தியோகத்தர் ஒருவரைக் கட்டிவைத்த பேர்வழிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு விரும்பவில்லை. மேர்வினைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒழுக்காற்றுக் குழுவை நியமித்ததே அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் எழாமல் தடுத்துவிடுவதற்கே ஆகும்.

ஒழுக்காற்றுக் குழு நியமிக்கப்பட்ட போதே மேர்வின் குற்றவாளியாகக் காணப்படமாட்டார் என்பதனைப் பலரும் எதிர்பார்த்தனர். அதுவே நடந்திருக்கிறது.

சமுர்த்தி அலுவலரை மரத்தில் கட்டி வைத்ததற்காக அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து நீக்குவதோ, பிரதி அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதோ பல பின்விளைவு களைக் கொண்டுவரும் என்பது அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த எல்லாப் பிரதானிகளுக்கும், பிரமுகர்களுக்கும் தெரியும். ஒழுக்காற்றுக் குழுவை நியமித்ததும், பிரதி அமைச்சர் சட்டையைக் கழற்றியதும் அரசாங்கத்தை மக்கள் கீழ் மட்டத்தில் வைத்து நோக்கக்கூடாது என்பதற்கே ஆகும்.

ஜனநாயகம் என்ற போர்வையில் நடந்த பூசிமெழுகுதல்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்களாலேயே அரங்கேற்றப்பட்ட நாடகம் அன்றி வேறில்லை.

அரசாங்கத்தின் இந்த ஜனநாயகத்துக்கு ஒவ்வாத செயற்பாடு இலங்கைச் சரித்திரத்தின் கறுப்புப் பக்கத்தில் இடம் பிடித்துக்கொள்ளும். ஒரு வகையில் இதுவும் ஒரு சாதனை தான்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு தடவைகளுக்கு அதிகரிக்கப்படும் பட்சத்தில் உருவாகப் போகும் ஜனநாயகச் சூழலில் இவை போன்று வேறு பல காட்சிகளும் 'அரங்கேறும்' என்று எதிர்பார்க்கலாமே! யானை வரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே!!..

# வாழ்க்கைச் செலவுப்படி நிறுத்தத்தின் எதிரொலி ; சங்க நிர்வாகத்துக்கெதிராகப் பணியாளர் போர்க்கொடி

## அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் திரண்டனர்

யாழ்ப்பாணம், செப். 2

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த வாழ்க்கைச் செலவுப்படி 2,875 ரூபா நிறுத்தப்பட்டதை எதிர்த்தும் அதனை மீண்டும் வழங்க வேண்டும். தலைவரையும் பொது முகாமையாளரையும் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்தும் யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் நூற்றுக்கணக்கானோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு முன்னால் நேற்றுக் கூடினார்கள்.

சங்கப் பணியாளர்கள் அலுவலகத்துக்கு முன்னால் கூடியதையடுத்து அங்கு வந்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊழியர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

அங்கு அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு :-

* கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்டுவந்த வாழ்க்கைச் செலவுப்படி 2,875 ரூபாவை மீண்டும் எமக்கு வழங்க வேண்டும்.
* சங்கத்தின் தலைவரும், முகாமையாளரும் எமக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
* சங்கம் நட்டத்தில் இயங்குவதற்குத் தற்போதைய நிர்வாகத்தின் நிர்வாகத் திறமையின்மையே காரணம். எனவே, அந்த நிர்வாகத்தைக் கலைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளைத் தாங்கள் நிறைவேற்றாத பட்சத்தில் நாம் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் - என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கூட்டுறவுப் பணியாளர்களின் இந்தக் கோரிக்கைகளைக் கேட்ட அமைச்சர், உங்களின் எதிர்காலத்துக்கு உதவும்படியான சிறந்த ஒரு முடிவை எடுப்பதற்கு எதிர்வரும் 16ஆம் திகதி வரை பொறுத்திருங்கள் - என்று கூறினார்.

இதேவேளை -

கூட்டுறவுப் பணியாளர்களின் இந்தத் தொடர் போராட்டத்தால் நேற்று மதியம்வரை கூட்டுறவுச் சங்கங்கள் எவையும் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-6-16)

# தாதிமார் சங்கங்களின் கோரிக்கைகள் ஐந்தையும் வழங்குவதற்கு அரசு இணக்கம்

கொழும்பு, செப். 2

தாதியர் தொழிற்சங்கத்தின் ஐந்து பிரதான கோரிக்கைகளையும் நிறைவேற்றி வழங்குவதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதற்கான உறுதிமொழியை தாதியர் தொழிற்சங்கத்தின் தலைவர் வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரவுக்கு வழங்கியுள்ளார்.

சங்கத்தின் கோரிக்கைகள் ஐந்தும் இம்மாத முடிவுக்குள் நிறைவேற்றி வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவசியமான பணிப்புரைகளை அமைச்சின் செயலாளர் டாக்டர் ரவீந்திரருபெருவுக்கு அமைச்சர் வழங்கியிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

சுகாதாரத்துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்களுடன் ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் அமைச்சர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

தாதியர்கள் 12 வருடகாலச் சேவையை முடித்ததன்பின்னர் அதனை விசேஷ சேவையாகக் கருதி முதலாம் தரத்தில் நிலைப்படுத்துவது. பயிற்சிக்கால மூன்றாண்டுகள் என்றிருப்பதை மகப்பேற்று, பயிற்சி உட்பட மாற்றியமைப்பது.

தேசிய பயிற்சிக்கான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவது, இதனை நாடாளுமன்றச் சட்டம் ஒன்றின்மூலம் சுயாதீன அமைப்பாகச் செயல்பட அனுமதிப்பது, தாதியர் சபை ஒன்றை நிறுவுவது போன்றவை தாதியர் அமைப்புக்களின் சில முக்கிய கோரிக்கைகளாகும்.

நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவுடன் இந்த விடயங்கள் ஆராயப்பட்டதின்பின் கோரிக்கைகள் வழங்கப்படும் என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ப)

# இந்திய அரசாங்கம் வழங்கும் உதவித் திட்டங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களையும் இணையுங்கள்

## நிருப்பமா ராவிடம் மாநகர உறுப்பினர் சுபியான் மகஜர்

யாழ்ப்பாணம், செப். 2

இந்திய அரசு இலங்கைக்கு வழங்கும் சகல உதவித்திட்டங்களிலும் குறிப்பாக வீட்டுத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட முஸ்லிம் மக்களையும் உள்வாங்க வேண்டும் என்று கோரி இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவிடம் மனுவொன்றைக் கையளித்தார் யாழ். மாநகர சபை உறுப்பினர் சுபியான்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் அரசியல் கட்சி, திணைக்களங்கள், பல்கலைக்கழகத்தினர் சமயப் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் யாழ். முஸ்லிம் மக்களின் சார்பாக மகஜரைக் கையளித்தார்.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளவை வருமாறு :-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து 1990ஆம் ஆண்டு முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். அந்த மக்களில் பலர் இன்றும் புத்தளம், அநுராதபுரம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

இந்த மக்கள் தற்போது யுத்தமற்ற சூழ்நிலையில் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். ஆனால் அவர்களுடைய வீடுகள், சொத்துக்கள் அனைத்தும் அழிவடைந்துவிட்டன. எனவே இந்திய அரசு இலங்கைக்கு வழங்கும் சகல உதவித்திட்டங்களிலும் குறிப்பாக வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களையும் உள்வாங்க வேண்டும் - என்றுள்ளது. (த-6-15)

# அனுமதியற்ற விளம்பரப் பதாகைகள் வலி.தென்மேற்கில் அகற்றப்படுகின்றன

சண்டிலிப்பாய், செப். 2

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகளை அகற்றுவதில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையைத் தொடர்ந்து தென்னிலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், உள்ளூர் வர்த்தக நிறுவனங்கள் என்பன தங்கள் பொருள்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்காகவும் விற்பனையை அதிகரிப்பதற்காகவும் மக்களைக் கவரக்கூடிய வகையிலான விளம்பரங்களை வீதிகள் தோறும் காட்சிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

இந்தவகையில் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி வீதிகள் தோறும் விளம்பரங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இதனால் பிரதேச சபைக்கு வரவேண்டிய வருமானத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகளை அகற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து வருமானவரி உத்தியோகத்தர்கள் விளம்பரங்களை அகற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள். (எ-115)

## நாளை

ஆவணி 18 : 03.09.2010

: வெள்ளிக்கிழமை

திதி : தசமி

பி.இ. 03.37 வரை

நட்சத்திரம்: மிருகசீரிடம்

மு.ப 09.53 வரை.

சுபநேரம் : 06.05 - 07.35

ராகுகாலம் : 10.35 - 12.05

# மாபெரும் சூரியப்புயல் 2012ஆம் ஆண்டு ஏற்படுமாம்

## எதிர்வு கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்

வாஷிங்ரன், செப். 2

2012ஆம் ஆண்டு மிகப்பெரிய சூரியப்புயல் ஒன்று ஏற்படவிருப்பதாக விண்வெளி ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

கடந்த மாதம் பூமியின் மீது ஒளிப்பிரளயம் ஒன்றை ஏற்படுத்திச் சென்றதைவிட 2012ஆம் ஆண்டு ஏற்படவிருக்கும் சூரியப் புயல் சக்தி வாய்ந்ததாகவிருக்கும். 100 மில்லியன் நீர்வாயுக்குண்டுகளின் சக்தியைக் கொண்டதாக இந்தச் சூரியப்புயல் இருக்கும் என்று கூறும் விஞ்ஞானிகள் உலகம் முழுவதிலும் இருக்கும் முழு மின்சக்தி நிலையங்களையும் அடித்து நொறுக்கிவிடக்கூடிய சக்தி கொண்டதாக அது இருக்கும் என்று எதிர்வு கூறியுள்ளனர்.

2006ஆம் ஆண்டிலிருந்து நாஸா விண்வெளி ஆய்வு நிலையம் இதுபற்றி கவனித்து வருவதாகவும் இம்மாதிரி புயல்கள் 1859 மற்றும் 1921ஆம் ஆண்டுகளில் பூமியைத் தாக்கியிருப்பதாகவும் அறிவித்துள்ளனர். அக்காலங்களில் பூமியில் பெரும் அளவில் அழிவுகள் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. 2012ஆம் ஆண்டின் புயல் அவற்றைவிட மோசமான அழிவுகளை ஏற்படுத்தும் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

விஞ்ஞானிகளதும் விண்வெளி ஆராய்ச்சியாளர்களதும் ஏகோபித்த கருத்தின்படி, வரப்போகின்ற இந்த சூரியப் புயலானது கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய எல்லாப் புயல்களையும்விட மிக மோசமானதாக இருக்கப்போகிறது என்பதாகும்.

விமான சேவைகள், தகவல் தொடர்புகள் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை இந்தப்புயல் மிக மோசமாகப் பாதிப்பதாக இருக்கும் என்கிறார்கள் அவர்கள்.

மின்னல், இடிமுழக்கம் மற்றும் திடீர் வெளிச்சம் போன்ற செயற்பாடுகள் ஏற்பட்டு பூமியின் காந்த சக்தி களநிலையையே மாற்றிவிடும் அபாயமுண்டு என்கிறார்கள் அவர்கள்.

2012ஆம் ஆண்டு இந்தப்புயல் தாக்கம் ஏற்படும் என்று கூறப்பட்டாலும் 2013ஆம் ஆண்டும் அது நீடிக்கும் சாத்தியமும் இருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

தோற்றம்
1960 - 10 - 23



மறைவு
2010 - 09 - 01

## அமரர் நல்லையா தனபாலசிங்கம்

**(வேலணைப்பிரதேச செயலகத்தின் வேலணை, தென்கிழக்கு கிராம அலுவலர்)**

பிறர் மனம் நோகடிக்கா
எம் தனம் -
எம் மனம் நோகடித்தாய்
இக்கணம் -
அஃது உன் பிரிவுச் செய்தி
கேட்ட கணம்-
உனது சினம் கூட தராது
வலி பிறர்க்கு-
தினம் வலி தந்து விட்டதையா
உன் மரணம் எமக்கு-

அமரர் ந.தனபாலசிங்கம் அவர்கள் சிவப்பதப்பேறு அடைந்த செய்தியினைக் கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவினால் வேதனையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும். (102748)

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
வேலணை.

## நுளம்புத் தொல்லை

குருநகர்.செப்.2

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து குருநகர்ப் பகுதியில் நுளம்புகள் பெருகியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் நுளம்புகளின் தாக்கம் காரணமாக தம்மால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாமலுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் உள்ள கழிவுநீர் செல்லும் வடிகால்கள் யாழ்.மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் கிரமமாக சுத்திகரிப்புச் செய்யப்படுகின்ற போதிலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

(ஒ-51)

## யாழ்.வலய அதிபர்களுக்கு

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களில் 'கேற்வே' நிறுவனத்தில் E-Citizen பயிற்சிநெறியைப் பெற்றுக்கொள்ளாத அதிபர்களை இன்று காலை 8.30 மணிக்கு 'கேற்வே' நிறுவனத்துக்கு வருகை தருமாறு யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஒ-15)


**நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...**

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், காஸ்ரிங் பேசின்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

**ஸ்ரார் செராமிக்ஸ்**
**இல.05, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.** தொ.பே: 0215672061, 077 7578277.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1221 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு — 32 39 45 47

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,729 | 20/- | 4,414,580/- |
| 2 இலக்கங்கள் | 20,250 | 40/- | 810,000/- |
| 1 இல. + லக்கினம் | 20,016 | 60/- | 1,200,960/- |
| 2 இல. + லக்கினம் | 1,897 | 200/- | 379,400/- |
| 3 இலக்கங்கள் | 541 | 1000/- | 541,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,435,940/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 591 | | 594,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 264,076 | | 9,029,940/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,985,950/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

03 11 34 37

ஜக்பொட் பரிசு ரூபா. 1,500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 588 | 500/- | 294,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 591 | | 594,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,600,000/-

# மரண அறிவித்தல்

## நாகநாதர் நவரட்ணம்



தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 2 ஆவது ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் நவரட்ணம் நேற்றுமுன்தினம் (31.08.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - தங்கம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகரட்ணம் ஆகியோரின் சகோதரரும் இராசம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரன் (ஜேர்மனி), நாகேஸ்வரி(பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (சங்கத்தானை), லோகேஸ்வரன்(பிரான்ஸ்), இராஜேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதாசன் (பிரான்ஸ்), அகிலஜெகதீஸ்வரன்(சங்கத்தானை), ஸ்ரீதரன் (லண்டன்), கருணாகரன்(பிரான்ஸ்), கிரிஜாசக்தி (ஜேர்மனி), பார்வின்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பிரபா(ஜேர்மனி), ஜனனி(ஜேர்மனி), கீர்த்தனா(பிரான்ஸ்), கார்த்திகா, தார்மிகா, அபிசாந், சாரங்கன், கார்த்திகன்(சங்கத்தானை), அவ்றோஸ் (பிரான்ஸ்), அம்ஜத்(பிரான்ஸ்), இம்ரான் (பிரான்ஸ்), அர்ச்சனா(லண்டன்), அபிசேக்(லண்டன்), கஜனி (பிரான்ஸ்), ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்லை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன்:
அகிலஜெகதீஸ்வரன்(ஜெயா),
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

2ஆவது ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
தொ.பே. 0776916103

(சி/570514)


### தேவை

மட்டக்களப்பில் அமைந்துள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு, பானை, சட்டி செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஒருவர் தேவை. தங்குமிட வசதி உண்டு.
தொடர்புகளுக்கு: 0715851471, 0652224105

### விற்பனை

நல்ல நிலையில் உள்ள MF135 உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
0774142809/0777205533


### காணி விற்பனைக்கு

புலோலி தெற்கு, புலோலியில் மந்திகை ஊடாக வல்லிபுரக்குறிச்சி நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் 7¾ பரப்புக் காணியில் அமைந்த சிறிய வீடு (மலசல கூடம், தண்ணீர் வசதியுண்டு) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775002162

### வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இலக்கம் 330 இல் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்.
0774709890, 0772900033

### டூல் பொக்ஸ்



**ஜெனரல் இகியுமென்ட்ஸ் லிமிட்டட்**
400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 2345046, 2327264, 2343823 2430799 தொலைநகல்: 2434637


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய பீடத்தைக் கிளிநொச்சியில் இயக்க கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்

## நிருபமா ராவிடம் பீடாதிபதி கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்குக் கிளிநொச்சியில் கட்டடங்களைக் கட்டித்தரவேண்டும் என்று கோரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன்.

இலங்கைக்கு மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். யாழ்.பொது நூலகத்தின் கேட்போர்கூடத்தில் அரசியல்கட்சி, திணைக்களங்கள் பல்கலைக்கழகம், சமயப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட விவசாயபீடப் பீடாதிபதி இந்திய அரசு யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு கிளிநொச்சியில் உள்ள காணியில் கட்டடங்களை அமைத்துத்தர நடவடிக்கை எடுத்துத்தரவேண்டும் என்று கோரி மகஜரைக் கையளித்தார்.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ள விடயங்



களாவன:

கிளிநொச்சியில் இயங்கிவந்த யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் யுத்தம் காரணமாக 1996ஆம் ஆண்டு தொடக்கம் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றது. தற்போது நாட்டில் யுத்தமற்ற சூழ்நிலை ஒன்று நிலவுகின்றது. எனவே மீண்டும் விவசாய பீடத்தை அங்கு இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய பீடத்திற்குச் சொந்தமாக அறிவியல் நகரில் 400 ஏக்கர் காணி உண்டு. அங்கு கட்டடங்களை அமைப்பதற்குப் பெருந்தொகைப் பணம் தேவை. எனவே அதனை இந்திய அரசு பொறுப்பேற்று விவசாய பீடத்திற்குக் கட்டடங்களை அமைத்துத்தரவேண்டும் - என்றுள்ளது.

இவரின் கோரிக்கைகளையும் மகஜரையும் ஏற்றுக்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலர் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும் இந்தியா எப்போதும் பக்கபலமாக இருக்கும். இக்கோரிக்கைகள் குறித்து சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (த-6-15)

## போசணை வழிகாட்டல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,செப்.2

நல்லூர் உற்சவ காலப்பகுதியில் ஆரோக்கிய வாழ்விற்கான போசணை வழிகாட்டல் நிகழ்ச்சி யாழ்ப்பாண போசணைச் சமூகத்தினரால் 'யுனிசெவ்' அனுசரணையுடன் நடத்தப்பட்டு வருகின்றது. நல்லூர் பின் வீதியிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு முன்புறமாக இது நடைபெற்று வருகின்றது.

இங்கு போசாக்கு விழிப்புணர்வு தொடர்பான விளக்கப்படங்களுடன் கூடிய ஆலோசனைகள், இலவச மருத்துவப் பரிசோதனைகள், போசாக்கு தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், போசாக்கு சம்பந்தமான வீடியோ காட்சிகள் என்பன இடம்பெற்று வருகின்றன.

இவை அனைத்தும் யாழ்.மருத்துவபீட மாணவர்களால் இலவசமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே ஆர்வமுள்ள அனைத்துப் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

## பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்.மாவட்ட செயலகத்தில் வடமாகாணத்திற்கான 'நன்வமு கம்மன' என்ற தலைப்பிலான செயற்றிட்ட கலந்துரையாடல் இலங்கைப் பெண்கள் பணியகப் பணிப்பாளர் பிரதீபா சேரசிங்க தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் உள சமுகப் பொருளாதார பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் முகம் கொடுப்பதுக்குமான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்காக நடத்தப்பட்ட இக் கலந்துரையாடலை மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆரம்பித்து வைத்தார். பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்போர் இக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் அந்த அந்தப் பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட, போதிய பொருளாதார வளமற்ற பெண்கள், சுயதொழில் செய்வதற்கும், கைத்தொழில் நிலையங்களை நிறுவி குழுவாகச் செயற்படுவதற்கும் உரிய திட்டங்கள் பற்றி இதில் ஆராயப்பட்டது. பிரதேச செயலகங்களினூடாகச் கிராமங்களை மேம்படுத்துவதற்காக மகளிருக்கு கைத்தொழில் பயிற்சிகளையும், மூலதன உதவிகளையும், ஊக்குவிப்பையும் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது என இணைப்பாளர் தெரிவித்தார். (எ-310-317)

## யாழ்ப்பாணம் - தாளையடி மினிபஸ் சேவை மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்ப்பாணத்துக்கும் வடமராட்சி கிழக்கு தாளையடிக்குமிடையிலான - தனியார் மினிபஸ் சேவை சுமார் 15 வருடங்களுக்குப் பின் மீண்டும் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவை சங்கத்தின் தலைவர் பொ.கங்காதரன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியான தாளையடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பஸ்சேவை சுமார் 15 வருடங்களாகத் தடைப்பட்டிருந்தது.

தற்போது சுமுகமானநிலை தோன்றியுள்ள வேளையில் தாளையடிப் பகுதியில் மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடியேறி வருகின்றனர். இந்நிலையில் அங்கு மீள் குடியேறும் பொது மக்களின் நன்மை கருதி அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணத்துக்கும் தாளையடிக்குமிடையிலான மினிபஸ் சேவையினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-9)




## யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு மீன்பிடி 10ஆயிரம் மெற்றிக்தொன் மட்டுமே

### அது 1 லட்சமாக இருந்திருக்க வேண்டும் என்கிறார் உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.2

இந்த ஆண்டில் ஒரு லட்சம் மெற்றிக் தொன்னாக யாழ்ப்பாணத்தில் மீன்பிடி இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று 10 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவே அது உள்ளது.

இவ்வாறு தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிக் கல்லூரி உதவிப் பணிப்பாளர் ஈ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிக் கல்லூரியினால் கடலக விஞ்ஞானமும் பாதுகாப்பும் வெளியிணைப்பு இயந்திர திருத்தமும் பராமரிப்பும் ஆகிய பயிற்சி நெறிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தம் காரணமாக எமது மீனவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். 1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்த மீன்பிடி 2010ஆம் ஆண்டு 10 ஆயிரம் மெற்றிக் தொன்னாகக் குறைவடைந்துள்ளது. உண்மையில் ஒரு லட்சம் மெற்றிக்தொன் மீன்பிடியை யாழ்.மீனவர் இந்த ஆண்டில் எட்டியிருக்க வேண்டும்.

நாங்கள் அந்த இலக்கினை அடைவதற்கு முன்னேற வேண்டும். எமது கடற்றொழிலாளர்களுக்குப் பயிற்சி தேவை. படித்தவர்களும் கடலில் இறங்க வேண்டும். சாதாரண படகுகள் பெரிய படகுகளாக - பல நாள் தங்கியிருந்து தொழில்புரியக் கூடிய வசதிகளைக் கொண்டதாக மாற்றப்பட வேண்டும் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க வேண்டும்.

எல்லா வகையான புதிய உபகரணங்களையும் நாங்கள் வைத்திருக்கின்றோம். பயிற்சியின் பின்னர் அந்த உபகரணங்களை உங்களுக்கு வழங்குவோம். முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார் வரையில் வெளிக்கள்ப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 75 பயிற்சி நிகழ்ச்சிகளை நாம் நடத்தவுள்ளோம். இதற்காக 5 மில்லியன் ரூபா முதல் 10 மில்லியன் ரூபா வரை தேவைப்படுகின்றது. அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து இந்த நிதிகளைப் பெறவுள்ளோம்.

யாழ்.மாவட்ட அரச அதிபரின் சிபார்சினால் 'ஜெய்க்கா' நிறுவனம் மீன்பிடித் தொழில் பயிற்சிகளை வழங்கும் பாடசாலையை ஆரம்பிப்பதற்காக ஆரம்ப கட்டமாக 20 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது - என்றார். (த-14-15)



யாழ்ப்பாண கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியினால் புதிய பயிற்சிநெறி ஆரம்பிக்கும் நிகழ்வு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்கள் மேடையில் நிற்பதை முதலவது படத்திலும், 'ஜெய்க்கா' நிறுவனத்தின் பிரதிநிதி டோக்கியோ கொன்யோ மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், பேராசிரியர் ரஞ்சித் [illegible] படத்திலும், பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: உமா, டிலீப், ஹரிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிகளால் வரும் வாகன விபத்துக்களை தவிர்க்கும் வழி என்ன?

இங்கு இப்போது வீட்டுக்கு வீடு என்றில்லை ஆளுக்குஆள் கைத்தொலைபேசி, அது இல்லாத ஆளே கிடையாது எனலாம்.

ஒரு காலத்தில் வெளிநாட்டில் உள்ளவர்களுடன் பேசுவதற்கு யாழ்ப்பாணத்தவர்கள் பலத்த ஏற்பாடுகளை செய்து கொண்டு கொழும்புக்குச் சென்று சில நாள்கள் தங்கிவிட்டு திரும்பி வந்தார்கள்.

பின்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக தொலைபேசி நிலையங்கள் ஏற்பட்டு அங்கும் மக்கள் மணிக்கணக்காக ஏன் நாள் கணக்காகக் காத்திருந்து வெளிநாட்டிலுள்ள உறவினர்களுடன் தொடர்பு கொண்டு கதைத்துவிட்டு வீடு திரும்பினார்கள்.

இந்தத் தொலைபேசி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அவைகளின் உரிமையாளர்கள் என்னென்னபாடுபட்டார்கள், எவர் எவரை 'தாஜா' பண்ணினார்கள். எவர் எவருக்கு கையூற்று வழங்கினார்கள் என்பதெல்லாம் பெரிய கதை.

சிலருக்கு கையடக்கத் தொலை பேசியை இயக்க தெரிந்தாலும் முறையாக பேசத் தெரியாது.

ஹலோ என்பதற்கு பதிலாக 'கலோ, கலோ' என்கிறார்கள். தொடர்பு கொள்பவர் முதலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னர் தாம் யாருடன் பேசவிரும்புகிறார் என்பதைக் கூறுவதே முறை- அதுவே நாகரிகம்.

ஆனால் பலர் தொடர்பு எண்ணை சுழற்றிய கையோடு அடுத்த முனையில் 'ஹலோ' என்ற குரல் கேட்டதும் ''யார் பேசுறது'' என்று கேட்டு அவருக்கு எரிச்சல் மூட்டுகிறார்கள். இன்னும் சிலர் மறுமுனையில் தமக்கு வேண்டியவரின் குரல் கேளாவிட்டால் பேசாமல் துண்டித்துவிடுகிறார்கள். வேறு சிலர் மறுமுனையில் இருப்பவர் தான் யார் என்பதை கட்டாயம் அறிந்து இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிகிறது. அடிக்கடி தொடர்பு கொள்பவர்கள் இவ்வாறு எதிர்பார்ப்பது சரியாக இருக்கலாம். எல்லோருமே

## பொலிஸாரின் கவனம் இந்தப் பக்கமும் திரும்பட்டும்

எல்லாரையுமே இவ்வாறு எதிர்பார்க்கவியலாது.

இப்பொழுது தொலைபேசியில் பேசுபவரின் முகத்தை பார்த்தே பேச வசதி வந்துவிட்டது. வெகுவிரைவில் சகலரிடமும் இந்த வசதியுள்ள கைத்தொலைபேசிகள் வந்துவிடலாம். அப்படியானால் யார் பேசுறது என்ற கேள்விக்கே இடமில்லாமல் போய்விடும்.

தொலைபேசித் தொடர்புகளில் என்ன தான் முன்னேற்றம் வந்தாலும் வாகனங்களில் பயணம் செய்துகொண்டே தொலைபேசி அழைப்புக்களை செய்பவர்கள் திருந்துவார்களா என்பது தெரியவில்லை.



தலைக்கவசத்தில் தொலைபேசி சைக்கிள்களில், மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்து கொண்டே தொலைபேசிகளில் பேசுவதைத் தவிர்க்கும் படி பொலிஸார் பல தடவைகளிலும் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளார்கள். ஆனால் எவரும் இதனை செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

ஒரு கையால் சைக்கிளைப் பிடித்துக் கொண்டு மறுகையால் தொலைபேசியைக் காதில் வைத்துப் பிடித்துக் கொண்டு கலகலப்பாகப் பேசியபடி வீதிகளில் இளைஞர்கள் மட்டுமல்ல இளம் பெண்களும் கூட சைக்கிள் ஓட்டுவதை சர்வ சாதாரணமாக வீதிகளில் காண்கின்றோம்.

யாழ்ப்பாண வீதிகளில் இப்பொழுதெல்லாம் வாகனங்கள் அதிகரித்துவிட்ட நிலையில் பாரிய வாகனங்கள் வந்து செல்லும் நிலைமையில் தொலைபேசியில் பேசியபடி வாகனம் ஓட்டுவதனால் விபத்துக்களை அதிகரிக்க ஏதுவாகின்றது.

மிதிவண்டிகளில் செல்பவர்கள் மட்டுமல்ல மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும் சர்வசாதாரணமாக இதனைச் செய்கிறார்கள்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் (ஹெல்மட்) தலைக்கவசத்தில் கையடக்கத் தொலைபேசியை வைத்துக்கொண்டு பேசியபடியே பயணம் செய்கிறார்கள். பேச்சில் கவனம் செல்லும்போது வீதியில் வாகனங்கள் வருவதை மறந்து மோதிக்கொள்ளும் ஆபத்து உண்டு.

இதனால் ஏற்படும் உயிர் ஆபத்துக்களை தவிர்க்க இவ்வாறு தொலைபேசிகளை கண்மூடித்தனமாக பாவிக்கும் பழக்கத்தை தவிர்க்க வேண்டும்.

வாகனத்தில் செல்லும்போது தொலைபேசி இயக்கத்தை நிறுத்திவிட்டு பயணம் செய்வதே உத்தமம். முக்கியமான தொடர்பு ஒன்றுவரும் என்றால் அது வந்ததை அறிந்ததும் ஓரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு பேசியபின் மீண்டும் பயணத்தைத் தொடரவேண்டும். இதுதான் நாகரிகம்.

இதுவா நாகரீகம்?

இப்பொழுது ஆளுக்குஆள் கையடகத் தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடிய வசதி ஏற்பட்டிருப்பது நம்மவர்கள் நாகரிக வளர்ச்சியில் முன்னேறியிருப்பதை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ளலாமா?

பெரும்பாலானவர்கள் தம்மிடம் கையடக்கத் தொலைபேசி இருப்பதைக் காட்டிக்கொள்வதற்காக முயற்சி எடுப்பதைக் கூடப் பார்க்கலாம்.

இப்பொழுது போக்குவரத்துப் பொலிஸார் சில பல நடவடிக்கைகளை எடுப்பதாக தெரியவருகிறது. அவர்களின் பார்வை இம்மாதிரி வாகனங்களில் செல்கையில் தொலைபேசியில் பேசிக்கொண்டு செல்வோர் மீதும் திரும்ப வேண்டும். இதன் மூலம் பல விபத்துக்களை தவிர்க்கலாம். உயிர் ஆபத்துக்களையும் தடுக்கலாம்.

**- ரம்யன் -**

***

---

# ஜனாதிபதியின் குடும்ப ஆட்சியை பலப்படுத்தவே அரசமைப்புத் திருத்தம்

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு ஐ.தே.க சவால்

கொழும்பு, செப்.2

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு ஜனாதிபதியின் பதவிக்கால எண்ணிக்கையை நீடிக்கும்அரசமைப்புத் திருத்தத்தை ஐ.தே. கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. இந்த அர சமைப்புத் திருத்தங்கள் குடும்ப ஆட்சியைப் பலப்படுத்தவே கொண்டுவரப்பட்டுள்ளன.

ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் இவ்வாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த அரசமைப்புத் திருத்தங்களை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசு முன்வருமா? அல்லது மனச்சாட்சியின்படி அமைச்சர்கள் வாக்களிக்க வாய்ப்பளிக்க முடியுமா? அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் மனச்சாட்சி இத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுமா?

அரசமைப்புத் திருத்தங்களில் இரு விடயங்களை ஐ.தே.கட்சி கடுமையாக எதிர் க்கின்றது. ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்கும் திருத்தமும், சுயாதீனஆணைக் குழு தொடர்பான திருத்தமும் வெறும் கண்துடைப்பாகும்.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் படி அரசமைப்புக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 10ஆக இருந்தது. இது இப்போது ஐந்தாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அரசமைப்புக்குழு எவ்வித அதிகாரமும் அற்ற தலையாட்டும் குழுவாகவே இருக்கும்.

பொலிஸ் ஆணைக்குழுவும் அரச சேவைக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த சுயாதீன ஆணைக் குழுக்கள் சுயாதீனமற்ற வகையில் செயற்படும் வாய்ப்பு உள்ளது. அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களை நியமித்தல், பதவி உயர்வு போன்ற இன்னோரன்ன விடயங்கள் இதன்மூலம் சுயாதீனமாக நடைபெற வாய்ப்பு இல்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்ற ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. ஜனாதிபதி முறைக்குப் பதிலாக நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் பிரதமர் முறையே தேவை என நாம் வலி யுறுத்தி இருந்தோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதியை மீறிவிட் டார். ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வெளியிட்ட மஹிந்தசிந் தனை முன்னோக்கு என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்கள் விரும்பும் வகையிலான அரசமைப்பை முன்னெடுப்போம் என அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

மக்கள் எரியும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலையில் அவற்றைத் தீர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும் ஜனாதிபதி தனது இரண்டாவது ஆட்சிக் காலத்துக்கு சத்தியப்பிரமாணம் செய்யாத நிலையிலும் அவசர அவசரமாக இந்த அரசமைப்புத் திருத்தங்களை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுப்பது ஏன்? அரச அமைச்சர்கள், எம்.பிக்கள் மீது ஜனாதிபதி சந்தேகம் கொண்டுள்ளாரா? எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.(ஒ-சி)


**திருமணப் பொன் விழாக்காணும் தம்பதியரை வாழ்த்துகின்றோம்**

31.08.2010 பக்கம் 12ல் பிரசுரமாகியுள்ள சு.க.யோகதாசன் மேரி தீற்றம்மா என்னும் பெயரினை S.P.யோகதாசன் மேரி தீற்றம்மா என வாசிக்கவும்.



**2 ஆம் வருட இதய நிழல்கள்**



சந்ததியாக 25.07.1965

சரித்திரமாக 23.09.2008

அமரர் **பொன்னையா குணசேகரம்**

(பாஸ்கர் - வர்த்தகர்) திதி: 02.09.2010

ஓடும் வருடங்கள் இரண்டு ஆனதோ - உம்மை
தேடிடும் கண்களில் சுண்டிடும் நீர்த்துளிகள்
வாடிய மனங்களில் அழியாத உம் உருவம்
சுமக்கின்றோம் நாம் நீர் சுமந்த கனவுகளை
விதியை வெல்ல மதியால் முடியுமோ
மனித சதியை வெல்ல விதியால் முடியுமோ
மாலையும் கழுத்துமாய் காண நினைத்தீர் - எம்மை
பாடையும் பறைமேளமுமாய் அடைந்தீர் வின்னை
மீண்டும் வந்து பிறந்திடும் எம்மிடம் - அதுவரை
மீளாத் துயில் கொள்ளும் மண்ணிடம்

உம் பிரிவால் துடிக்கும்:

செல்வமகால்

செல்வநகர், நாவற்குழி [illegible]



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



ஆசிரியராய், அதிபராய், கோட்டக் கல்விப் பணிப்பாளராய், வலயக்கல்விப் பணிப்பாளராய் உயர்ந்து வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராய் எமது மக்களின் கல்வி சிறக்கப்பணி தொடரும்

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்

திரு. **ப.விக்னேஸ்வரன்**

அவர்களின் வலுவும் ஆற்றலும் பெருக வாழ்த்துகின்றோம்.

கண்ணெனும் கல்வித் தேவைக்
கடமைகள் சிறக்க என்றும்
எண்ணம் போல் இனித்த சேவைக்(கு)
இலக்கணம் ஆன வள்ளல்
வண்ணமாய் உயர்ந்து கல்வி
வளங்களால் எமது மண்ணில்
பண்பொடு உயர்ந்தீர் உங்கள்
பணிசிறந் தொளிர வாழ்த்தும்....

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்

கோட்டக்கல்வி அலுவலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு மூலம் வடக்கு, கிழக்கு மக்களை அரசு அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் விமல் வீரவன்ஸ



யாழ்ப்பாணம்,செப்.02

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதி மக்களின் வாழ்வை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொறியியல், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ஸ.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்த அமைச்சர், யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த முப்பது வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகள் அபிவிருத்தி அடைந்த போதும் அந்தச் சந்தர்ப்பம் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்கவில்லை.

எனினும் கடந்த கால யுத்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், படையினரும் இணைந்து முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மக்களின் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்துள்ளனர்.

எனவே இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதி மக்களின் பழக்க வழக்கம் மற்றும் கலாசாரம் என்பன பாதிக்கப்படாதவாறு அவற்றிற்கு ஏற்ப இப்பகுதிகளை அரசு அபிவிருத்தி செய்யவுள்ளது.

இதன் பிரகாரம் இங்கு புதிய நெடுஞ்சாலைகள், மின்சாரவசதிகள் மற்றும் குடிதண்ணீர் திட்டங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டு வருவதோடு விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களும் அதிகரிக்கப்படுகின்றன.

உங்களின் முக்கிய பிரச்சினையான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குப் பலதிட்டங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் செயற்படுத்தி வருகிறது.

எனினும் அதிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். அவற்றை நேரில் கண்டறிவதற்காகவே நான் இன்று இங்கு வருகை தந்துள்ளேன்.

தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே எமக்குக் கிடைத்த இச்சக்தி வாய்ந்த தலைமைத்துவத்தைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லவுள்ளோம்.

இந்த நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து விடுவித்தது போல நாட்டில் அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்- என்றார். (த-16)

# மின்தடை பற்றிய முறைப்பாடுகளை தெரிவிக்கத் தொலைபேசி இலக்கங்கள்

யாழ்ப்பாணம்,செப். 02

அண்மைக்காலமாக அடிக்கடி ஏற்படும் மின்சாரத்தடைக்கான காரணங்களையும், அது தொடர்பான தீர்வு நடவடிக்கைகளையும் அறிந்து கொள்வதற்கு மின்சார சபையின் பின்வரும் பிராந்தியத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மின்சார சபையின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என். முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி இலக்கங்கள் வருமாறு:

சாவகச்சேரி -021 227 0040, பருத்தித்துறை- 021 226 3257, சுன்னாகம்- 021 224 0301, வலி.தென்மேற்கு- 021 321 2565, வேலணை- 021 321 3483, யாழ். மாநகரசபை -021 222 2609, யாழ். புறநகர் பகுதி- 021 222 2498-

இவ் பிராந்திய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் 1987 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (த-314-318)




# ரம்ழான் சிந்தனை

இது நோன்பு மாதம் என்பதால் மிஸ்கீன்கள் (ஏழைகள்) நமது வீடுகளுக்குத் தவறாமல் வரும் வாய்ப்புகளுண்டு. அப்படி வரும் மிஸ்கீன்கள் மனதில் இம்மாதத்தில் தங்களுக்கு நிறைய ஸகாற் தர்மங்கள் கிடைக்கும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். இந்த நம்பிக்கைகள் பல வீடுகளில் பொய்ப்பித்துவிடும். வீடுதேடி வரும் ஏழைகள் மீது பல குடும்பப் பெண்கள் எரிந்து விழுவார்கள். நாம் கொடுக்கும் தர்மங்களால் நமது கடன்மேலும் ஏறிப் போய்விடாது என்பதையும் இம்மாதம் நன்மையை வாரி வழங்கும் மாதம் என்பதையும் இறைவன் நமக்குச்சொல்லி வைத்துள்ளான். எனவே கொஞ்சமும் மனம் கலங்காது உள்ளதை அள்ளிக்கொடுக்க வேண்டும். அதன் பலனை நாம் மறுமை நாளில் நூறுமடங்கு பெறுவோம் என்பது இறை வாக்காகும். - எம்.ஏ. காதர்-

# தொடர்பாடல் தொழில்நுட்ப கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,செப். 02

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கான ஆங்கிலமொழி மூலம் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (த-15)

# வாக்காளர் இடாப்பு மீளாய்வு; பதியாதோருக்கு டிசெம்பரில் வாய்ப்பு

யாழ்ப்பாணம்,செப். 02

2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் நிறைவுபெற்று கிராம உத்தியோகத்தர்கள் யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத்திடம் கையளித்து வருகின்றனர்.

வாக்காளர் இடாப்பு மீளாய்வில் தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறியவர்கள், '' உரிமை கோரிக்கை'' சட்டத்தின் கீழ் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று யாழ். தேர்தல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக கிராமசேவையாளர் பிரிவு ஊடாக நடைபெற்றன.

தற்போது மீளாய்வுப் பணிகள் யாவும் நிறைவுபெற்று கடந்த ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதல் கிராம உத்தியோகத்தர்கள் யாழ். தேர்தல் திணைக்களத்திற்கு திங்கள், புதன் தவிர்ந்த ஏனைய நாள்களில் வருகை தந்து விவரங்களைக் கையளித்து வருகின்றனர்.

இந்த வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறியவர்களுக்குப் பெரும்பாலும் எதிர்வரும் டிசெம்பர் மாத முற்பகுதியில் ' உரிமை கோரிக்கை' அடிப்படையில் மீள்பதிவுகள் மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியச் செல்லும் பெண்களின் பாதுகாப்புக்கு நானே முழுப்பொறுப்பு!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி

யாழ்ப்பாணம்,செப். 02

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்காகத் தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களின் பாதுகாப்புக்கு தாம் பொறுப்பேற்பதாக உறுதிமொழி வழங்கினார் பாரம்பரிய சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சரின் அனுசரணையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தென்னிலங்கை ஆடைத்தொழிற்சாலை நிறுவனங்களான 'டைமெக்ஸ்', 'பெர்கஸம் காமென்ஸ்' ஆகியன இளைஞர், யுவதிகளுக்கு கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு உறுதி வழங்கினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:

தென்னிலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்காகச் செல்லும் யாழ்ப்பாணப் பெண்களுக்குப் பொறுப்பாக நான் இருப்பேன். அங்கு அவர்களுக்கு ஏதாவது விபரீதங்கள் நடைபெற்றால் உடனடிச் சட்ட நடவடிக்கை எடுப்பேன். எனினும் அவ்வாறான சம்பவங்கள் எதுவும் நடைபெறமாட்டாது என்று உறுதியாகக் கூறினார்.

இக்கருத்தரங்கில் பல இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (த-6-315-313)

# கல்லுண்டாய் பிரதேசத்தில் கழிவுகளைப் போட வேண்டாம்


## பிரதேசசபைச் செயலாளர் வேண்டுகோள்

சண்டிலிப்பாய்,செப். 02

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கல்லுண்டாய் பகுதியில், அயற் பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை வாகனங்களில் ஏற்றிவந்து கொட்டுவதினால் அப்பகுதியில் சுகாதாதரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் இடநெருக்கடியும் போக்குவரத்திற்கு இடையூறும் தோன்றியுள்ளன. எனவே பொதுமக்களின் நன்மை கருதி, இப்பகுதியில் திண்மக் கழிவுகளைக் கொட்டுவதைத் தவிர்க்குமாறு அயலில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலுக்கமைய வீடுகளில் தேங்கிக் கிடக்கும் மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய திண்மக் கழிவுகளை வீடு வீடாகச் சேகரித்து அப்புறப்படுத்துவதில் பிரதேசசபைகள், நகரசபைகள், மாந+கர சபை ஈடுபட்டு வருகின்றன.

இதற்கமைய யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை, வலி. தெற்குப் பிரதேச சபை ஆகியன தமது பகுதிகளில் சேகரிக்கும் திண்மக் கழிவுகளை வாகனங்களில் ஏற்றிச் சென்று வலி. மேற்குப் பிரதேசத்தில் கல்லுண்டாய் பகுதியில் கொட்டுவதினால் அப்பிரதேசம் மாசடைவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. எனவே மக்களின் நலன் கருதி திண்மக் கழிவுகளை இப்பகுதியில் கொட்ட வேண்டாம் எனச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-115)



மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா ஐந்து வருடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு றோய் பேடினன்ட், கிளி . முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு யாவிஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றுவதை முதற்படத்திலும், பக்தர்கள் ஆலய முன்றலில் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும், புனித செபஸ்தியாருடைய திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப்படுவதை மூன்றாவது படத்திலும், சேதமடைந்த ஆலயத்தை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

25

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.11.1993

* இலங்கை விமானப்படையின் ''சுப்ப சொனிக்'' விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகி கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் முற்றுமுழுதாகச் சேதம் எனத் தெரிவிப்பு.
* தென்னிலங்கையில், குறிப்பாக கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சநிலை ஏற்பட்டதை அடுத்து பொது மக்களை அமைதிகாக்கும்படி ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கோரிக்கை.

17.11.1993

* பூநக்ரித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 187 படையினரின் சடலங்களின் அஸ்தி இன்று கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிப்பு.
* பூநகரித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவரும் நான்கு சிப்பாய்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

18.11.1993

* கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மற்றும் வவுனியாவிலும் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தேர்தல்களை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவித்ததாக பி.பி.ஸி வானொலி அறிவிப்பு.
* கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை தாம் பகிஷ்கரிக்கப்போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சி ஆகியன அறிவிப்பு.

19.11.1993

* வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு விரும்பவில்லை அதற்கான திறனும் அரசிடம் இல்லை இதனாலேயே யுத்தநிலை நீடிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.
* பூநகரி இராணுவ - கடற்படைக் கூட்டுத் தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியழித்தமை தொடர்பான சகல விவரங்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிப்பு.

20.11.1993

* வழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஆஸ்பத்திரிகள் போன்ற பொதுச்சேவைநிலையங்கள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை திட்டமிட்டு நடத்தும் அரசாங்கத்தின் செயற்பாடு பயங்கரவாதச் செயற்பாடே என யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வமதத் தலைவர்கள் கண்டனம் தெரிவிப்பு.
* பூநகரித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளுடன் இஸ்ரேலியர்களும் சேர்ந்து போரிட்டார்கள் என குறிப்பிட்ட தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்றுவரும் சிப்பாய்கள் சிலர் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

21.11.1993

* 11 நாள்களுக்கு முன்னர் இடம் பெற்ற பூநகரித் தாக்குதல்களின்போது மாண்ட படையினரின் சரியான எண்ணிக்கையை வெளியிட அரசு தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிப்பு.
* 120 மி.மீ. பீரங்கிகளை இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருப்பதால் அப்பீரங்கிகளால் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானங்களை தாக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என ''ராவய'' பத்திரிகை தெரிவிப்பு.

22.11.1993

* பூநகரித் தாக்குதலினால் படையினருக்கு ஏற்பட்ட போர் அழிவு காரணமாக அவர்களது மன உறுதி குன்றிவிட்டது என இராணுவ விமர்சகர்கள் தெரிவிப்பதாக பி.பி.ஸி. வானொலி அறிவிப்பு.
* நாட்டில் பாரிய பிரச்சினையான பயங்கரவாதத்துக்கு ஒரே இரவில் தீர்வு கண்டுவிட முடியாது என ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு.

23.11.1993

* பூநகரி இராணுவத் தள தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெற்ற சண்டையில் இலங்கை விமானப்படையின் போர் விமானமொன்று விடுதலைப் புலிகளின் ''ஹெவிட்ஸர்'' துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடும் சேதமுற்றதாகத் தெரிவிப்பு.
* பூநகரியில் ஏற்பட்ட படுதோல்வியை அடுத்து இராணுவ கட்டளைப்பீட கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிவிப்பு.

24.11.1993

* கிழக்கிலும் வவுனியாவிலும் எதிர்வரும் ஜனவரியில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிப்பு.
* அடுத்து பலாலி விமானத்த தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவதற்கு முன்னர் அரசாங்கம் ஏதாவது செய்தே ஆக வேண்டும் என ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை வலியுறுத்து.

25.11.1993

* ஏற்கனவே முன்னெச்சரிக்கையாக இருந்தும் இராணுவம் பூநகரித் தளத்தை கோட்டை விட்டது எப்படி என்பது வியப்பாக இருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பூநகரி தாக்குதல் குறித்து அறிக்கை சமர்ப்பித்தவேளையில் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உடன்பட்டால், அடுத்து வரும் தேர்தலில் நாம் தோற்றுவிடுவோம் என எண்ணுவது சரியான அணுகுமுறை ஆகாது என நாடாளுமன்றத்தில் உப சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவிப்பு.

26.11.1993

* தெற்கில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கலவரங்களில் ஈடுபடலாம் என்ற அச்சம் காரணமாக அரசு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.
* தற்போதைய இராணுவத் தளபதிகள் பலாலி முகாமில் இருந்தபடியே போரைக் கவனித்து வருகின்றனர். கொழும்பில் இருந்து கொண்டே அவர்கள் போரைப் பற்றிப் பேசுகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

27.11.1993

* கலவரம் வெடிக்கலாம் என்ற பீதியினால் கொழும்பில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பாலோர் நேற்று வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தனர் என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.
* அரசு இராணுவ வழியை இறுகப்பற்றி நின்றால் சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூடிவிடுவோம் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் தெரிவிப்பு.

28.11.1993

* தமிழீழ காவல்துறையால் பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 42 நபர்கள் தமிழீழ மாவீரர் நாளையொட்டி நேற்று விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.
* பூநகரி இராணுவ முகாம் தோல்வியைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வடபிராந்திய தளபதியான மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

29.11.1993

* ஜனாதிபதிக்கும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசி வைத்தியரத்தினவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு உருவாகியிருப்பதாகத் தெரிவிப்பு.

30.11.1993

* மலையகத் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் தொழிற்சங்கப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சர் தொண்டமான் தலைமையிலான தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசுக்கு ஒருமாத கால அவகாசம் வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.
* ஒரு நவீன இராணுவப் படைப் பிரிவுக்கு தேவையான ஆயுத தளபாடங்களை விடுதலைப் புலிகள் தற்போது போதிய அளவு தம் வசம் வைத்துள்ளதாக பூநகரித் தாக்குதலில் உயிர் தப்பிய இராணுவ பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அறிவிப்பு.

# புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, செப். 02

புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி, நேற்றுமுன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

பொலிஸ் தடுப்புக்காவலில் உள்ள, தமிழினி தொடர்பில் நேற்றுமுன்தினம் சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப் பித்துள்ளனர்.

அதில், தமிழினியை விசாரணை செய்தபோது அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்களை வெளியிட்டுள்ளார் என சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே நீதிவான் தடுப்பு காவல் உத்தரவை நீடித்தார். (சி)

## இரத்தினக்கல் விற்பனைக்கு

# மலேஷியா சென்ற 3 இலங்கையர்கள் கடத்தப்பட்டு ஒருவர் படுகொலை

கொழும்பு, செப்.02

இரத்தினக்கல் விற்பனைக்காக மலேஷியாவுக்குச் சென்ற மூன்று இலங்கையர்களைக் கடத்தி அவர்களில் ஒருவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் மலேஷியப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் மற்றும் இருவரையும் மலேஷியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொல்லப்பட்ட இலங்கையரின் சடலம் கைவிலங்கிடப்பட்டு நிர்வாணமான நிலையில் சந்தேக நபர்களில் ஒருவரான பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டுக்கு எதிரில் வாகனம் ஒன்றிலிருந்து மீட்கப் பட்டுள்ளது.

இலங்கையர் கால் முறிந்த நிலையில் வாகனத்தில் இருந்தார் எனவும், மேலும் ஒருவரைக் கடத்தல்காரர்கள் வீட்டில் மறைத்து வைத்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மலேஷியப் பொலிஸார் நடத்திய திடீர் தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கப்பப்பணம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டும் முயற்சிகளின் போது குறித்த இலங்கையர் சித்திரவதை செய்யப் பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று மலேஷியாவின் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ரோஸ்லி ஹசன் தெரிவித்தார்.

கைது செய்யப் பட்ட பொலிஸ் உத்தியோகத்தரே இந்தக் கடத்தல் மற்றும்படுகொலைச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி எனசந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. கடத்தப்பட்டவர்களிடம் இருந்து கப்பம் பெற்றுக் கொண்டதன் பின்னர் சடலத்தை வீசி எறிவதற்கு சந்தேக நபர்கள் முயற்சித்திருக்கலாம் என மலேஷியப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இலங்கையர்களின் ஆள் அடையாளங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எனினும், இவர்கள் அனைவரும் மூன்று நாள்களுக்கு முன்னர் மலேஷிய விமான நிலையம் ஒன்றின் ஊடாக மலேஷியாவுக்குள் பிரவேசித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட ஏனைய இரண்டு இலங்கையர்களும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)


MEDECINS SANS FRONTIERES

## விநியோக உதவியாளருக்கான வெற்றிடம்-கிளிநொச்சி

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எப்-ஹொலண்ட்) ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம். இந்நிறுவனமானது மக்களுக்கு அத்தியாவசியமான வேளைகளில் மனிதனால் அல்லது இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளினால் துன்புறுபவர்களுக்கும, ஆயுத வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவ உதவியை சாதி, சமய, இன மற்றும அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கி வருகின்றது. கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்கு தகுதியான ஒருவரை எதிர்பார்க்கின்றோம்.

விநியோக உதவியாளர் - கிளிநொச்சி (வெற்றிடம் 1)

பொறுப்புகள்:

- வரையறையற்ற வைத்தியர் - ஒல்லாந்தினதும் நன்கு சமுகமளிக்கப்பட்ட திட்டத்தினது அனைத்து நுட்ப கட்டமைப்புகளையும், வாகனங்கள், தொடர்பாடல்கள், சக்தி வழங்கல், மற்றும் பிற பௌதிக கட்டமைப்புகள் உள்ளடங்கலாக அனுகூலமான முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் செயற்திட்டத்தினை உறுதி செய்வதற்கு.
- இந்த திட்டத்தில் உள்ள அனைத்து வரையறையற்ற வைத்தியர்களின் காவலாளிகளையும், அனைத்து ஓட்டுநர்களையும் மேற்பார்வை செய்வதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும். சர்வதேச பணியாளர்களுடன் இணைந்து விநியோகித்தலையும் ஒழுங்குபடுத்தலையும் முகாமைத்துவம் செய்வதற்கு.
- அனைத்து வெளியக ஒப்பந்ததாரர்களையும் ஏதாவது புனர்வாழ்வு வேலைகளையும் மேற்பார்வை செய்வதற்கு.

தேவையானவைகள்:

அத்தியாவசியமானது:

- மற்றவர்களை பயிற்றுவிப்பதலும், வழிகாட்டுவதிலும், மேற்பார்வையிடுவதிலும், முகாமைத்துவத்திலும் செய்து காட்டக்கூடிய அனுபவம்.
- தொழில்நுட்ப விடயத்தில் நிருபிக்கக்கூடிய அனுபவம் உதாரணமாக, மகிழுந்து பொறிகள், மின்சாரம், தொடர்பாடல், பராமரிப்பு மற்றும் பொதுவான பழுதுபார்த்தல்கள்.
- ஒழுங்குபடுத்துவதற்கும் வேலைப்பழுவினை முன்னுரிமைப்படுத்துவதற்கும் பொருத்தமானபொழுது சுயமாக செயற்படுவதை பயன்படுத்துவதற்குமுடைய ஆற்றல்.
- ஆங்கிலத்தின் நல்ல கட்டளை(எழுதுதல் பேசுதல்), சரளமான தமிழ்.
- மென்நுண்ணிய நிகழ்ச்சிகளில் நல்ல அறிவுடன் கூடிய கணனியுடன் வேலை செய்த அனுபவம்(வேட், எக்சல்)
- கிளிநொச்சியில் வசித்தல் அல்லது வசிப்பதற்கு விரும்புதல்.

விரும்பத்தக்கது:

- வேறு ஒரு நிறுவனத்தில் இதே மாதிரியான வேலை முன் அனுபவம்.
- மேல் விவரிக்கப்பட்ட கள வேலையுடன் தொடர்புடைய முன்னைய கல்வி.
- சிங்களம் பேச இயலுதல்.

இந்த பதவியில் ஆர்வம் இருப்பின் தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுய விவரக்கோவையை 9.9.2010இற்கு முன்பாக அனுப்பவும்:

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து,
49/44A, கோயில் வீதி, குருமன்காடு,
வவுனியா.
தொலை நகல்: (94) 024 222 0381
அல்லது இணைய அஞ்சலுக்கு:
msfh-kilinochchi-pc@field.amsterdam.msf.org
தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு தொடர்புகொள்ளப்பட்டிருப்பர்.

(சி/570194)


## மரண அறிவித்தல்

### உமையாள் ஸ்ரீகாந்தன்

*(ஆசிரியை, யா/வட்டு மத்திய கல்லூரி)*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட உமையாள் ஸ்ரீகாந்தன் நேற்று (01.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமராசா மற்றும் மகேஸ்வரிதேவி தம்பதியரின் அன்பு மகளும் ஸ்ரீகாந்தனின் அன்பு மனைவியும் தீபிகாவின் அன்புத் தாயும் திருக்குமரனின் அன்புச் சகோதரியும் சிவஞானசுந்தரம், தங்கச்சியம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2010) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லிப்பழை வீதி,
வட்டு.கிழக்கு,
சித்தன்கேணி.

தகவல்: ஸ்ரீகாந்தன் (கணவர்)

(102742)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நுவரெலியா மாவட்டத்தில் தொடர் மழை
# கெனியன், லக்ஸபான வான்கதவுகள் திறப்பு
## ஆற்றங்கரையோர மக்களுக்கு எச்சரிக்கை

நுவரேலியா, செப். 02

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக பெருந்தோட்டத்துறை மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாகப் பெய்து வரும் தொடர்மழையால் மாவட்டத்திலுள்ள ஆறுகளிலும், ஓடைகளிலும் கால்வாய் களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காசல்ரீ மற்றும் மவுசாகலை ஆகிய நீர்த்தேக்கங்கள் முழுமையாக நிறைவதற்கு இன்னமும் இரண்டு அடி உயரமே உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கெனியன் மற்றும் லக்ஷபான போன்ற சிறிய நீர்த்தேக்கங்கள் நிரம்பி விடுவதால் அவற்றின் வான்கதவுகள் அடிக் கடி திறந்து மூடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஹட்டன் நகரில் முறையான வடிகால் வசதிகள் இன்மையால் வெள்ள நீர் பிரதான பாதையை ஊடறுத்துச் செல்கின் றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங் களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

**கெனியன் அவசர வான்கதவுகள் திறப்பு**

கெனியன் நீர்தேக்கத்தின் இரண்டு அவசர கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நுவரெலிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இரண்டு அங்குல அளவிற்கு இந்த அவசர வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

கெனியன் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் லக்சபான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரிப்பதுடன், களனி கங்கையின் நீர்மட்டமும் உயரும் என அந்த மையம் எச்சரித்துள்ளது.

**லக்ஸபான வான்கதவுகளும் திறப்பு**

தொடரும் மழையால் லக்ஸபான நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன என நீர்த்தேக்கத்தின் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. மூன்று வான்கதவுகளும் ஒரே சமயத்தில் திறக்கப்பட்டுள்ளதால் ஆற்றின் வழி யாகப் பாய்ந்தோடும் நீரின் அளவு அதிகரிக் கும் என்றும், மக்கள் ஆறுகளில் நீராடுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, ஆற்றங்கரைகளையண்டிய பகுதிகளிலுள்ள மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ளி)

# பன்விலையில் இஞ்சி உற்பத்தி

கண்டி, செப்.02

பன்விலைப் பகுதியில் இஞ்சி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இஞ்சி உற்பத்திக்குத் தேவையான காலநிலை சுவாத்தியம் இப்பகுதியில் காணப்படுவதால் இங்கு உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய அதிகாரிகள் மூலம் இதற்கான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதோடு விதை இஞ்சி பெற்றுக்கெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ளி)




# 18 வருடம் பெண் வேடத்திலிருந்த இளைஞன் பொலிஸில் கைதானபோது விவகாரம் அம்பலம்

கொழும்பு, செப்.02

18 வருடங்களாகப் பெண்வேடமிட்டு ஊரவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை வாரியப்பொல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞருக்கும் மற்றுமொரு இளைஞர் குழுவுக்குமிடையே ஏற்பட்ட அடிதடிச் சண்டை தொடர்பில் இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டபோதே அவரது வேடம் அம்பலமாகியுள்ளது.

இவர், தலைமயிரை நீளமாக வளர்த்துக் கொண்டு காதணிகளையும், பெண்கள் போன்று உடைகளையும் அணிந்து கொண்டு திரிந்ததற்கான காரணம் இதுவரை புலப்பட வில்லை. சட்டவைத்திய அதிகாரியின் பரிசோத னைக்கு உட்படுத்தப்படவுள்ள இவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# மாவனல்லையில் கொம்போஸ் உரம்

மாவனல்லை, செப்.02

மாவனல்லை நகரில் சேமிக்கப்படும் குப்பைகள் மூலம் கொம்போஸ் உரம் தயாரித்து விற்பதில் மாவனல்லை பிரதேசசபை நல்ல வருமானம் பெற்று வருகிறது.

நகரை அண்மித்துள்ள ரன்திவல என்ற இடத்தில் பிரஸ்தாப சபையின் கொம்போஸ் உரம் தயாரிக்கும் நிலையம் அமைந்துள்ளது.

இங்கு தயாரிக்கப்படும் உரவகைகள் பொதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் நன்மையடைவதுடன் பிரதேசசபையும் வருமானம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாவனல்லை நகரில் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களைத் தினமும் அதிகாலையிலேயே சேகரிப்பதில் பிரதேசசபை விசேட கவனம் செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# துங்கிந்த அருவியில் இறங்க வேண்டாம் பார்வையாளருக்கு பொலிஸார் எச்சரிக்கை

பதுளை, செப்.02

பதுளை துங்கிந்த நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருபவர்கள் ஆற்றில் இறங்குவதையும், அதில் நீராடுவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழையால் அருவியின் நீரோட்டம் அதிகரித்துள்ளது.

அதேவேளை, அருவியைப் பார்வையிட வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

எனவே, பார்வையாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ளி)

# கண்டியில் பெண்ணொருவரை ஏமாற்றினாராம் நடிகரை பொலிஸில் ஆஜராகுமாறு பணிப்புரை

திருமணம் செய்வார் என்க்கூறி பெண் ணொருவரை ஏமாற்றினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரசியலில் பிரவேசித் திருக்கும் நடிகர் ஒருவரை கண்டி கட்டுகஸ் தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகு மாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணிடம் ஒரு லட்சம் ரூபா ரொக் கப்பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ள நடிகர் அவரை ஏமாற்றிச்சென்றுவிட்டார் என்றும் - திருமணம் பற்றிக்கேட்டபோது நடிகர் அவரை அச்சுறுத்தியதுடன் பணத்தையும் தர மறுத்துவிட்டார் என்றும் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்தே குறித்த நடிகர் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# இராணுவ முகாம்களைச் சுற்றி கிழக்கில் மீண்டும் முட்கம்பி வேலிகள்

அம்பாறை, செப். 02

அமைதிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

முகாம்கள் துப்புரவு செய்யப்படுகின்றன. அத்துடன் முகாம்களைச் சுற்றி மீண்டும் முட்கம்பி வேலிகள் போடப்பட்டு வருகின்றன. மூடப்பட்டிருந்த வீதிச் சோதனைச் சாவடிகள் பல முக்கியமான இடங்களில் மீண்டும் செயற்படத்தொடங்கியுள்ளன.




அண்மையில் மட்டக்களப்பில் பொலிஸ் சார்ஜன்ட் இரண்டு பெண் பொலிஸாருடன் மட்டக்களப்பு ரயில் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவரிடமிருந்த ரி-56 ரகத் துப்பாக்கியை அந்த வழியால் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

அதேவேளை, மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இச்சம்பவங்களை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் மீளப் பலப்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிய வருகிறது.

வீதிச்சோதனைகள் நிறுத்தப்பட்டமையால் அம்பாறை மாவட்டத்திலிருந்து மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமூடைகள், அரிசிமூடைகளுடன் லொறிகளில் கடத்தப்பட்டு வந்த சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று உடவளைக் காட்டுக்குள் சாகுபடி செய்யப்பட்ட கஞ்சா அடங்கிய மூடைகள் அக்கரைப்பற்றுக்கு கொண்டு வரப்பட்டு, அரிசி லொறிகளில் கொழும்புக்கு கடத்தப்பட்டு வந்த சம்பவமும், அறுத்த காட்டு மரங்கள் கடத்தலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தடுக்கும் பொருட்டு வீதிச் சோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வந்தாலும் திருட்டுச் சம்பவங்கள் குறைவடையவில்லை. திருட்டுகள் கல்முனைப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளன. பரவலாக மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# 10லட்சம் ரூபா மரப்பலகைகள் மீட்பு

மட்டக்களப்பு, செப்.02

சட்டவிரோதமாகக் கடத்திவரப்பட்ட 10லட்சம் ரூபா பெறுமதியான மரப்பலகைகள், மரம் அறுக்கும் இயந்திரம், மரத்தளபாடங்கள் ஆகியவற்றைக் காத்தான்குடிப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் மரங்களைக் கடத்திவந்த 'டிப்பர்' ரக வாகனத்தின் சாரதியைத் தாம் கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் குணவர்த்தன தெரிவித்தார்.

திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் காத்தான்குடி பிரதான வீதியில் வைத்தே இக்கடத்தல் பிடிபட்டது எனப் பொலிஸார் கூறினர். (ளி)

# அம்பாறை மாவட்ட கரையோரப்பகுதி குளக்கரைகளில் குப்பை, கூழங்கள்
## பகுதி மக்கள் முறையீடு

அம்பாறை, செப். 02

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதியிலுள்ள சிறிய குளக்கரைகளில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இதனால் சுற்றாடல் மாசடைந்து வருகிறது என அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளார்கள்.

சாய்ந்தமருதை அண்டியுள்ள குளக்கரையில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. அந்தக் குளத்திலுள்ள மீன்களும் இந்தக் குப்பை கூளங்களை உணவாகக் கொள்கின்றன. இந்த மீன்களை மீனவர்கள் பிடித்து விற்பனை செய்கிறார் கள். இந்த மீன்களை உண்பவர்களுக்கு பல நோய்களும் ஏற்பட்டுள்ளன என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச உள்ளூராட்சிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஊர்வலங்களும் பிரசாரங்களும் இடம்பெற்றுள்ளன. எனினும் வீதிக் கரைகளில் குப்பைகூழங்கள் குறைந்த பாடாக இல்லை.

உள்ளூராட்சி சபைகளுக்கு குப்பைகளை அகற்றுவதற்கு வாகனங்கள் உள்ளன. ஊழியர்களும் இருக்கிறார்கள். ஊழியர்களும் குப்பைகளை அகற்றிவருகிறார்கள். எனினும் குப்பைகள் குறைவடையவில்லை என்றும் அவர்கள் விவரித்துள்ளார்கள்.

பிரதேச மக்கள் தங்கள் குடியிருப்பு வளவுகளில் உள்ள குப்பை கூழங்களைச் சேகரித்து குப்பைகளை ஏற்றிக்கொண்டு வரும் வாகனத்திற்கு கொடுக்கவேண்டும் என்றும், தாங்கள் குடியிருக்கும் வளவின் வீதியையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்றும், இச்செயற்பாடுகளால் டெங்கு நுளம்பு பரவலைத் தடுக்கலாம் என்றும் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் பிரதேச மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# கிழக்கு மாகாணத்தின் நிலைமைகளை ஆராய ஐ.நா குழுவினர் விஜயம்

கொழும்பு, செப்.02

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தின் நிலைமைகளை ஆரய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் குழுவொன்று திங்கட்கிழமை அந்த மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளது.

இந்தக் குழுவினர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளுக்குச் சென்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பணிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் ஆராய்ந்து அறிக்கை வெளியிடுவார்கள் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் காலநிலை மாற்றம் தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களாகக் கலந்துகொண்ட தேசிய கல்வி நிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திருமதி ஜெயந்தி குணசேகர, கல்வி அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி டிலானி அமரசிங்க ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் பிரதீபராஜா, அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அகமட் ஹுசைன் ஆகியோர் நிற்பதை முதலிரு படங்களிலும், பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உதவி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய வளநிலைய முகாமையாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களை இறுதிப்படத்திலும் காணலாம்.

# வடமாகாண விவசாய அமைச்சு நேற்று முதல் கிளிநொச்சியில்

கொழும்பு, ஓக. 02

வடக்கு மாகாண விவசாய அமைச்சு நேற்று முதல் கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.- என்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண விவசாய நீர்ப்பாசன கால் நடைகள் மீன்பிடி மற்றும் காணி அமைச்சும் அதன் கீழுள்ள சகல திணைக்களங்களும் நேற்று முதல் கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட்டது. இந்த அமைச்சுக்கான அலுவலகமும் திணைக்களத்துக்கான கட்டடங்களும் சுமார் 3 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன - என்று தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னரும் வட மாகாண சபையின் சகல அமைச்சுக்களும் திணைக்களங்களும் திருகோணமலை வரோதயர் நகரிலேயே இயங்கி வந்தன.

அரசு வடக்கில் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி வேலைத்திட்டம், விவசாயத்திட்டங்களை உரிய முறையில் உடனுக்குடன் நடை முறைப்படுத்தும் நோக்குடனே இந்த அமைச்சை உடனடியாக கிளிநொச்சிக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது எனத்தெரிவிக்கப் படுகிறது. (சி)

# இலங்கை மனித உரிமை ஆணையகத்திடம் அளிக்கப்பட்ட 120,00 வழக்குகள் கிடப்பில்

## ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 02

இலங்கை மனித உரிமை ஆணையகத்திடம் கையளிக்கப்பட்ட பன்னிரண்டா யிரம் வழக்குகள் விசாரிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன என ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்திருக் கிறது.

இவ்வழக்குகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள ஆணையாளர்கள் எவரும் நியமிக்கப்படாததே இதற்குக் காரணம் எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின் படி ஆணையாளர்கள் அரசமைப்புச் சபையால் நியமிக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சபையை நிறுவுவது என்பது நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடும் என்ற காரணத்தால் இலங்கை அரசு அதனை நியமிக்காமல் இழுத்தடித்து வரும் நிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்குள்ளாக்கப் படும் என்கிற நம்பிக்கை ஏற்பட வாய்ப்பில்லை என்றும் அது சுட்டிக்காட்டுகிறது.

கொழும்பு அலுவ லகத்தில் மட்டும் 5500 இற்கு மேற்பட்ட வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரவதை, பொலிஸ் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தமை, இராணுவத்தாலும் பொலிஸாராலும் காணாமல்போகச் செய்யப்பட்டமை, கடத்தல்கள், சிறுபான்மையினரை முறைகேடாக நடத்தியமை, இடம் பெயர்ந்த மக்களுடைய பிரச்சினைகள், ஏனைய மனித உரிமை மீறல்கள் என்பவை குறித்தே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது. (சி)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னையா பாலசிங்கம்

(RETIRED SUPERINTENDENT OF AUDIT)

தோற்றம் 19.09.1931

மறைவு 21.08.2003

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து
அவனியிலே எமை சிறப்புற வாழ்வித்த-தந்தையே!
ஏழாமாண்டுத் திதிநாளில் உங்களை
நினைந்து வணங்குகின்றோம்-அப்பா!

166/3, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(102417)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இதய அஞ்சலி



அமரர்

.சின்னத்துரை கைலாயநாதன்

கோண்டாவில் மண்ணில் தவழ்ந்து கொக்குவில் மண்ணில் இல்லறம் அமைத்துக்கொண்ட சி.கைலாயநாதன் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியால் எம் இதயம் ஒரு கணம் அதிர்ந்தது. அவர் அண்மையில் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயிலைப் புனரமைத்து மகாகும்பாபிஷேகம் நிகழ்துவதற்கு முன்னின்று உழைத்ததை நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், அவரது பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் மன அமைதி பெறவும் எல்லாம் வல்ல கணபதியையும், காளி அம்பாளையும் கரம் குவித்துப் பிரார்த்திக்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பரிபாலன சபை,
கந்தர் வளவு, ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார்
கோயில். (காளி கோயில்)

(102715)

## காணி விற்பனைக்கு

இணுவில் வடகிழக்கில் புகையிரத வீதிக்கு அருகில் 8 பரப்பு 5.2 குளி வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0779465887

## 31ஆம் நாள் நினைவு

"அன்னையெனும் தெய்வம்"



அன்னை மடியில் 02.05.1927

அரண் திருவடியில் 03.08.2010

அமரர்

திருமதி சிவக்கொழுந்து பொன்னம்மா

அவர்கள்

அன்னையெனும் எங்கள்
அன்புத் தெய்வமே
ஈன்று புறந்தந்து, எமை
ஏற்றமுற வைத்து ஏணியாகி
ஆன்ற கவிதையாகி
அழகான வாழ்வு வாழ்ந்தீர்
தோன்றாத் துணையாக எம்மை
தொடர்ந்தும் காத்திடுவீர்
சான்றும் உண்டு கொல் எந்துயரம்
சாய்ந்து மடிவதற்கே.

சிறி மஹால்,
கரணவாய் வடக்கு.
கரவெட்டி.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி





அசோக்குமார் செல்வராணி
மலர்வு: 10.05.1970

அசோக்குமார் நிவானந்தன்
மலர்வு: 06.10.1992
உதிர்வு: 28.08.2005

அசோக்குமார் நிவாஜினி
மலர்வு: 13.12.1993

ஆண்டுகள் ஐந்து போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
தீரவில்லை எம் கவலை
உடன் பிறப்பே உனையெண்ணித் தவிக்கிறேன்

வேந்து வேடிக்குதம்மா என் இதயம்
நான் கண்ணீரால் தினமும் குளிக்கின்றேன்
மீண்டும் ஒரு கோடியில் பூக்களாக மலர
இறைவனை வேண்டுகிறேன்.

குருபரன் தொலைத் தொடர்பகம்,
[illegible], கரவெட்டி.
தொ.பே. [illegible]3606

(102533)

வாடித்தவிக்கும்:
அக்கா- உமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலி.கிழக்கு விதாதா வளநிலையம்

ஞான ஆதவன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்கு விதாதா வளநிலையம் விதாதாவின் அனைத்து நோக்கங்களையும், முழுமையாக நிறைவு செய்து வருகின்றது.

'சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களை வழங்கலும் பிரதேச அடிப்படையில் விற்பனை நிலையங்களை அமைத்துக் கொடுத்தலும்' என்ற செயற்பாட்டை நிறைவு செய்யும் வகையில் பனை தென்னை வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களை நியாய விலையில் பொதுமக்களிடம் கொள்வனவு செய்து சிறுகைத்தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு கைகொடுத்து உதவும். அதே நேரத்தில் இடைத்தரகர்களின் சுரண்டலுக்கு இடமளிக்காமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

விதாதா வளநிலையத்தின் ஆரோக்கியமான முன்னெடுப்புக்கள் உயர்தரம் வாய்ந்த செயற்பாடுகள் தொடர்பாக நிலையத்தின் பொறுப்பதிகாரி பகீரதன் கருத்துத் தெரிவிக்கையில் 'எமது நிலையத்தின் ஆரம்பம் தொடக்கம் இன்றைய வளர்ச்சி நிலைவரைக்கும் உறுதுணையாக இருந்து உதவி வருபவர் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஜ் அவரது வழிப்படுத்தலும் ஆலோசனையும் விதாதா வளநிலையத்தின் முன்னெடுப்புக்களை உயர் நிலையில் பேண முடிந்தது. மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதலாம் இடம் பெற்றதுடன், தேசிய மட்டத்துக்கு உயர்த்தி வைத்துள்ளது' என நன்றியறிதலுடன் பாராட்டுத் தெரிவித்தார். இது உண்மை என்பதை நேரடி அவதானிப்பின் போது உணரமுடிகின்றது.

வலி.கிழக்கு விதாதா வள நிலையத்துக்கு நிரந்தரமான மாடிக் கட்டடத்தை (20×50) 71 லட்சம் ரூபா செலவில் நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு பின்புறத்தில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**பயிற்சி நெறிகள்**

வலி.கிழக்கு விதாதா வளநிலையத்தில் இதுவரை உணவு பதனிடல், மெழுகுதிரி தயாரித்தல், சந்தனக் குச்சி தயாரித்தல், கணனி மென்பொருளாக்கல், கணனி வன்பொருள், வீட்டுத்தோட்டம், தையல் இயந்திரம் திருத்தல், றேந்தை பின்னல், வெள்ளைத் தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல், மரக்கறி உலர்த்திப் பதனிடல், பாடசாலை மாணவர்களுக்கான விஞ்ஞானம் தொழில் நுட்பம் சார் பயிற்சி, கூட்டுப்பசளை தயாரித்தல், தேனீ வளர்ப்பு, காகிதக் கூழில் சிலை தயாரித்தல், உணவு தயாரித்தல், விவசாய ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஜாம் தயாரித்தல், சோஸ் - கோடியல் தயாரித்தல், பன்னவேலை, காளான் பயிர்ச்செய்கை, பேக்கரி தயாரிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி நெறிகள் 20 பேர் கொண்ட அணி அணியாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி நெறிகளுக்கும் அவற்றோடு தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆண்டு தோறும் பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

சமகாலத்தில் விவசாய நடவடிக்கையில் ஆர்வத்துடன் கையாளப்படும் சேதனப் பசளை தயாரிப்பும் பயன்பாடும், மண்புழு பசளை தயாரித்தல், இயற்கை மூலிகை திரவ கிருமி நாசினிகள், நாற்று மேடை ஆக்கம், கத்தரித்தல் முறையில் விளைச்சலை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் செயல்முறையாகவும் பயிற்சியாகவும் விவசாயிகள் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்வது செயல்முறை மூலம் கண்டறிகின்றனர்.

'விதாதா' என்பது தமிழில் அர்த்தம் புரியாத சொல்லாக இருந்தாலும் அங்கு முன்னெடுக்கப்படும் செயல்முறைகள் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் பயனளிப்பனவாக இருக்கின்றது. அதில் பங்கு கொண்டு பயன் அடையுங்கள்.

(முற்றும்)



# கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோயில்

வரிலன்

வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் கோப்பாய் மத்தியில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் பின்புறமாக பலாந்தோப்பிற்கு மத்தியில் இவ் அருள் சுரக்கும் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்துக்குக் கிழக்குப் புறமாக குளமும் சோலையும் காணப்படுகின்றன.

மருது, கூழா, ஆல், அரசு, வேம்பு முதலிய மரங்கள் வானளாவி வளர்ந்துள்ள சோலைகளின் மத்தியிலே மருத நிலத்தில் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

இவ் ஆலயத்தின் உட்பிரகாரமாக சுமார் 45 அடி சுற்று உள்ள கூழா மரம் தல விருட்சமாகக் காணப்படுகின்றது.

இம் மரத்திலுள்ள மரப்பொந்துகளில் வெண்மை நிறமுடைய நாக பாம்புகளிருக்கின்றன. சில காலங்களில் வெளிப்படும், யாரையும் தீண்டியதில்லை. இன்றும் இக் கூழா மரத்தடியில் சிறப்புக் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கண்ணகி தேவி இவ்வூர் மக்களின் உயர் நீதிபதி. நான், எனது என்று ஆலய நடவடிக்கைகளில் அகந்தை, மமதை கொண்டவர்கள், ஆலயப் பொருள்களைக் கையாட முயன்றவர்கள், ஆலயப் பாம்புகளைத் துன்புறுத்த முயன்றோர், ஆலய முன்றலில் பொய்வாக்குப் பண்ணியோர் தேவியின் கோபத்துக்குள்ளாகி உடனுக்குடன் கஷ்டமடைந்த சம்பவங்கள் நிறைய உண்டு.

ஊர் மக்களெல்லோரும் தேவியின் மீது மிகுந்த பய பக்தியுடையோராயுள்ளனர். கமக்காரர் முதல் யாவரும் தமது உழைப்பின் முதல் வருமானத்தை தேவிக்கு காணிக்கையாகக் கொடுக்கும் வழக்கம் இன்றும் நிலவுகின்றது. இவ் ஆலய வரலாற்றை எடுத்து நோக்கின் சரித்திர காலத்தில் இலங்கை மீது எட்டு முறை தமிழர் படையெழுச்சிகள் நடந்துள்ளன.

அனுராதபுரியை தலைநகராகக் கொண்டு வங்க நாசிகன் என்னும் சிங்கள மன்னன் ஆண்ட போது கி.பி 113 ஆம் ஆண்டில் தமிழரின் மூன்றாவது படை எழுச்சி நடைபெற்றது. படை எடுத்துவந்த சோழமன்னன் இந்த நாட்டை வென்று பன்னீராயிரம் சிங்களவரைச். சிறைப்படுத்திச் சென்றதாகவும் பின்னால் கி.பி. 113-135 வரையாண்ட வங்க நாசிக மன்னன் மகன் 1ஆம் கஜபாகு மன்னன் இங்கிருந்து பெரும் படையுடன் சோழநாடு சென்று பெரும்போர் செய்து வெற்றி கொண்டு சிறைப்பட்ட பன்னீராயிரம் சிங்கள வரையும் சிறைமீட்டு பன்னீராயிரம் சோழியரையும் சிறைப்படுத்தி வந்ததாக வும் இச் சோழியர் அழத்தூர்க் கோறளை அரிஸ்பற்று, தும்பளை என்னும் இடங்களில் குடியேற்றப்பட்டதாகவும் இலங்கை சரித்திரம் கூறுகின்றது.

கஜபாகு மன்னன் சோழநாட்டிலிருந்து கண்ணகி சிலை பலவுங் கொண்டு மாதகலுக்கண்மையாகவுள்ள சம்புக்கோளா அல்லது சம்புத்துறையெனும் திருவடிநிலையிலிறங்கி அனுராதபுரிக்கு கொண்டு செல்லும் போது அவனும் அவன் சேனைகளும் தங்கிய மரமடர் சோலைகளில் பொருத்தமான இடங்களில் தேவி சிலையை வைத்து கோவிலமைத்துத் தொடர்ந்து பொங்கல் விழா வழிபாடுகளியற்ற பூசகர்களையும் நியமித்து சென்றான் என செங்குட்டுவன் வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது. (தொடரும்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியாக புதிய விடயம் ஒன்றை கற்றுக் கொள்வீர்கள். வர்த்தகர்களுக்கு கடன் மிகுதிகள் விலகும். தந்திரமாக செயற்பட்டு சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள்.

### இடபம்



சில வேலைகளை செய்ய மறந்து விட்டு அவதிப்படலாம். மாலை நேரத்தில் சில காரியங்களுக்காக செலவிடலாம். இரண்டு நாள்களாக உங்களை குழப்பிக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். பெண்கள் வழியில் சிறு உதவிகள் கிடைக்கலாம். நினைத்த ஒரு காரியம் நடக்காவிட்டாலும், நினைக்காத ஒரு காரியம் நடக்கும்.

### மிதுனம்



சில விடயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயற்பட முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர் ஒருவரை சந்திக்கலாம். பிள்ளைகள் கேட்ட பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களின் விமர்சனத்தைப் பற்றி கவலைப்படாமல் நினைத்ததை செய்வீர்கள்.

### கடகம்



அடைமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். பிள்ளைகளின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சந்தோஷம் பெறும் நாள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள்.

### சிங்கம்



சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. அதிக செலவாகும் என, நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும். உறவினர் ஒருவர் மற்றொரு உறவினரைப் பற்றிய ரகசியங்களை உங்களிடம் சொல்லலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து கொள்வீர்கள்

### கன்னி



விருப்பம் இல்லாமல் வேண்டா, வெறுப்பாக சில செலவுகளைச் செய்யலாம். எதேச்சையாக நடக்கும் சில விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பணிபுரிவோர் திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். சிலர் உங்களை ஏமாற்ற முற்படலாம். விருந்து, விசேஷம் உண்டு.

### துலாம்



தடுமாற்றங்கள், குழப்பங்களுக்கு ஆள்படலாம். சிலர் உங்களை மரியாதைக் குறைவாக நடத்தலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். மாலை நேரத்தில் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். வாக்குவாதம் தவிர்க்கவும்.

### விருச்சிகம்



சில வேலைகளுக்காக நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். செலவு ஒன்றை செய்ய நினைத்து திடீரென அதில் மாற்றம் செய்யலாம். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள்.

### தனுசு



வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். மதிப்பு, கௌரவத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். பள்ளைகளின் கல்வி விஷயங்களுக்காக சிறு தொகையை செலவிடலாம். ஓய்வாக இருக்காமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். நண்பர் ஒருவர் தங்களின் அனுபவத்தை உங்களிடம் சொல்லலாம்.

### மகரம்



தடை, தாமதங்களுக்குப் பின் சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு விஷயமாக திடீர் வெளியூர் பயணம் செல்லலாம். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்க வேண்டும். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிலருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.

### கும்பம்



சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உங்களுக்கு எரிச்சல், கவலை உண்டாக்கும் காரியங்களைச் சிலர் செய்யலாம். மற்றவர்களிடம் ஆதிக்க மனப்பான்மையோடு நடந்து கொள்வதை தவிர்க்கவும். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பதற்றம் உண்டாகும்.

### மீனம்



கணவன், மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். காலை முதல் மாலை வரை ப்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள்.


முதன்முறையாக யாழ்நகரில்
வீரகேசரியின் 80ஆவது
ஆண்டு விழாவை முன்னிட்டு
இசைமணி, பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர்
கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரத்தின்
இன்னிசைக்கச்சேரி
இடம் :
இந்துக்கல்லூரி விளையாட்டரங்கு
யாழ்ப்பாணம்
காலம் :
02.09.2010
நேரம் :
மாலை 6.00மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
ANNIVERSARY வீரகேசரி 80 YEARS
இ.போ.சபையின் அனைத்து இறுதி நேர பஸ்களும் யாழ்.இந்துக் கல்லூரி வீதியூடாகச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!
2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.
அனுமதி இலவசம்

Organized by pico Events
செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்
மேலும் விவரங்களுக்கு:-
அஞ்சலா – 0778036854

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்
கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.
நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.
ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)
JEF
Jaffna Education Fair 2010
BRITISH COUNCIL Daily News உதயன் pico


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் போர்வை யாருக்காக.....?

ஒரு ஊரில் பெரிய மன்னர் இருந்தார். அவருக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டு. அடிக்கடி கோயிலுக்குப் போவார். வழக்கம் போல் ஒரு நாள் கோயிலுக்குப் போய் கடவுளை வேண்டி திரும்பி வெளியில் வரும்போது ஒரு சந்நியாசி தியானத்தில் இருந்தார். அவரிடம் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று கிட்டப்போய் நின்றார். ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு தன்னிடம் இருந்த விலை உயர்ந்த சால்வையை சந்நியாசிக்குப் போர்த்திவிட்டு போய்விட்டார்.

மறுநாள் காலையில் மன்னர் அரண்மனையில் மேல் மாடத்தில் நின்று கொண்டிருக்கும் போது தெருவில் ஒரு பிச்சைக்காரன் அதே சால்வையைப் போர்த்திக் கொண்டு போவதைக் கண்டார்.

உடனே அந்த பிச்சைக்காரனை அழைத்து எவ்வாறு உனக்குக் கிடைத்தது எனக் கேட்டார். சந்நியாசி கொடுத்ததாக அவன் பதில் கூறினார். சந்நியாசியை அழைத்து என்ன நடந்தது என விசாரித்தார் மன்னர்.



மன்னா! இந்தப் பிச்சைக்காரன் அதே வழியாக வரும் போது மிகவும் குளிரோடு நடுங்கிக் கொண்டு கிழிந்த உடையோடு வந்தான். பரிதாபப்பட்டுத்தான் இதை இவனுக்குக் கொடுத்தேன் என்றார் சந்நியாசி.

அரசனுக்குக் கோபம் வந்தது என்மீது உள்ள மரியாதை இதுதானா? இவ்வளவு விலை உயர்ந்த சால்வையை ஒரு பிச்சைக்காரனுக்கா கொடுத்தீர்கள். என்று சந்நியாசியை சிறையில் அடைத்தான்.

அன்று இரவு மன்னர் தூக்கத்தில் ஒரு கனவு கண்டான். மறுபடியும் அந்தக் கோயிலுக்கு போகும் போது கடவுள் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தார். உடனே தனது உயர்ந்த சால்வையை எடுத்துக் கொண்டு இறைவனை நெருங்கும் போது உனது சால்வையா வேண்டாம் எனக்கு என்று கடவுள் தடுத்தார்.

கடவுளே நான் என்ன பாவம் செய்தேன் என்று கடவுளிடம் கேட்க கடவுள் கூறியது. நேற்று ஒரு சால்வையை எனக்குக் கொடுத்தாய் அதைக் கொண்டு வந்து கொடுத்தவனுக்கு சிறைத் தண்டனை கொடுத்திருக்கிறாய் என்றார்.

மன்னர் உடனே விழித்துக் கொண்டார். அவருக்கு எல்லாம் புரிந்தது. சந்நியாசியிடம் மன்னிப்புக் கேட்டு அவரை விடுதலை செய்தார்.

சந்நியாசி முகத்தில் மறுபடியும் சிரிப்பு கஸ்டப்படுகிறவர்களுக்குச் செய்யும் உதவிதான் கடவுளுக்கே செய்யும் உதவி என்று சொல்லிவிட்டு சந்நியாசி நடந்தார்.

தென்கச்சி
கோ.சுவாமிநாதன்

# 64 கலைகள்*

பா.வாணி

* கவுத்துக வாதம் - வஞ்சகத்தை மனதில் வைத்து வாதாடும் கலை
* தாதுவாதம் - பொன், இரும்பு, செம்பு, நாகம் முதலிய எல்லா வகையான உலோகங்களையும் பரிசோதித்து அறியும் கலை.
* காருடம்: - தன்னை கருடனாகப்பாவித்து பாம்பின் விடத்தை போக்கும் வித்தை.
* நட்டம் - மேடையில் ஆடும் கூத்தின் கலை.
* முட்டி - விரல்களை மடக்கிய கையினால் குத்திச் செய்யும் போர்க்கலை. அதாவது முட்டி யுத்தம்.
* ஆகாயப் பிரவேசம் - தூல சரீரத்தை யோக வித்தையால் மறைத்துக்கொண்டு சூட்சும சரீரத்தோடு ஆகாயத்தில் நுழைத்தல்.
* ஆகாய கமணம் - சூட்சும சரீரத்தோடு ஆகாய மார்க்கமாக பல இடங்களிலும் சஞ்சரித்தல். இதனை மணிமேகலை எனும் நூல் காயசண்டிகை செய்ததாகக் கூறுகிறது.
* பரகாயப் பிரவேசம் - தன் சரீரத்தைவிட்டுப் பிறிதொரு சரீரத்தினுள் சூட்சும சரீரத்தோடு புகுதல் இதனை திருமூலர் செய்தார்.
* அதிரிசயம் - காணப்படும் பொருள்களை காணாமல் போகச் செய்வதாகிய வித்தை. இது தாமதகுணசித்து விளையாட்டில் ஒன்று.
* இந்திரசாலம் - அற்புதங்களை செய்து காட்டும் வித்தை.
* மகேந்திரசாலம் - நம்பமுடியாத பெரிய மாயவித்தைகளைச் செய்து காட்டும் கண்கட்டுவித்தை.
* அக்கினித் தம்பம் - அக்கினித் தூணைக் கட்டித் தழுவினால் அதனைச் சுடாமல் செய்யும் வித்தை.
* சலத்தம்பம் - நீர்மேல் நடக்கும் வித்தை. இதனை செய்தவர் பீதாம்பர ஐயர் என்னும் மேதை.
* வாயுத்தம்பம் - பிராணவாயு வெளியில் ஓடாமல் தடுத்து நீண்ட நேரம் அடக்கி சாதிக்கும் அடயோகவித்தை.
* திட்டித் தம்பம் - நடக்க முடியாததை நடத்திக் காட்டும் கண்கட்டுவித்தை.
* வாக்குத் தம்பம் - பிறர்பேசும் பேச்சை பேச வெட்டாமல் தடுக்கும் வாய்க்கட்டு வித்தை.
* சுக்கிலத் தம்பம் - இந்திரியத்தை வெளிவிடாது அடக்கும் வித்தை.
* கன்னத்தம்பம் - கேட்கும் காதை கேட்காமல் செய்யும் வித்தை.
* கட்கத் தம்பம் - வாளால் வெட்டக் கை ஓங்கினால் வெட்டுப்படாமல் தன் உருவை மறைத்துக்கொள்ளும் வித்தை.
* அவத்தைப் பிரயோகம் - பகைவரைச் சூன்யம் வைத்துக்கொல்லுதல்.

(முற்றும்)


# மசியோ மத்தியோ

விரதமிருப்பது எல்லா மதங்களிலும் உள்ள பழக்கமாகும். விரதத்திற்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் ஒன்று உண்டு. வாரத்தில் ஒரு நாளோ, மாதத்தில் ஒரு நாளோ விரதமிருந்தால் உடலுக்கு நல்லது. உடம்பில் இருக்கின்ற தேவையற்ற கொழுப்புச்சத்தை இல்லாது எரித்துவிடும். கழிவுப் பொருள்கள் இரத்தத்தில் கலந்து இருந்தால் வெளியேற்றி விடும். அதனால் இயற்கை மருத்தவத்தில் மாதத்தில் ஒரு தடவையாவது பட்டினி கிடப்பது நல்லதாகும். சிலபேர் விரதம் இருப்பார்கள். ஆனால் அவர்கள் காலையில் இருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை என்று புலம்புவார்கள். இது தவறாகும். அதாவது கடவுளை நினைப்பதற்கு விரதம் என்று சொல்லிவிட்டுக் கடவுளை நினைக்காமல் பட்டினியை நினைப்பது தவறாகும்.

ஒருமுறை நண்பர் ஒருவரை வீட்டுக்கு வரச்சொன்னேன். அவரை வரச்சொன்ன நாளில் தான் அவர் விரதம் இருப்பார் அன்று அம்மா வெங்காயச் சாம்பார் கமகமவென்று வைத்துக் கொண்டிருந்தார்.

அம்மா சாப்பிட அழைத்தபோது அவர் முந்திக் கொண்டு போனார். நான் கேட்டேன் நீங்கள் விரதமாயிற்றே என்று. அவர் சொன்னார் இன்றைக்கு விரதத்தை ஒத்தி வைக்கலாம் என்றார்.

வெங்காயம் இல்லாத வெறும் சாம்பாரை ஊற்றிச் சாப்பிடலாம் என்று வெறும் சாம்பாரோடு சோறு கொடுத்தார் அம்மா. அவர் எனது இலையைப் பார்த்தவாறு சாப்பிட்டார். அம்மா வெங்காயத்தைத் தவிர்த்து சாம்பார் ஊற்றினார். அதற்கு அவர் தவறுதலாக விழுந்தால் தவறில்லை என்று சொன்னார்... இது விரதமா?



இந்த விரதமானது எப்படித் தொடங்கியது என்று சொல்கிறேன். முன்னோர்கள் உணவை மூன்றாகப் பிரித்தார்கள். மனிதனுக்கு மூன்று குணம் இருக்கிறது. தமோ, ரயோ சத்துவ குணங்கள். தமோ குணம் என்பது புளித்த ஆகாரத்தை உண்ணத் தோன்றும். ரஜோ குணம் காரமான உணவையும் சத்துவ குண உணவு வெள்ளை அன்னம், மோர், பால் போன்றவற்றை உண்ணத் தோன்றும். அப்படி விரதம் இருந்தால் மனம் தூய்மையாகிவிடும். உணர்வுகளும் தூய்மையாகிவிடும். அதற்காக இவ்விரதத்தை வைத்தார்கள்.

எனவே உணவின் அளவை முடிவு செய்ய வேண்டும். அது சத்துவ குண உணவா என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையா — விவாத மேடை — தேவையற்றதா

மொபெட் ரக (49 cc) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்ற நடைமுறைகள் தேவைதான்.

விலைமதிப்பற்ற மனித உயிர்கள் வீதியிலும் சரி, வீட்டிலும் சரி நீடு வாழ வேண்டுமாயின் அவை சார்ந்த ஒழுக்க நெறிகளையும், நடைமுறைகளையும் சம்பந்தப்பட்ட அனைவரும் பின்பற்றியே ஆக வேண்டும். இந்நிலையில் மேற்படி வாகனங்களுக்கு ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் நடைமுறைகள் தேவையே. மேற்படி வாகனங்கள் வீதிகளில் மிகவும் அட்டகாசமாக ஆட்சி புரியத் தொடங்கிவிட்டன. வீதியில் பயணிக்கும்போது, தன்னையும் மட்டுமன்றி, ஏனைய வாகன ஓட்டுநர்களையும், பாதசாரிகளையும், அதுவுமல்லாமல் தன்னோடு பின்னிருக்கையில் அமர்ந்திருக்கும் சிறுவர், முதியோர், குழந்தைகளையும்விபத்துக்குள்ளாக்கிவிடும்

## மொபெட் ரக (49CC) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள நடைமுறைகள்

சம்பவங்களைத் தினம் தினம் வைத்தியசாலைகள், ஊடகங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்ட பின்னரும், இந்த மண் இவற்றால் மரண ஓலங்களைச் சந்தித்த பின்னரும், அடம் பிடிக்காது, பொது நலம் கருதியாவது ஹெல்மற், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதும் அனுசரிப்பதும் காலத்தின் தேவையாகும். மோட்டார் சைக்கிள் யாவற்றினதும் விபத்துக்களினால் வருடாந்தம் எமது நாட்டில் 2000 பேர் மரணிக்கிறார்கள். காரணம் உரிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமையே யாகும். இந்நிலையில் உங்களையும், மற்றவர்களையும் காப்பாற்ற மேற்சொல்லப்பட்ட நடைமுறைகள் தேவைதான் என்பதனை முன் வைக்கின்றேன்.

**கே.எஸ்.சிவஞானராஜா,**
கொக்குவில்.

மொபெட் ரக (49 cc) வாகனங்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகள் தேவையற்றவை. ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை வைத்துக் கொண்டு செல்லும் சாரதிகள் விபத்துக்குள்ளாவதில்லையா? வீதி நடைமுறைகளை தெரிந்து அதன்படி ஒழுகினால் மட்டுமே போதுமானது. விபத்துக்களை தவிர்க்க வயோதிபர்கள், பெண்கள் அதிகம் மொபெட்ரக மோட்டார் வாகனங்களை பயன்படுத்துகின்றனர். காரணம், பாரம் குறைந்தது, பாவனைக்கு இலகுவானது என்பதால். மேற்கூறப்பட்ட நடைமுறைகள் இல்லை என்பதற்காகவே பலர் இவ்வகை மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்திருக்கின்றனர். தம்முடைய வேலையை இலகுவாக்கிக் கொள்ளவும், தமது நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளவும் மொபெட்ரக மோட்டார் சைக்கிளை பயன்படுத்தும் மக்கள் அநேகமாக நடுத்தர வர்க்கத்தினரும் கூட. திடீரென சட்டங்களை கொண்டு வருவதால் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதே உண்மை. யாழ்ப்பாணத்தில் வாகனங்களை ஓட்டும் அதிகமான மக்கள் வீதி நடைமுறைகளை அறியாதவர்கள் அல்ல. அதைக் கடைப்பிடிக்காதவர்களே! எங்கு பார்த்தாலும் சுறுசுறுப்பாகவே ஓடித் திரியும் மொபெட்ரக வாகனங்களுக்கு புதிய நடைமுறைகளால் தடை விதிப்பது பாவம். இது தேவையற்றது என்பதே எனது வாதமாகும்.

**பாலினி**

இரண்டாவது விவாதமேடைப் பகுதியில் "பஞ்சாபி (சுடிதார்) அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சரியானது" என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. இதில் சரியானது என்ற அணிக்காக 313 வாக்குகளும், தவறானது என்ற அணிக்காக 79 வாக்குகளும் கிடைத்துள்ளன. சரியானது என்ற அணிக்காக வாக்களித்தவர்களில்

* சௌ.கீர்த்திகா - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
* வி.சபேசன் - 13 ஆம் வட்டாரம், நெடுந்தீவு
* சி.ரஜீவன் - கொக்குவில்

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்: க.மயூரன் மாதகல் வடக்கு, மாதகல்.

மேலும் சிறந்த ஆக்கங்களை அனுப்பியோர்

* நிலான் ரவி - வல்வெட்டித்துறை
* செ.ரவிசாந் -குப்பிளான்
* என். ஜனனி - 366/1 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
* ஆ.இந்திரா -கரவெட்டி
* ச.சாமுஏல் - யாழ்ப்பாணம்
* என்.தர்சன் - அச்சுவேலி

# இளவல்கள் வட்டம்

## "க்ளோஸ் ஃபிரெண்ட்" வேணுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

மதித்து நடக்க இன்னொரு வழி, நமது நண்பர்களை அன்பெனும் வட்டத்திற்குள் அடக்கி வைக்காமல் இருப்பதாகும். உண்மையான நண்பர்கள் பொறாமைப்படமாட்டார்கள், தனக்கு மட்டுமே உரியதென சொந்தம் கொண்டாடவும் மாட்டார்கள். ஆகவே, உங்களுடைய நண்பர்களை நீங்களே வைத்துக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மையைத் தவிர்த்திடுங்கள். மற்றவர்களிடம் அவர்கள் மனம் விட்டு பேசும் போது கொதிப்படையாதீர்கள், அவர்களை ஓரங்கட்டியும் விடாதீர்கள். நாம் எல்லாருமே பரந்த மனமுள்ளவர்களாய் இருந்து நட்புறவுகளை ஏற்படுத்திக்கொள்வது அவசியம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய நண்பர்கள் இன்னும் பலருடன் நட்புறவை வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். உங்களுடைய நண்பர்களுக்குத் தனிமை தேவை என்பதையும் மனதில் வையுங்கள். தனி நபர்களும், தம்பதியினரும் தனிமையில் இருப்பதற்கு நேரம் தேவைப்படுகிறது. பிறரிடம் சகஜமாகப் பேசி பழகுகிறவர்களாக இருந்தாலும், சமநிலையோடும் முன்யோசனையோடும் நடந்து கொள்ளுங்கள், அவர்கள் சலித்துப்போகுமளவுக்கு எப்போதும் அவர்களுடனேயே இருக்காதீர்கள்.

நபர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் போது, மற்றவர்களுடைய குறை நிறைகள் பளிச்சென தெரிவது உண்மைதான். இருந் தாலும், அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதற்கு அவற்றை ஒரு முட்டுக்கட்டையாக நாம் கருதக் கூடாது. நண்பர்கள் என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும் என நினைக்கிறார்கள், ஆனால், அது வெல்லாம் முடிகிற காரியமல்ல. நம்மில் ஒரு குறையும் இல்லாதவர்கள் யாரும் இல்லை. (வளரும்)



**ஞா.சுகந்தி,** கல்வயல்


## விவாதமேடை

**தேவையா** — மொபெட்ரக (49 CC) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்ற நடைமுறைகள் — **தேவையற்றதா**

இளைய சமுகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே "மொபெட்ரக(49cc)" வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள் தேவையா? தேவையற்றதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## விடிவு!

ஏழையின் வாழ்விலும்
ஏற்றம் உண்டு
தாழ்ந்தோர் வாழ்ந்திட
வழியும் உண்டு
விழுந்த அருவி எழுவது போல
பட்ட மரம் துளிர்வது போல
அஸ்தமனங்கள் முடிவாகாது
அவை நாளை விடிவாகும்
ஏழை வாழ்வு வளமாகும்



**ஜெ.சஜீவா,** தரம் - 10,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
கைதடி தெற்கு, கைதடி.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

"மொபெட்ரக (49cc)" வாகனங்களுக்கு புதிதாய் அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள்

தேவையா ☐ தேவையற்றதா ☐

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
அடையாள அட்டை இல:..............................

உங்கள் தீர்ப்புகளை 30.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது
சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள
படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.............. ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் கற்பிக்கும் பாடம்

மங்களத்திற்கு உன்னதமான உதாரணம் சிவன். புராண கதைகளின்படி அவருடைய குடும்ப அங்கத்தவர்கள் விநோதமான உருவமுடையவர்கள். இருப்பினும் ஒருவருக்கொருவர் சச்சரவில்லாமல் அமைதியாக இருப்பர். அந்தத் தெய்வீகக் குடும்பம் சாந்தியும் இசைவும் பெற்று விளங்கியது. சிவனுடைய கழுத்திலும் கரங்களிலும் தலையிலும் இடுப்பிலும் பாம்புகளிருக்கும். அவருடைய பிள்ளைகளில் ஒருவரான குமரனோ பாம்புகளைத் தின்னும் மயில்மீது பயணம் செய்பவர். மற்றொரு மகனோ சிங்கத்தின் பசிக்குரிய யானையின் தலையை உடையவர். சிங்கமோ சிவனின் தேவியான துர்க்கையின் வாகனம். துர்க்கையோ சிவனாரின் உடம்பில் பாதியாயிருப்பவள். சிங்கம் காளையிடமாவது நட்புடன் இருக்கிறதா என்ன? காளையோ சிவனின் வாகனம். புருவ மத்தியில் நெருப்பையும் தலையில் நீரையும் (கங்கை) (இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை) உடையவர். கையாலத்தில் இவையனைத்தும் ஒன்றுபடி அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் ஒன்று மற்றொன்றை மிகவும் நேசித்தும் இணங்கியும் வாழ்கின்றன என்பதையே கற்பனை செய்து பாருங்கள்.

அனைத்துமே மனதையும், அதை முறையாகக் கட்டுப்படுத்துவதையும் பொறுத்ததே. அன்பெனும் ஆயுதம் ஒவ்வொரு எதிரியின் ஆயுதத்தையும் கீழே போடவைக்கும். அன்பே அன்பைப் பெருக்குகின்றது. அது மீண்டும் பிரதிபலிப்பது, அந்தப் பிரதிபலிப்பும் அன்பாகவே இருக்கும். 'அன்பு' என்று கத்துங்கள்; அது பிறருடைய இதயத்திலிருந்தும் அன்பையே எதிரொலிக்க வைக்கும்.

மற்றவர்கள் மீது ஆனந்தத்தைப் பொழியுங்கள், தெய்வீக வழியில் அவர்களை நடத்துங்கள். அக்கறைக்கும், ஈடுபாட்டுக்கும் உதாரணமாகத் திகழுங்கள். பஜனை நாம சங்கீர்த்தனத்தில் பங்கு கொள்ளுங்கள். பாடும் போது ஆர்வத்துடன் உரக்கப் பாடுங்கள், " ஏன் உரக்கப் பாட வேண்டும், அமைதியாக அதை மனதில் பதிய வைத்தால் போதாதா" என்று சிலர் என்னிடம் கேட்கின்றனர். இது வெறும் வறட்டு வேதாந்தம். அவர்கள் சமிதியில் மற்றவர்களுக்கு புத்தி சொல்கிறார்களே ஒழிய அந்த அறிவுரையைத் தம்மளவில் பின்பற்றுவதில்லை.



## சாயி சிந்தனை

# இந்து சமுத்திர கடலை உன்னிப்பாக கவனித்து வருகின்றது இந்திய அரசு

### அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு

சென்னை, செப். 02

இந்து சமுத்திரக் கடற்பகுதியை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாடும் தமிழக மீனவர்களின் நலனும் பாதுகாக்கப்படும் - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நாடாளுமன்றில் நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அப்போது கச்தீவை திரும்பப் பெற வேண்டும் என தமிழக எம்.பிக்கள் வலியுறுத்தினர். அதற்குப் பதிலளித்த அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியவை வருமாறு-

இந்து சமுத்திரத்தை நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். தமிழக மீனவரைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாடும் மீனவர்களின் நலனும் பாதுகாக்கப்படும் என அவையில் நான் உறுதிப்படுத்துகிறேன்.

தற்போது இலங்கை சென்றுள்ள வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் பேசுவார். வரும் ஒக்டோபர் மாதம் நான் இலங்கை செல்ல இருக்கிறேன். அப்போது இலங்கை அரசுடன் தமிழக மீனவர் பிரச்சினை குறித்தும் பேச்சு நடத்தப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப். 02

நல்லைக்கந்தன் ஆலயப்பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்காமணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி தனசொரூபி நவரத்தினரத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

அ.ஜெயராமன் வயலினும் எஸ்.துரைராசா மிருதங்கமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ' சமய வாழ்வு' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

விசேட நிகழ்வாக திருமதி புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலில் அமைந்த பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும். ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப்பாடசாலை, கொக்குவில் தலையாளி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, சித்தங்கேணி சிவசக்தி அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)

* *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்த குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'சுபத்திரை கல்யாணம்' என்னும் தலைப்பில் உரை ... (201)








# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## நல்லை நகர் வாசன் நலம் தருவான்

பன்னிரு கரங்களால் பாசத்துடன் அணைப்பாய்
பாவங்கள் போக்கி எம்மை பக்தியி லாழ்த்திடுவாய்
பச்சை மயில் மீதமர்ந்து இச்சையுடன் அருள் தருவாய்
பக்தியுடன் தொழுவோர்க்கு பழவினைகள் தீர்த்திடுவாய்

நலந்தருவாய் எங்கள் நல்லை நகர் வாசா
குறைகளைப் போக்குவாய் குறவள்ளி மணவாளா
பிரணவப் பொருளை அருளிய குமரேசா
பிரமனைச் சிறையிலே அடைத்திட்ட குருநாதா

திருமதி இராஜினிதேவி சிவலிங்கம்,
உடுவில்.

## குன்று தோறாடும் குமரன்

நாட்டில் நடந்தவற்றை நன்கறிந்து நல்லூரான்
ஏட்டி லெழுதிடுவான் என்றறிவீர் - தீட்டிய
ஞானவேல் கைக்கொண்டான் நம்முணர்வே தன்னுணர்வாய்
மானத்தைக் காப்பான் மதித்து

குன்றுதோ றாடும் குமரனை நல்லூரில்
சென்று வழிபட்டால் செம்மலவன் - நன்றெமக்கு
தோகை மயிலிலமர்ந்து குஞ்சரி வள்ளியுடன்
பாகமாய் வந்தருள்வான் பார்

புலவர்மணி வை.க. சிற்றம்பலம்
கொக்குவில்.

## கனவுகள் மெய்ப்பட அருளிடையா!

காசு பணம் வேண்டாம்- கந்தையா
காணி நிலம் வேண்டாம்!
மாசு படிந்து செல்லும் - எங்கள்
மாண்புகள் தமை மீட்பாய்!
பேசு புகழ் இழந்தோம்- முருகா
பெருமைகள் கெட்டு நின்றோம்!
தூசு படிந்துவிட்ட - எங்கள்
தூய்மைகள் மலர வைப்பாய்!

பண்டைப் புகழ் இழந்தோம்- எங்கள்
பழமைகள் பண்புகள் தொலைத்துவிட்டோம்!
கொண்டது கோலம் என்றே - இன்று
குறுமதி பெற்றின்பம் இழந்துவிட்டோம்!
சண்டைகள் ஓய்ந்ததையா - அதன்பின்
சந்ததி தொலையுது பண்பில் ஐயா!
கண்விழி நல்லூர் ஐயா- எங்கள்
கனவுகள் மெய்ப்பட அருளிடையா!

கவிஞர் தமிழ் மணாளன்,
சாவகச்சேரி.

## காத்தருள்வாய் வேலவனே!

சரவணப் பொய்கையில் மலர்ந்த
பங்கயமே - சரவணா!
அன்று தர்மத்தை நிலைநாட்ட
சூரனை வதம் செய்தாய்- நின்
அருட்செயல் கண்டு மனம் உவந்து
உன்பாதம் சரணடைந்தோம்
காத்தருள்வாய் வேலவனே!

லோஜனா கிருஸ்ணசாமி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## ஆறுதல் தேடி வந்தோமையா....

ஆதிசிவன் நெற்றிக் கண்ணில் பொறியாகி
ஆறுதாமரை மலர்தனில் குழந்தையாகி
ஆசையோடு அன்னையவள் அணைத்திடவே
ஆறுமுகமாகி தேவர் துயர்துடைக்கவென்றே
ஆனைமுகன் தம்பியாக அவதரித்திட்ட
ஆறுமுகசாமியே! உன்னையே தஞ்சமென்று
ஆறுதல் தேடி வந்தோமையா நல்லூர்பதிதனில்
ஆலயங்கொண்டு நீ உறைதல் கண்டு

சைவப்புலவர்- த.சக்திவேல்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளையும் காத்திருப்பின் சோர்வினையும் தொலைத்துவிட்டு பழையநிலைக்கு மீள்வார்களா சாந்தபுரம் மக்கள்?




## இன்னமும் கண்ணீரில்தான் வன்னி மக்களின் வாழ்வு

பதிவு 7

ஔண்யன் — தமிழரசன்

எந்தப் பக்கம் காதைக் கொடுத்துக் கேட்பதென்று தீர்மானிக்க முடியாதபடி நாலாபுறத்திலிருந்தும் தமது மனக்குமுறல்களை உணர்ச்சியோடு அந்த மக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

''நாங்கள் முகாமால வெளிக்கிட்டு (வவுனியா அருணாசல நலன்புரி நிலையம்) நாலு மாதமாப் போச்சு. முகாமால ஏத்தின உடனேயே சொந்த இடங்களுக்கு விடப்போறாங்கள் எண்டுதான் நினைச்சம். அப்பிடிச் சொல்லித்தான் கூட்டிக்கொண்டு வந்தவை. ஆனா எங்கட இடத்தில (சாந்தபுரம்) மிதிவெடி எடுத்து முடியேல எண்டு ரண்டு மாசம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில தங்க வச்சிருந்தினம். பிறகு அங்கயிருந்து ஒரு நாள் சாந்தபுரத்துக்கு வெளிக்கிடுங்கோ எண்டு கூட்டிக்கொண்டு வந்து இந்தப் பள்ளிக்கூடத்தில இருத்திப்போட்டினம். இப்பிடி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலயும் மாறிமாறி இருந்து சீரழியிறதிலையும் பார்க்க பேசாமல் முகாமுக்கயே இருந்திருக்கலாம். முகாமால வெளிக்கிடேக்க ஒரு தெம்போடதான் வந்தனாங்கள். எங்கள அப்பவே - முகாமால கொண்டுவந்த உடனேயே எங்கள வீட்டுக்கு விட்டிருந்தால் ஆறு மாதத்தில பழைய மாதிரி வந்திருப்பம். எங்கட வீடு வளவில நிண்ட



தென்னையளையும், வாழையளையும் யானை அடிச்சுப் போட்டுது. முதல்ல போய்ப் பார்க்கேக்க எல்லாம் இருந்தது. இப்பதான் அதுகள் அழிஞ்சிருக்கு. நாங்கள் வந்த உடனேயே அங்க குடியமர்த்தியிருந்தால் அதுகளையெல்லாம் காப்பாத்தியிருக்கலாம். ஆனால் இஞ்ச இருக்க, இருக்க உழைக்கிற எண்ணம் குறைஞ்சு கொண்டு போகுது. நம்பிக்கை இருந்தாத்தானே ஒரு உத்வேகம் வரும். ஆனா எங்களுக்கு நம்பிக்கை வாறமாதிரி உருப்படியா ஒண்டும் நடக்கேல்லையே. சண்டை தொடங்கி சாந்தபுரத்திலிருந்து நாங்கள் எப்ப முதன் முதலாக இடம்பெயர்ந்தோமோ அண்டைக்குப் பிடிச்ச சனியன் இன்னும் விட்ட



பாடில்லை. எங்களப் போட்டு ஆட்டுது''. கைக்குழந்தை ஒன்றுக்கு உணவூட்டியபடியே இப்படிச் சொன்னார் ஓர் இளம் தாய்.

அவர் சொல்வதும் உண்மைதான். எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் இடமளிக்கா வண்ணம் மிகக் குறுகிய பிரதேசத்துக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள மக்களிடம் நாளுக்குநாள் நம்பிக்கையீனமே பெருகும். சாந்தபுரத்து மக்கள் தாங்கள் இடைத்தங்கல் முகாமில் இருக்கின்ற ஒவ்வொரு நாளும் தமது பழைய உத்வேகத்தையும் நம்பிக்கையையும் மெல்ல மெல்ல இழந்து கொண்டிருப்பதை பார்த்தவுடனேயே புரிந்து கொள்ள முடிந்தது. மழையால் சிதைந்து போன தமது கூடாரங்களை ஒரு சிலர் செப்பனிட்டுக் கொண்டிருக்க பெரும்பாலானோர். சேற்று நிலத்துக்குள்ளேயே இன்னொரு பிளாஸ்ரிக் தறப்பாளை விரித்துவிட்டு பொழுதுபோகாதவர்கள் போல சாய்ந்தபடி படுத்திருந்தார்கள். பெண்களில் பெரும்பாலானோர் ரயில் வரிசைபோல ஒருவர் பின் ஒருவராய் குந்தியிருந்து பேன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேறென்னதான் அவர்கள் செய்ய முடியும்?

முன்னர் அவர்கள் சும்மா இருக்கவே நேரமிருக்காது. தோட்டம், துரவு என்று பார்த்துப் பார்த்து வேலை செய்யவும், இரணைமடுக் குளத்தில் மீன்களைப் பிடிக்கவும், அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குச் சென்று விறகு வெட்டி வரவும் சென்று விடுவார்கள். இல்லா விட்டால் கூலி வேலைக்காவது சென்றுவிட்டு மாலை மங்கியபின்தான் வீட்டுக்கு வருவார்கள். மாலையிலும் அவர்கள் சும்மா இருப்பதில்லை கிடுகு பின்னுதல், வீட்டுத் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுதல் என்று ஏதோ ஒரு வேலையில் தங்களை ஈடுபடுத்தி விடுவார்கள். அங்கு நடமாடிக் கொண்டிருந்த எல்லோரது கைகளிலும் உள்ள உறுதியும் பலமும் அவர்களின் கடந்த கால உழைப்பினை சாட்சியப்படுத்திக் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு மப்பும் மந்தாரமுமான சூழலும் நாங்கள் போவதற்கு முன்னர் அங்கு கொட்டித் தீர்த்திருந்த பெருமழையும் கலைமகள் வித்தியாலயத்தில் அடைந்து கிடந்த மக்களை இன்னும் சோம்பலுக்குள் வீழ்த்தியிருந்தது. அவர்களது இயங்குதளவெளி கூடாரங்களுக்குள்ளேயே பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டிருந் தது. இத்தகைய சூழலும், கட்டுப்பாடான நகர்வுப் பிரதேசங்களும், நீண்டகாலம் காத்திருப்பதால் ஏற்பட்ட மன உளைச்சலும் சேர்ந்து சாந்தபுரத்து மக்களை சோர்வடையச் செய்து விட்டன. அதனால்தான் என்ன செய்தும் எதுவும் நடக்கப் போவதில்லை என்ற நினைப்பின் மேலீட்டால் அவர்கள் தமது பொழுதை வெறுமனே போக்காட்டிக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் அப்படி என்றும் சொல்லிவிட முடியாதபடி ஒரு சிலர் நாளைய எதிர்காலத்திற்காக மும்முரமாக உழைப்பதையும் தற்செயலாகக் காண முடிந்தது. அரசாங்கத்தாலோ அல்லது ஏதோவொரு தொண்டு நிறுவனத்தாலோ வழங்கப்பட்ட படகுகள் இரண்டு ஒரு வகுப்பறையின் முன்னே கவிழ்த்து வைக்கப்பட்டிருக்க அதனருகே ஒரு தாயும் மகனும் உட்கார்ந்திருந்து புதிய வலைகளைச் சீர்படுத்திக் கொண்டிருந்தனர். இன்னமும் மீன் பிடிக்க அனுமதியில்லை தவிர சொந்த இடத்திற்கும் போக முடியாத நிலை. என்றாலும் என்றைக்கோ ஒருநாள் அவையெல்லாம் கிட்டிவிடும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்தும் அவர்கள் வலைகளை சிக்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். [illegible] பார்க்[illegible] இருந்தது.

நம்பிக்கைகள் வெகு தூரத்துக்கு நகர்ந்து சென்றிருந்தபோதும் அதைப்பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாது எல்லாவற்றையுமே அனுகூலங்களாக மாற்ற நினைக்கின்ற அந்தத் தாயும் மகனும் மீளக்குடியேறிய எல்லோருக்குமே



ஆதர்சமாக விளங்குவதுபோல பட்டது. தொடர்ந்துவரும் இன்னல்களைக் கண்டு துவண்டு கிடக்காமல் நடந்தவற்றையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு மீளவும் தமது வாழ்வினைக் கட்டியெழுப்ப இத்தகைய மனோபலமே மக்களிடம் உருவாக்கப்படவேண்டியுள்ளது. சாந்தபுரத்து மக்கள் நீண்டகாலம் அலைதலின் வாழ்வை அனுபவித்து விட்டதால் அவர்கள் உடலளவிலும், உளரீதியிலும் மிகக் கடுமையாகவே சோர்வுற்று விட்டார்கள். இது தவிர இறுதி யுத்தத்தின்போது அவர்களது உறவுகள் பலரும் இறந்துவிட்டதாலும் அவர்களது உளவலி இன்னும் அதிகப்பட்டே இருக்கிறது. ஆனாலும் வலிகளை தொடர்ந்தும் சுமந்துகொண்டிருக்க முடியாது. சாந்தபுரத்தில் நிலைமையின் தன்மை எதுவும் புரியாதவர்களாக பாடசாலை வளாகமெங்கும் ஓடித் திரிந்துகொண்டிருந்த குழந்தைகள் இதைத்தான் உணர்த்திக் கொண்டிருந்தார்கள். அந்தக் குழந்தைகளாவது சாந்தபுரத்து மக்களைப் போல இன்னலுக்குள் வாழாமல் மற்றவர்களைப் போல ஆனந்தமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். அதற்காகவேனும் சாந்தபுர மக்கள் பழையபடி இயங்குநிலைக்கு மீளவேண்டும்.

மீள்வார்கள் என்ற நம்பிக்கையில் அங்கிருந்து மெல்ல விடைபெற்றோம். வழியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர்ப்பட்டது. உருத்திரபுரத்தில் மீளக்குடியேற்றத்திற்காக காலையிலிருந்து காய்ந்து கொண்டிருந்த அந்த மக்களைப் பார்க்கையில் மீண்டும் மனதுக்குள் ஒரு துயர் எழுந்தது. 'இவர்களுக்கும் இன்னொரு சாந்தபுரத்து மக்களாக மாறி மீள்குடியேற்றத்தில் இழுபடப் போகிறார் களோ?' என்ற எண்ணம் ஏனோ ஏற்பட்டது. உருத்திரபுர மக்களாவது இழுபறியில்லாமல் சொந்த இடங்களுக்குச் சென்று பழையபடி வாழ்க்கையைத் தொடங்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டே நகர்ந்தோம். வானம் கருமேகங்களைத் தொலைத்து விட்டு மெதுவாகத் தெளியத் தொடங்கியிருந்தது.

*(ஒரு நாள் பயணம் முடிந்தது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் குடியமர்ந்துள்ள அரச அலுவலருக்கு வீடமைப்புக் கடனாக ரூபா 2 லட்சம்

## விண்ணப்பங்களை அலுவலகங்களில் பெறலாம்

கிளிநொச்சி,செப்.2

வன்னிப் பிரதேசத்தில் மீள் குடியேறிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முன் வந்துள்ளது. ஒரு பயனாளிக்கு ரூபா 2 லட்சம் வீதம் கடனாக வழங்கப்படவுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தம் முடிவடைந்து அமைதி நிலவுவதைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தில் மீளக் குடியேற்றம் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. அதேநேரம் அங்கு வசிக்கும் மக்களின் வசதி கருதி அரச அலுவலகங்களும் திறக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளன.

இதைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தில் அரசாங்க ஊழியர்களும் மீளக் குடியேறியுள்ளார்கள். அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையுடன் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும் வீடுகளை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இவர்களுக்கு கடனாக ரூபா 2 லட்சம் வழங்க முன்வந்துள்ளது.

இருவருடைய பிணையுடன் கடனைப் பெறவிரும்பும் பயனாளிகள் அதற்குரிய விண்ணப்பங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்களில் பெற்று அனுப்பிவைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடனுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விரைவாக காசோலை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)

# உடைந்து விழும் நிலையில் ரெய்லர் வீதியிலுள்ள பாலம்

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி உருத்திரபுரம் வீதியில் இருந்து கணேசபுரத்திற்கு வரும் ரெய்லர் வீதியில் அமைந்துள்ள பாலம் நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ளது. இதனால் இப்பாலத் தினூடான பயணம் ஆபத்தானதாக மாறியுள்ளது. இப்பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் உள்ளது.

ஏற்கனவே சேதமாகிய இப்பாலம் தற்காலிகமாக மரங்கள், பரல்கள் கொண்டு புனரமைக்கப்பட்டது. தற்போது இப்பாலத் தினூடாகப் பல கனரக வாகனங்களும், மணல் ஏற்றிய டிராக்டர்களும் செல்வதனால் இது உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. இதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் கருத்தில் கொண்டு விரைந்து புனரமைக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோருகின்றனர். (க-405)

# புதிய நிவாரண முத்திரைகள் இதுவரை வழங்கப்படவில்லை

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழான உலர் உணவு நிவாரணத்திற்கு புதிய முத்திரைகள் விநியோகிக்கப்படவில்லை. ஏற்கனவே பொருள்கள் வழங்கி முடிந்துள்ள பழைய முத்திரை களிலேயே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. பழைய முத்திரைகள் கடந்த மாதத்துக்கான பொருள்களைப் பெற்றதுடன் முடிவடைந்துள்ளன.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ப.நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல்களில் அடிப்படையில் பழைய முத்திரைகளில் சிறுபதிவினை மேற்கொண்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (த-405)

# மன்னார் மூர் வீதி மக்களுக்கு வீடமைப்பு உதவிகள் இல்லை

மன்னார்,செப்.2

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு நாடு பூராகவும் வீடமைப்பு மானியங்கள் வழங்கப்பட்டு வரும் இவ் வேளையில் மன்னார் மூர்வீதியில் 1991 இல் மீளக் குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு இன்று வரையில் ஒரு வீடு கூட வழங்கப்படாமை அரசாங்கத்தினதும் மன்னாரில் இயங்கும் அரச திணைக்களங்களதும் அசமந்தப் போக்கு என மூர்வீதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2005 முதல் மன்னார் மாவட்ட முழுவதும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் (நேர்ப்) பலநூறு வீடுகளை இங்கு வழங்கியுள்ளபோதும் மூர் வீதி மக்களுக்கு எதுவுமே வழங்கப்படவில்லை.

மீளக் குடியேறி இங்கு வாழும் சுமார் 100 குடும்பங்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படாமையினால் மக்கள் ஓலைக் கொட்டிலில் வாழ்ந்து வருகின்றனர். (த-80)

# இளம் பெண் மீது பாலியல் பலாத்காரம்; சந்தேக நபர்கள் மூவர் விளக்கமறியலில்

மன்னார்,செப்.2

சென்ற ஞாயிறு மாலை மன்னார் அரச பேருந்து நிலையத்தின் பெண்களுக்கான கழிவறையில் நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட மூவர் மன்னார் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படியும் தலைமறைவாகியுள்ள மற்றுமொரு இளைஞரை உடன் கைது செய்து ஆஜர் படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள இளம் பெண் தனது இயற்கைக் கடனை நிறைவேற்ற பஸ் நிலையக் கழிவறைக்குள் சென்ற வேளையில் திடீரென நான்கு இளைஞர்கள் உள்ளே நுழைந்து மேற்படி பெண்ணை பலாத்காரம் புரிய முயன்றனர். அவ்வேளையில் யுவதியின் கூக்குரல் கேட்டு பஸ் நிலையத்தில் ரோந்துக் கடமையிலீடுபட்டிருந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து யுவதியைப் பாதுகாத்ததுடன் இளைஞர்களையும் கைது செய்ய முயன்ற வேளையில் இளைஞரில் ஒருவர் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வருகின்றது.

சமீப காலமாக மன்னார் பேருந்து நிலையத்தில் இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருவதையும் குற்றவாளிகள் தப்பிச் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-80)

# கணேசபுரம் முன்பள்ளி மீண்டும் இயங்குமா?

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி கணேசபுரத்தில் இடம்பெயர்வுக்கு முன்னர் இயங்கிய முன்பள்ளி மீண்டும் இயங்குமா? என பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இடப்பெயர்வுக்கு முன்னர் கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் சிறப்பாக இயங்கி வந்த முன்பள்ளி இப்பகுதி மக்கள் மீளக் குடியேற்றப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் மீள ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள முன்பள்ளிச் சிறார்கள் நீண்டதூரம் சென்றே முன்பள்ளிக் கல்வியைப் பெறவேண்டியுள்ளது. அத்துடன் சிலர் முன்பள்ளிகளுக்குச் செல்லாமலேயே உள்ளனர்.

இடம்பெயர்வின் போது மழலைகளாக இருந்த இவ் சிறார்கள் பல்வேறு துன்பங்களையும், வலிகளையும் தாங்கி மனதளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் மீளக்குடியேறிய பின்னர் கூடமுன்பள்ளிக் கல்வியைப் பெறமுடியாதுள்ளமை குறித்து இப்பகுதி பெற்றோர் வேதனையடைகின்றனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் அடுத்த தவணை ஆரம்பத்திலேனும் இம் முன்பள்ளியை இயக்க வேண்டும் என அவர்கள் கோருகின்றனர். (க-405)

# திருநகர் நீர்ப்போக்கி அமைக்கும் பணி பூர்த்தி

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகர் செல்லும் வீதியில் மஞ்சுளா பேக்கரிச் சந்திக்கு அண்மையில் நீர்ப்போக்கி அமைக்கும் பணி பூர்த்தியானது. ஒரு வாரத்திற்கு மேலாக ஆமை வேகத்தில் நடந்த இப்பணி இப்போதுதான் பூர்த்தியடைந்துள்ளது.

கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக நடைபெற்ற இப்பணியினால் இவ்வீதியூடான வாகனப் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்திருந்தன. இது தொடர்பாக ஏற்கனவே 'உதயனில்' செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# காசநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை வன்னியிலும் அமைப்பதற்கு நடவடிக்கை

## டாக்டர் ஜமுனானந்தா தகவல்

கிளிநொச்சி,செப்.2

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களில் காசநோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் ஜமுனானந்தா தெரிவித்துள்ளார். வன்னியில் காசநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அநேகமாக இடம்பெயர்ந்த மக்களே இந்த நோயின் தாக்கத்திற்கு அதிகளவில் ஆளாகியுள்ளனர். இதற்குக் காரணங்களாக போஷாக்குக் குறைபாடு, யுத்தத்தின் போது வீசப்பட்ட குண்டுகளிலிருந்து வெளியேறியபுகை, ஏற்கனவே இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சிகிச்சைகளை இடைநடுவில் கைவிட்டமை என்பன கூறப்படுகின்றன. மேலும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஏனையோருடன் நெருக்கமான சூழலில் வசிப்பதும் நோய் இலகுவில் பரவுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தற்போது வன்னி மாவட்டத்தில் காசநோய்க்கான சிகிச்சை நிலையங்கள் இல்லாத காரணத்தால் அங்குள்ள காசநோயாளர்கள் சிகிச்சை பெறும் பொருட்டு யாழ்ப்பாணத்திலுள்ள காசநோய் சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தரவேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் வன்னி மாவட்டத்தில் காசநோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளமையால் காசநோய் கிளினிக் மற்றும் மார்பு நோய் சிகிச்சை கிளினிக் போன்றவற்றை கிளிநொச்சி மாவட்டத்தில் நிறுவுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (த-315-317)








தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் [illegible] அமைக்கப்பட்டுள்ள வெற்றிச் சின்னத்தைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:- கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது கல்வி வலயத்தின்முதல் கல்விப் பணிப்பாளராக இருந்து எமது பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்ட

**உயர்திரு ப.விக்னேஸ்வரன்**

அவர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றமையை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி,
நெடுந்தீவு.

(102735)

## மணிவிழா நாயகனை மனங்குளிர்ந்து வாழ்த்துகின்றோம்



## திரு.நடராசா அருட்சோதி வர்ணன்

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - I

**சேவை விபரம்**

01. கமு/விபுலானந்த ம.வி.காரைதீவு (கி.மா) 01.02.1972-31.12.1976
02. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (யாழ்ப்பாணம்) 01.01.1977 - 31.12.1978
03. யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் 01.01.1979 - 31.12.1988
04. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) 01.01.1989 - இன்று வரை

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இடைநிலை வகுப்புக்களின் சிரேஷ்ட கணிதபாட ஆசானும் இடைநிலை ஆண்மாணவர் குழாம் முழுமைக்குமான பகுதித் தலைவரும் முகாமைத்துவக்குழு, ஒழுக்காற்றுச்சபை உறுப்பினருமான திரு.நடராசா அருட்சோதி வர்ணன் அவர்கள் இன்று 02.09.2010 அன்று தமது சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

*மெல்ல நடைபயின்று மென்முறுவலால்*
*அனைத்து உள்ளம் பல கவர்ந்த உத்தமரே! வித்தகரே!*
*பள்ளிச் சிறார்க்குபாகற்காயாம் கணக்கை*
*வெல்லமாய் மாற்றி விருப்புடனே ஊட்டினீரே!*
*இருபத்தோர் ஆண்டு இந்து அன்னை உயர்வுக்காய்*
*அந்தி பகல் பாராது உழைத்தவரே!*
*பூண்டபணி யாவும் புதுமையுற வைத்தவரே!*
*பள்ளிப் பதிவேடு பத்திரமாய் பேணி வைத்து*
*தெள்ளத் தெளிவாகத் திருத்தமுறத் தந்தவரே!*
*ஏதிலியாய் வந்த ஏழ்மைமிகு மாணவரை*
*தோள்தனியே தட்டி துணிவு பெறச் செய்தவரே!*
*பணி பலவே செய்திட்டீர் மணி பலவே செலவிட்டீர்*
*அணிகலனாய் இந்துவிற்கு அற்புதமாய் மிளிர்ந்திட்டீர்*
*மணிவிழாக் காணுகிறீர் மனம் குளிர்ந்து வாழ்த்துகின்றோம்*
*பிணியாதும் அணுகாது பீடுற்று வாழியவே!*

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**ஆசிரிய சகோதரத்துவம்.**

# பெல்ஜியம் நோக்கிய நடை பயணம் தொடர்கிறது

கொழும்பு, செப்.2

தமிழ் மக்களுக்கு நீதி கேட்டு பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தின் தலைமையகத்தை நோக்கிய மூன்று ஈழத் தமிழர்களின் மனிதநேய பாதயாத்திரை நேற்று முன்தினம் ஐந்தாவது நாளாகத் தொடர்கின்றது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த முதியவரான ஜெகன்(வயது - 62), சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த திருமதி தேவகி குமார் (வயது - 36) மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த வினோத் (வயது - 48) ஆகிய மூன்று ஈழத் தமிழர்களும் மோசமான காலநிலையிலும் தமது பாத யாத்திரையைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

ஜெனிவாவில் இருந்து ஆரம்பமான இந்தப் பாதயாத்திரை, உண்ணாவிரதம் இருந்து உயிரை நீத்த திலீபனின் நினைவு தினமான செப்ரெம்பர் 26ஆம் திகதி பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்தைச் சென்றடைய வுள்ளது.

ஈழத் தமிழன் சிவந்தன் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி பிரிட்டனில் இருந்து மனிதநேய பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்து கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி தனது கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஜெனிவாவில் உள்ள ஐ.நா.சபையிடம் கையளித்தார் என்பது தெரிந்ததே. (ஒ-சி)

# புலிகள் என்ற சந்தேகத்தில் ஜேர்மனியில் 3 தமிழருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

கொழும்பு, செப்.1

ஜேர்மனியில் வாழும் புலம்பெயர் தமிழர் மூவருக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் அங்கு சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வி.எஸ்.விஜேகணேந்திரா (வயது - 35), எம். சசிதரன் (வயது - 33), ரி. கோணேஸ்வரன் (வயது - 39) ஆகியோரே இம்மூவரும் ஆவர். இவர்கள் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் தடை செய்யப்பட்ட அமைப்பான புலிகள் இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றமை, புலிகள் இயக்கத்துக்கு நிதி மற்றும் பொருள்களைச் சேகரித்து வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (சி)

## வாழ்த்துகின்றோம்



இன்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும்

**திரு.சி.ரமணராசா**
B.A (Hons)

அவர்களை மேலும்பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**மாணவர் குழுமம்**
(மகேந்திரன் G.S)
இருபாலை.

(102733)


VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


ஸ்ரீ ஐயப்பன் துணை

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் (03.09.2010) வெள்ளிக்கிழமை காலை 9.08 மணிமுதல் 9.59 மணிவரையுள்ள மிருகசிரிட நட்சத்திரம் தசமித் திதியும் சித்தயோகமும் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் சிரேஷ்ட குமாரன் சிரஞ்சீவி **கஜானன சர்மாவிற்கு**

எங்கள் கனிஷ்ட குமாரி சௌபாக்கியவதி **பாக்கியலட்சுமியை**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகப்பெருமானின் திருவருட் துணையுடன் பெரியோர்களினால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி சுபமுகூர்த்தம் நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

03.09.2010 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் சமாவர்த்தனமும், 06.09.2010 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வரவேற்புபசாரமும் மணமகனில்லத்தில் நடைபெறும்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை அன்புடன் வரவேற்கும்
பிரம்மஸ்ரீ பு. சதாசிவக்குருக்கள் பாக்கியலட்சுமி அம்மா

பிரம்மஸ்ரீ ச.புவனேந்திர சர்மா
ஜெயராணி தம்பதிகள்
இலங்கைநாயகி அம்மன் கோவிலடி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

சுபம்
(இருவீட்டார் அழைப்பு)

பிரம்மஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஜெயகௌரி தம்பதிகள்
வேதாரணியம் 45, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7616


Internationally Recognized and Affordable
UK Qualification

Delivered locally...... Recognized globally......

edexcel BTEC

HND
Higher National Diploma
in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900



New Batch Starts on 10.09.2010

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu...


## மஹஜன சம்பத / Mahajana Sampatha

31.08.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2286

வெற்றி எழுத்து: A
வெற்றி எண்கள்: 1 5 8 1 3 5

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 1 | 5 | 8 | 1 | 3 | 5 | ரூபா 23,166,672/= | |
| 1 பரிசுகள் | ■ | 1 | 5 | 8 | 1 | 3 | 5 | ரூபா 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | ■ | ■ | 5 | 8 | 1 | 3 | 5 | ரூபா 100,000/= | 13 |
| 3 பரிசுகள் | ■ | ■ | ■ | 8 | 1 | 3 | 5 | ரூபா 10,000/= | 130 |
| 4 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | 1 | 3 | 5 | ரூபா 1,000/= | 1277 |
| 5 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | 3 | 5 | ரூபா 100/= | [illegible] |
| 6 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 5 | ரூபா 20/= | [illegible] |
| 7 பரிசுகள் | ■ | 1 | 5 | 8 | 1 | 3 | ■ | ரூபா 10,000/= | 14 |
| 8 பரிசுகள் | ■ | 1 | 5 | 8 | 1 | ■ | ■ | ரூபா 1,000/= | 128 |
| 9 பரிசுகள் | ■ | 1 | 5 | 8 | ■ | ■ | ■ | ரூபா 100/= | 1276 |
| 10 பரிசுகள் | ■ | 1 | 5 | ■ | ■ | ■ | ■ | ரூபா 50/= | 12624 |
| 11 பரிசுகள் | A | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா 20/= | 90873 |

Rs. 13,746,940.00

அடுத்த சீட்டிழுப்பிலான சுப்பர் பரிசு
Rs. 23,286,923.00

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் நீர்கொழும்பில்

## வடமாகாணத்திலிருந்து 9 அணிகள்

வலி.வடக்கு, செப் 02

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே இலங்கை கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ள ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதில் வடமாகாணத்திலிருந்து 9 பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

நீர்கொழும்பு டொன் பொஸ்கோ விளையாட்டரங்கு, சாந்தமரியா விளையாட்டரங்கு, மேஜர் ராஜ் விளையாட்டரங்கு தவிந்த மென்டிஸ் விளையாட்டரங்கு, மரிய ஸ்ரெலா பாடசாலை விளையாட்டரங்கு, ஆவே மரியா பாடசாலை ஆகிய ஆறு விளையாட்டரங்கு மைதானங்களில் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

17வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் 330 வீரர்களும், 19 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் 330 வீரர்களுமாக சுமார் 660 பேரும் பெண்கள் பிரிவில் 335 பேரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாணத்தில் இருந்து 17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும் 19 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி ஆகியனவும் கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

# 200 மீற்றர் ஓட்டப்போட்டி லக்சினியின் சாதனை பதிவு

வலி.வடக்கு, செப் 02

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தடகளப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்சினியின் 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் பெறுபேறு வடமாகாணத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களின் சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் பதிவு செய்யப்படவுள்ளது.

2007ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.நிரஞ்சனா 30.3 செக்கனிலும், 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தி 29.4 செக்கனிலும், இவ்வாண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்சினி 28.06 செக்கனிலும் ஓடியமை சிறந்த பெறுபேறுகளாகக் காணப்பட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளின் அடிப்படையில் வடமாகாணத்தின் சாதனையாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்சினியின் 28.6 செக்கன் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# பாடசாலை உதைபந்தாட்ட அணிகளின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப் 02

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினரால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் நடுப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)



இலங்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் இடத்தை சுவீகரித்துக் கொண்ட வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக அணியினர் கழகத் தலைவர் யோ. அலெக்ஸ்சாந்தர், செயலாளர் கு.மோகனதாஸ், நிர்வாக உறுப்பினர்கள், அணித்தலைவர் ஜனாப் அ.மக்கீன், பயிற்றுவிப்பாளர் சி. வசந்தகுமார், அணி முகாமையாளர் அ. சத்தியகாந்தி ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# ஆண்களுக்கான கரப்பந்தாட்டம்; நெடுந்தீவில் ஜே-05 சம்பியன்

வலி.வடக்கு, செப் 02

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 40ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஜே-05 கிராம அலுவலர் பிரிவு சம்பியனாகியது.

நெடுந்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜே-04 கிராம அலுவலர் பிரிவும், ஜே-05 கிராம அலுவலர் பிரிவும் மோதிக் கொண்டன

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை ஜே-05 கிராம அலுவலர் பிரிவு 25:14, 25:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

மாவட்டமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் விளையாட ஜே-05 கிராம அலுவலர் பிரிவு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# உடுவில் கிங்ஸ்ராரை 4 விக்கெட்டுக்களால் வென்றது உரும்பிராய் திருக்குமரன் வி.க

யாழ்ப்பாணம் ,செப்.2

உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி.

யாழ்ப்பாணம் மனித உரிமை இல்லத்தினால் வாக்குப் பதிவினையும், வாக்களிப்பின் முக்கியத்துவத்தையும் ஊக்கப்படுத்தும் முகமாக கிராம மட்டத்தில் நடத்திய கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு இடையேயான மாவட்ட மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் உடுவில் கிங்ஸ்ரார் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணிமோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிஷாந்தன் எட்டு ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி வீரன் தயா. இரண்டு விக்கெட்டுக்களையும், ஷொம்சன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

37 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி 4.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டினை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அருண் 15 ஓட்டங்களையும் நவயுகன் 13 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக திருக்குமரன் அணி வீரன் அருணும், சகலதுறை ஆட்ட நாயகனாக ஷாம்சனும், தொடர் ஆட்ட நாயகனாக கிங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் கிருஷாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (த-23)




# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப் 02


இலங்கை மெய்வன்மை சங்கம் நடத்தும் மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் தரம் II பரீட்சைக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்பிலிருந்து வருகைதரும் இலங்கை மெய்வன்மை சங்கத்தின் வளவாளர்களால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் தொழில்நுட்ப அலுவலர் தரம் II பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ்ப்பாண மெய்வன்மை தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். மேலதிக விவரங்களை செயலாளரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# அஞ்சல் தினத்தை முன்னிட்டு ஒலிம்பிக் தீப ஊர்வலம்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட தபால் திணைக்கள ஊழியர்கள் நடத்தும் ஒலிம்பிக் தீப ஊர்வலம் இன்று காலை 6 மணிக்கு புங்குடுதீவு தபாலகத்தில் இருந்து ஆரம்பமாகி ஊர்காவற்றுறை, காரைநகர், சங்கானை, மானிப்பாய் ஆகிய இடங்களூடாக யாழ்.தபாலகத்தைச் சென்றடையும்.

இதேவேளை பருத்தித்துறை முனையிலிருந்து அன்றையதினம் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் ஒலிம்பிக் தீப ஊர்வலம் கரவெட்டி, அச்சுவேலி, சுன்னாகம், கொக்குவில் ஆகிய இடங்களூடாக யாழ்.தபாலகத்தைச் சென்றடையவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-201-188)



இலங்கை இராணுவத்தின் 51 ஆவது படையணியின் [illegible] ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவ அணியினருக்கு இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் யாழ்.மத்திய கல்லூரி [illegible] படங்கள் இவை. (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவைத் திரும்பப் பெறமுடியாது இந்திய அரசு திட்டவட்ட அறிவிப்பு

டில்லி, செப்.2

கச்சதீவு இலங்கைக்கே சொந்தம். அதை திரும்பப் பெற முடியாது. இரு அரசுகளுக் கிடையிலான அந்த புனிதமான ஒப்பந் தத்தை ரத்துச் செய்ய முடியாது. இலங்கை, நமது நட்பு நாடு. அந்த அம்சத்தை மனதில் கொள்வது அவசியம்.

- இவ்வாறு மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நாடாளு மன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கவன தீர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தார்.

அதன் மீது நடைபெற்ற விவாதத்தில் கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழகத்தில் ஆளும்கட்சியான தி.மு.க. தரப்பிலும், எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தரப்பிலும் ஒருமித்த குரலில் வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்றில் இதுதொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்தை செவ்வாய்க்கிழமை கொண்டுவந்து தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு பேசியவை வருமாறு -

1974 இல் கச்சதீவு தொடர்பாக இந்தியாவும், இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டபோது, மீன் பிடிப்பதும், கடல் எல்லையில் தங்களுக்கு உள்ள உரிமையும் பாதுகாக்கப்பட்டுள்ளது என அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஸ்வரண் சிங் கூறினார்.

அந்த ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கையின் எல்லைக்குள் இருந்தாலும், இந்திய மீனவர்கள் அங்கு ஓய்வு எடுக்கவும், சர்வதேச கடற்பகுதியில் மீன் பிடிக்கும் போது தங்கள் வலைகளை உலர்த்திக் கொள்ளவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆனால், 1976இல் இருநாட்டு செயலர்களும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்ட பின்னர், இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமை மாறிவிட்டது.

நாடாளுமன்றம் மற்றும் மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலேயே அந்தக் கடிதங்கள் ஒப்பந்தத்தின் அங்கமாகிவிட்டன. இது மீனவர்களுக்கு பேரிடியாக அமைந்தது.

எனவே, கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் இருந்து இந்திய மீனவர்களைக் காக்க இந்தியக் கடற்படையின் ரோந்துப் பணியை அதிகரிக்க வேண்டும்.

- இப்படிக் கூறினார்.

இந்த விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் மு.தம்பிதுரை பேசியவை வருமாறு -

இலங்கைக் கடற்படையால் இதுவரை 500 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரம் பேர் முடமாக் கப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரம் பேரைக் காணவில்லை.



இலங்கையுடன் ஒத்துழைப்பு வேண்டும் என்பதற்காக நமது மீனவர்களின் நலன்களை இந்தியா புறக்கணிக்கக் கூடாது.

இந்திய மற்றும் இலங்கைத் தமிழ் மீனவர்களிடையே உள்ள உறவைத் துண் டிப்பதற்காகவே திட்டமிட்டு இந்த ஒப் பந்தம் செய்துகொள்ளப்பட்டதோ என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும். வெறும் கடிதம் எழுதுவதால் மட்டும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இத்தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பதிலளித்து மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியவை வருமாறு -

இரு அரசுகளும் முறையாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது. இலங்கை நட்பு நாடு என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மீன்பிடிப்பது தொடர்பாக 2008 ஒக்ரோபரில் இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்குப் பின் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது பெருமளவு குறைந்திருக்கிறது. 2008 இல் 1,456 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். 2009 இல் அது 127 ஆகக் குறைந்தது. இந்த ஆண்டு ஜூலை வரை 26 மீனவர்கள் மட்டுமே கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் 'அதீத ஆர்வம்' குறித்து இந்தியா கண்காணித்து வருகிறது. இந்தியாவின் எல்லைப் பகுதியைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

## இந்தியச் செய்திகள்

# திருடன் எனப் பட்டம் சூட்டியதால் மாணவன் தூக்கிட்டுத் தற்கொலை



திருவள்ளூர் மாவட்டத்தில் பேக்கரியில் 'ஸ்டேப்ளர்' திருடியதாக 9 ஆம் வகுப்பு மாணவரைத் தாக்கியதால் அவமானம் தாங்காமல் அந்த மாணவர் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனால் மாணவரின் பிணத்தை நடு வீதியில் வைத்து பெற்றோருடன் சேர்ந்து பொதுமக்களும் மறியலில் ஈடுபட்டதால் 4 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சர்வதேசத்திடமிருந்து மஹிந்தவைக் காப்பாற்றவே நிருபமாவை இலங்கைக்கு அனுப்பியது இந்தியா!

## 'ஈழத் தமிழ் ஆதரவுப் பீரங்கி' வைகோ குமுறல்

கோவை, செப்.2

மஹிந்த ராஜபக்ஷக்கு உலகம் முழுவதும் இப்போது கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதனால், மஹிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றவும் தமிழக மக்களை ஏமாற்றவுமே வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவை இந்திய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவுப் பீரங்கியும், தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷக்கு உலகம் முழுவதும் இப்போது கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஐ.நா. பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இதனால், மஹிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றவும், தமிழக மக்களை ஏமாற்றவுமே வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவை மத்திய அரசு அனுப்பி வைத் துள்ளது. இதனால், எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. முள்வேலி முகாம்களில் இருந்தவர்கள் ஊருக்கு அனுப்பப்படாமல் வேறு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தமிழர்களின் வீடுகள் தரை மட்டமாக்கப் பட்டுள்ளன; தமிழர் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர். சிவன் கோவில்களை இடித்து புத்தர் சிலைகளை நிறுவி வருகின்றனர்.



போர் நிறுத்தம் ஏற்பட விடாமல் தடுத்தது நானும், நெடுமாறனும்தான் என்று கடந்த ஆண்டிலேயே உளவுத்துறை கட்டுக்கதையை அவிழ்த்து விட்டது; அது எடுபடவில்லை. இதனால், மஹிந்த ராஜபக்ஷவின் ஊதுகுழலாக மாறி யுள்ள குமரன் பத்ம நாதனை வைத்து அதே கதையை மீண் டும் அவிழ்த்து விடுகிறது.

இதையும் தமிழக மக்கள் நிச்சயம் நம்ப மாட்டார்கள். இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டால், எங்களை விட நிம்மதிப் பெருமூச்சு விடுபவர்கள் யாருமில்லை. அங்கு தமிழர்களுக்கு எதிராகப் போரை நடத்தியதே இந்திய அரசுதான்.

இப்போது இலங்கைக்கு சீனாவும், பாகிஸ்தானும்தான் நெருங்கிய நண்பர்களாகவுள்ளனர். சீனப் படையினர், தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்கு முன்னேறி வந்துள்ளனர். இதனால், இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்திரா காந்தி இருந்தவரையிலும், இலங்கைக்குள் வேறு எந்த நாட்டையும் அனுமதித்ததே இல்லை. இன்றைய காங்கிரஸ் தமிழர்களுக்கு எதிரான கட்சியாக மாறியிருக் கிறது.

- இப்படி வைகோ கூறினார்.

## நீங்காத நினைவுகளில் மூன்றாண்டுகள்



மண் மகிழ

27

03

1944

கண் நெகிழ

04

09

2007

### அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம்

(முன்னாள் முகாமையாளர் IIS Office Automation)

குடும்பத்தின் குல விளக்காய் ஒளி தந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்நெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே
பாசத்தினால் எமை ஆண்டு
பண்பின் சிகரமாய் இருந்து எம்மை
உயர வைத்த எங்கள் தெய்வமே!
மூன்றாண்டு புரண்டோடியும் - உங்கள்
வெற்றிடம் வெற்றிடமாகவே உள்ளது
உங்கள் ஆத்மா சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

273/11 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

# 'எந்திரன்' படத்தின் வர்த்தகம் ரூ. 300 கோடியைத் தாண்டும்

சென்னை, செப்.2

சூப்பர் ஸ்டார் ரஜினியின் எந்திரன் பட வர்த்தகம் தற்போது கிடைத்துள்ள தகவல்களின் படி ரூபா 300 கோடியைத் தாண்டும் என இந்திய திரையுலக வல்லுநர்கள் கருத் துத் தெரிவித்துள்ளனர்.

பிரபல பொலிவுட் இணையதளம் இது குறித்து வெளியிட்டுள்ள செய்தியில்,

'ரோபோ' (ஹிந்தி) படம் சாதனை விலைக்கு விற்கப்பட்டுள்ளது எனவும், கிட்டத்தட்ட 1000 திரையரங்குகளில் திரையிடப்பட உள்ளது எனவும், ரோபோ வெளியீட்டாளர் வீனஸ் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழகத்தில் எந்திரன் விநியோக உரிமை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. சென்னை மாநகர விற்பனை உரிமையை சன் பிக்சர்ஸ் இதுவரை யாருக்கும் கொடுக்கவில்லை.

முதலாவதாக மதுரை ஏரியாவை ரூபா 13 கோடிக்கு விற்றிருக்கிறது எனத் தகவல்கள் கூறுகின்றன. இதனை வாங்கியிருப்பவர் பிரபல விநியோகஸ்தர் மதுரை அன்புவின் தம்பி அழகர். இந்த விலை



பலரையும் வாய்பிளக்க வைத்துள்ளது. மதுரையே இந்த விலை என்றால், சென்னை உரிமை இதைவிட இருமடங்காக இருக்குமோ என்ற கேள்வி விநியோகஸ்தர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மொத்த ஏரியாக்களும் விற்று முடியும் போது எந்திரனின் விற்பனை, இந்திய சினிமாவுலகம் பார்த்திராத சாதனை விலையைத் தொட்டிருக்கும் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

எமது பாடசாலையில் கற்பிப்பதற்கு ஆர்வமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர் தேவை. 05.09.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு சமுகம் தரவும்.

நிர்வாகம்,
நாவலர் பாலர் பாடசாலை.
ஈஞ்சடி, சுதுமலை (102743)

## நாவற்குழி விவசாயிகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்.செப்.2

நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு பிரதேசத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையிலான உரப் பசளை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவற்றைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடைய விவசாயிகள் தங்களது வயல் காணியின் உறுதியின் போட்டோ பிரதி மற்றும் குத்தகைச் செய்கையாளர்கள், சட்டவாளர்கள் உறுதிப்படுத்திய குத்தகைச் சீட்டு ஆகியவற்றுடன் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் நாவற்குழி பலநோக்கு மண்டபத்திற்கு முற்பகல் 10 மணிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-16)

## சிவதீட்சை

யாழ்ப்பாணம்.செப்.2

இந்துக்களுக்கு தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை வவுனியா, குருமண்காடு ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் காலை 9.08 - 09.58 மணிக்கு இடைப்பட்ட சுபவேளையில் நடைபெறவுள்ளது.

சிவதீட்சையை சிவஸ்ரீ க.சிவராசக் குருக்கள் வழங்கவுள்ளார். (ஒ-6)

## பாஷையூர் மீனவர் மரணம்

யாழ்ப்பாணம்.செப்.2

யாழ். குடாக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் மீனவர் ஒருவர் திடீரென மரணமானார்.

பாஷையூரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குருசுமுத்து (வயது 50) என்பவரே மரணமாவர் ஆவார்.

சக தொழிலாளர்களால் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மரண விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-23)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் முன்னாள் புகழ்பூத்த அதிபராகவும் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளராகவும் சிறிய சேவையாற்றி வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள

உயர்திரு.
**ப.விக்னேஸ்வரன்**


அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(கந்தரோடை, சுன்னாகம்.) (102765)

## வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்



வலிகாமம் கல்வி வலய கல்விக்கும் கல்விச்சாலைகளுக்கும் வளம்பல சேர்த்து கல்விதனை எழுச்சியுடன் நல்முயற்சியும் ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர்

**திரு.ப.விக்னேஸ்வரன்**

அவர்கள் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு மிக்க மகிழ்வுடன் உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

**திருமதி R.இருதயநாதன்**
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.
(அ/570513)

## மாபெரும் புத்தகக் கண்காட்சி

இன்று முதல் 7ஆம் திகதி வரை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலய மைதானத்தில்

எமது வெளியீடுகளுக்கு 10% கழிவு

காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை

சிறுவர் நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவு விலையில்...

பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக் கழிவு

**காயத்திரி பப்ளிகேசஷன், கொழும்பு**
**011-2727621, 0777892028**

## கண்ணீர்க் காணிக்கை



எமது சங்கத்தின் முன்னாள் கிராமிய வங்கி முகாமையாளர்

**திருமதி அரியநாயகம் இஸ்ரேலா பராசக்தி**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக்கின்றோம்.

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு. (102768)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி கி.குருபரன் அவர்களின் தந்தை

**வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் மறைவுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரி சமூகம், யாழ்ப்பாணம். (102758)


## A/L 2010 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு.

இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**Real Offer 75% for All**

DMI COMPUTER EDUCATION

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவுடன்
அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா கற்கைநெறிகள்

- DIPLOMA IN PC APPLICATION
- DIPLOMA IN MICROSOFT OFFICE
- ADV. DIP. IN HARDWARE & NETWORKING
- DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
- DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
- DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
- TALLY FINANCIAL ACCOUNTING TRAINING

ICDL AutoCAD INTERNET E-MAIL



மல்ரிமீடியா கற்கைநெறிகள்.

- DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
- MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION
- MASTERS DIP. IN MULTIMEDIA & ANIMATION

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Batch 1 - 5/9/2010 9.00 a.m.
Batch 2 - 6/9/2010 10.00 a.m.
Batch 3 - 10/9/2010 9.00 a.m.

சர்வதேச அங்கீகாரத்துடன்.
veta Experts in English Training An ISO 9001:2008 Company
ITECS IAB

முழுமையானதும் தரமானதுமான கணனி கல்விக்கு.

**DMI COMPUTER EDUCATION**
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-320 7700



## PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD

நம்ப முடியாத விலைகள்!!!
என்றும் எதிர்பாராத அதிரடி விலைக் கழிவு
(இன்றும் 8 நாட்கள் மட்டுமே உள்ளன)



PCST 1
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
47250/=



PCST 3
Intel Dual Core 2.8Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
47800/=



PCST 2
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
50750/=



PCST 5
Intel Core 2 Dou 2.93Ghz
Intel G41 Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
59000/=



PCST 4
Intel Dual Core 2.8Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
51250/=

Dialog
எல்லையற்ற இணையம்
மாதாந்தம் 690/- மட்டுமே!
3.5 Mbps High Speed Broadband Available

| | |
|---|---|
| Dongle 7.2Mbps | -6300/= |
| Web cam | -1100/= |
| UPS DCP | -4300/= |
| UPS Prolink | -4500/= |
| Keyboard | -600/= |
| Mouse | -400/= |
| Headphone | -850/= |
| Router Single Port D.Link | -5000/= |
| Prolink Net Book | -44000/= |
| Printer HP 1102 Laserjet | -15800/= |
| Printer HP Inkjet 1660 | -4750/= |
| Printer Epson Inkjet T10 | -4900/= |

PROLINK Atom Netbook 1 Year Warranty



விசேட விலைக்கழிவு 44000/= மட்டுமே!

M.M.V Road,Nelliady. T.P: 021 226 4999
305, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 222 1101,021 222 3644 E.Mail: pcsjaffna@sltnet.lk
No.5,Kanakapuram Road,Kilinochchi. T.P: 021 228 5360


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி பாரதி மகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**இராசையா நவரத்தினசிங்கம்**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக் களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
(102755)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
ற.ஜமுனா அவர்களின் அன்புத் தந்தை
அமரர்

**செல்லையா குணரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யா/சங்கானை கிழக்கு
விக்னேஸ்வரா வித்தியாசாலை,
சங்கானை. (102761)

பாடசாலைச்
சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியையான



### திருமதி உமையாள் ஸ்ரீகாந்தன்

அவர்கள் இறைபதம் அடைந்ததை அறிந்து மிகுந்த துயரமடைந்தோம். அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்,*
**யா/வட்டு.மத்திய கல்லூரி.** (102740)

## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்
### ஆதனப் பெயர் மாற்றம்

**வட்டாரம் 14**
**கல்வளை வீதி**
**ஆதன இல.141**

வட்டாரம் 14, கல்வளை வீதி, ஆதன இலக்கம் 141 இல் அமைந்துள்ள ஆதனமானது தம்பு இராசதுரையும் பெண் விஜயகுமாரியும் என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு சின்னையா தனேஸ்குமார் பெண் வினிதா என்பவர்களால் 5742/ 03.06.2006 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சின்னையா தனேஸ்குமார் பெண் வினிதா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**செயலாளர்.**
**வலி.தென்மேற்குப் பிரதேச சபை.**
**மானிப்பாய்.**
(102754)

## துயர் பகிர்கின்றோம்



நெடுந்தீவுப் பிரதேச சபையின்
முன்னாள் தலைவரும் சமாதான
நீதிவானுமாகிய புலவர்
A.W. அரியநாயகம் அவர்களின்
பாசமிகு துணைவியார்

திருமதி

**இஸ்ரெலா பராசக்தி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
நெடுந்தீவு பிரதேச சபை.

## தரம் 11 மாணவருக்கான ஆங்கில இலக்கிய விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.2

யாழ். வலயப் பாடசாலைகளில் தற்போது தரம் 11 இல் ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு நாளை 3ஆம் திகதியும், 6ஆம் திகதியும் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## தருமருக்கு அஞ்சலி

மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தருமலிங்கத்தின் 25ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் இன்று காலை 7.30 மணிக்கு தாவடியில் உள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நினைவுக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## 21ம் நாள் நீங்கா நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்வும்



துளிராய் 11 01 1953 — விதையாய் 13 08 2010

அமரர்
**பொன்னம்பலம் நித்தியானந்தன்**

குடும்பத்தின் குலவிளக்காய் கோயில் கொண்டதப்பா,
கூட உள்ள அனைவரையும் மறந்த சென்றதேனப்பா,
திரும்புகின்ற திசையெல்லாம் உங்கள் முகம் தெரியுதப்பா,
தேறவில்லை எங்கள் மனம் தேம்பியே அழுகிறோமப்பா.. அப்பா...

கடந்த 13-08-2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் பொன்னம்பலம் நித்தியானந்தன் அவர்களின்**

இறுதிச் சடங்கில் பங்குகொண்டவர்களுக்கும், அனுதாபந் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு 02-09-2010 இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நாளை 03-09-2010 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

36/2, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர் -

## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான
## கேள்வி அறிவித்தல் - 2010

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இக்ராட் (ICTAD) இல் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்தும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 02.09.2010 முதல் 09.09.2010 மதியம் 12 மணி வரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி : 13.09.2010 மு.ப. 10 மணிவரை.
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 13.09.2010 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)
4. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபாரிசுக் கடிதத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
6. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இருகடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரங்களின் பெறுமதிசேர்வரி (VAT) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதிசேர்வரி (VAT) 12% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இந் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
8. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியில் இருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | திட்டம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|---|
| 1. | யா/உடுவில் முருகமூர்த்தி வித்தி. இருமாடிக் கட்டட க.பொ.த (சா/த) விஞ்ஞான ஆய்வு கூட நிர்மாணம் - 40' X 25' (கீழ்தளம்) | 1000.00 | ESDP | 29,000.00 | M7/C8 |
| 2. | யா/இணுவில் மத்திய கல்லூரி. மூன்றுமாடி விசேட கல்வி கட்டட நிர்மாணம் மற்றும் மலசலகூடத் திருத்தம் - 40' X 25' (கீழ்தளம்) | 1000.00 | ESDP | 30,000.00 | M7/C8 |

**பாடசாலை வேலைப்பகுதி,**
**வலிகாமம் வலயம்.**
(சி/570512)

**ப.விக்னேஸ்வரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**

## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி
## கேள்வி அறிவித்தல் - 2010

**கரைச்சிப் பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த பதிவுத் தரமுடைய ஒப்பந்தகாரர் கீழ் குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களை 07.09.2010 ஆம் திகதி 3 மணி தொடக்கம் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அதற்கு முத்திரை வைத்துச் செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநெச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும், இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு 20.09.2010 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 20.09.2010 ஆம் திகதி பி.ப. 3 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி NBT (3%) (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | உமையாள்புரம் கழிவகற்றல் பிரதேசம் மட்டப்படுத்தலும், வீதி அமைத்தலும் | C9 | ரூபா. 10,000.00 | ரூபா. 750.00 | ரூபா. 112.50 |
| 02 | பொது மலசலகூடம் அமைத்தல் ஏ-9 வீதி | C9 | ரூபா. 10,000.00 | ரூபா. 750.00 | ரூபா. 112.50 |

**கரைச்சிப் பிரதேச சபை**
**கிளிநொச்சி.**
**01.09.2010**
(சி/570516)

**பொன். நித்தியானந்தம்**
**விசேட ஆணையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் விதவைகளின் வாழ்க்கை நிலையை உயர்த்த இந்திய 'சேவா' நிறுவனம் வருகிறது

## கிழக்கு முதலமைச்சரிடம் நிருபமா ராவ் தெரிவிப்பு

கொழும்பு,செப்.2

கிழக்கிலுள்ள விதவைகளின் வாழ்க்கை நிலையை உயர்த்த இந்தியாவில் இயங்கும் 'சேவா' என்ற மகளிர் அமைப்பின் வேலைத்திட்டங்கள் விரைவில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் என இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் உறுதியளித்தார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் நேற்று 10.30 மணியளவில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்று அவரைச் சந்தித்தார்.

கிழக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இவர்களது வாழ்க்கையை மேம்படுத்த இந்தியா உதவி வழங்க வேண்டும் என ஏற்கனவே முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை விடுத்திருந்தார்.

வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் இது குறித்து முதலமைச்சரிடம் தெரிவிக்கையில்,

இந்தியாவில் இயங்கும் 'சேவா' என்ற மகளிர் அமைப்புக்கும் இந்திய அரசுக்கும் இது குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது. இந்த 'சேவா' மகளிர் அமைப்பு விரைவில் கிழக்கு மாகாணத்தில் விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் விதத்தில் பல திட்டங்களை ஆரம்பிக்கும்- என்றார்.

இந்த 'சேவா' மகளிர் அமைப்பு இந்தியாவில் அநாதரவான பெண்களுக்கு உதவுவதில் முன்னணி வகிக்கும் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் மட்டுமல்லாது, கிழக்கு மாகாணத்தில் சம்பூர், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஒரு சாரார் மீளக்குடியமர்த்தப்படாமல் முகாம்களில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

குறிப்பாக சேதமடைந்த வீடுகளைத் திருத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தரமான புதிய வீடுகளைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்திய அரசு வழங்கும்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் ஏனைய அபிவிருத்தி தொடர்பாகவும் முதலமைச்சருடன் கலந்துரையாடியதாக நிருபமாராவ் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிக்கையில், இந்திய வெளியுறவுச் செயலாளருடன் நடத்திய பேச்சு திருப்திகரமாக அமைந்திருந்தது - என்றார். இதன்மூலம் கிழக்கு மாகாணம் எதிர்காலத்தில் பயனுள்ளதான பல அபிவிருத்தித் திட்டங்களை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் - என்றும் கூறினார்.

இதேவேளை, இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்காக இந்திய அரசினால் வழங்கப்பட்ட கூரைத் தகடுகள் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பவற்றை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் காரியாலயத்துக்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் தனது விஜயத்தின் போது வழங்கியுள்ளார். (ஒ-சி)



இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் திருமலைக்கு விஜயம் செய்தபோது புகழ்பெற்ற கோணேஸ்வரம் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடத் தயாராகிறார்...

# குப்பை கொளுத்தியவேளை தீப்பற்றிய சிறுமி நேற்று மரணம்

யாழ்ப்பாணம்.செப்.2

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது குப்பை கொளுத்திய வேளையில் நெருப்பில் அகப்பட்டு எரிகாயங்களுக்குள்ளான 8 வயதுச் சிறுமி சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

குப்பையைக் கொளுத்தியபோது சிறுமி அணிந்திருந்த 'நைலோன்' சட்டையில் தீப்பற்றிவிட்டது. உடலில் எரிகாயங்களுடன் சிறுமி யாழ்.போதனா வைத்திய சாலையில் கடந்த 27ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். கொடிகாமம் பாலாவி வடக்கைச் சேர்ந்த குணரத்தினம் சங்கீதா (வயது8) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(ஒ-207-15)

# நாணயத் தாள்களை கடத்த முயன்றவர் கைது!

கொழும்பு, செப்.2

சட்டவிரோதமான முறையில் 65 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை சிங்கப்பூருக்கு கொண்டு செல்ல முயற்சித்தார் என்று கூறப்படும் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சுங்கப்பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்த பயணப்பையைச் சோதனையிட்டபோது அதிலிருந்து சுவிஸ் பிராங், யூரோக்கள், சிங்கப்பூர் டொலர் மற்றும் இலங்கை ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். கைதுசெய்யப்பட்டவர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.(சிO)

**யாழ்.செயலகத்தில் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும்**

# அரசாங்க அதிபர்களின் மாநாட்டுக்கு வருகின்றனர் அமைச்சர் குழுவினர்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்தின இங்கு வருகை தரவுள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் எதிர் வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் இம் மாநாடு நடைபெறும். 6ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் பொது நிர்வாக அமைச்சின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ண மாவட்ட மட்ட கரபந்தாட்டப் போட்டியை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க, அமைச்சின் செயலாளர் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர்களுக்கான மாநாடு இடம் பெறும். இந்த நிகழ்விலும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் கலந்து கொள்வர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ள அரசாங்க அதிபர் மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்றும் அரச அதிபர்களுடன் வருகை தரும் குடும்பத்தினரை தங்கவைப்பதற்காக தனியார் விடுதிகள் ஒழுங்குசெய்யப்பட் டுள்ளன என்றும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ஒ-15)

# ஜே.வி.பியின் கோரிக்கை எழுத்துமூலம் நீதிமன்றுக்கு

கொழும்பு, செப்.2

அரசமைப்புத் திருத்த யோசனைகளை சர்வஜன வாக்கெடுப்புக்குவிட உத்தர விடுமென்ற கோரும் கோரிக்கையை ஜே.வி.பி. நேற்று உயர் நீதிமன்றுக்கு எழுத்து மூலம் வழங்கியது.

ஜே.வி.பி. இந்தக் கோரிக்கையை நேற்றுமுன்தினம் வாய்மூலமாக நீதிமன்றில் முன்வைத்தது. இதை செம்டெம்பர் முதலாம் திகதி காலை 10 மணிக்கு முன் எழுத்துமூலம் வழங்குமாறு நீதிமன்றம் கூறியிருந்தது. அதற்கமையவே நேற்று இக்கோரிக்கை எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட்டது.

ஜே.வி.பியின் சட்டத்தரணி சுனில் வட்டகலவே இதை நேற்று நீதிமன்றில் ஒப்படைத்தார்.

அரசமைப்புத் திருத்த யோசனைகளை அவசர சட்டமாக இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது. இந்த யோசனைகளை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுமாறு நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு உத்தரவிடவேண்டும் என்று அந்தக் கோரிக்கையில் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் திருத்த யோசனையை நாடாளுமன்றில் நிறைவேற்ற விடாது மக்கள் போராட்டத்தை நடத்தப் போவதாக ஜே.வி.பி. கூறியுள்ளது. அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டாம் என்று அக்கட்சி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ஒ-சி)

# கரப்பந்தாட்டம்

தென்மராட்சி.செப்.2

தென்மராட்சி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான ஜனாதிபதி தங்கக் கிண்ண பிரதேச மட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

(ஒ-207)

# ஒழுக்காற்றுக் குழு முடிவுக்கு சமுர்த்தி சங்கங்கள் கண்டனம்

## மேர்வின் சில்வா விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கிறது

கொழும்பு,செப்.2

சமுர்த்தி முகவரை மரத்தில் கட்டி தண்டனை வழங்கிய மேர்வின் சில்வா எம்.பி. குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் தீர்மானத்தை சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்தச் சம்பவத்தை நாடகமாகக்காட்டும் அரசின் போக்கு கண்டிக்கத்தக்க விடயமாகும் என்றும் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நாட்டில் உள்ள சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அரசு நழுவல் போக்கைக் கடைப்பிடித்துள்ளது என்றும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஒ-சி)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'கொங்கிறீட்' தடுப்புடனான வீதிகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.2

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ்.யாழ்.மாவட்டத்தில் 4 பிரதேச சபைகளின் குறித்த சில வீதிகள் 'கொங்கிறீட்' தடுப்புக்களுடன் மேம்படுத்தப்படவுள்ளன.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் இதற்குரிய கேள்விப்பத்திரங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 17ஆம் திகதிவரை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

இத்திட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட 3 கிலோமீற்றர் நீளமான 4 வீதிகள் 1.67 மில்லியன் ரூபா செலவிலும் -

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட 3.2 கிலோமீற்றர் நீளமான 2 வீதிகள் 1.51 மில்லியன் ரூபா செலவிலும் -

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 5.89 கிலோமீற்றர் நீளமான 11 வீதிகள் 4.18 மில்லியன் ரூபா செலவிலும் - வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட 7.3 கிலோமீற்றர் நீளமான 4 வீதிகள் 31 மில்லியன் ரூபா செலவிலும் -

இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-121)

# மீளாய்வுக் கூட்டம் நாளை நடைபெறாது

யாழ்ப்பாணம்.செப்.2

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.


CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 01, 2010

| | |
|---|---|
| பங்குச்சந்தைச்சுட்டிகள் | |
| அனைத்துப்பங்கு(ASPI) | 5,690.20‘! |
| மிலங்கா(MPI) | 5,909.32‘! |
| உரிமைமுதல் தகவல்கள் | |
| வியாபாரப்புரள்வு(Rs.) | 2,723.98Mn |
| பங்குகளின் அளவு(No.) | 122.01Mn |
| வியாபாரம்(No.) | 19,405 |
| சந்தை முதல்(Mkt.Cap) | 1,873.37Bn |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | |
| அதிகரிப்பு(Top 5 gainers)விலை | Rs. |
| எல்.பி. பினான்ஸ் | 194.10 |
| சதோச மோட்டர்ஸ் | 203.00 |
| த பினான்ஸ் | 53.40 |
| கொழும்பு பார்மசி | 845.00 |
| எல்பிட்டிய | 50.80 |
| குறைவு(Top 5 losers) - விலை | Rs. |
| ஆசிரி சென்றல் | 144.10 |
| சாம்சன் இன்ரநஷனல் | 92.00 |
| உடப்புசலாவ | 49.20 |
| ஜே.எல். மொரிஷன் | 1293.70 |
| சிங்க லங்கா | 200.00 |

மேலதிக தகவல்கள் - www.cse.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாக வாக்களிக்கும் என்று ஏற்கனவே தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளுள் இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பும் எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்துவிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி இது தொடர்பான அதன் முடிவை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஐ.தே.கவின் செயற்குழு நேற்றுக்கூடி திருத்த யோசனைகளை ஆராய்ந்து பார்த்து அதற்கு ஆதரவளிப்பதில்லை என்று முடிவெடுத்தது.

செயற்குழுவின் இந்த முடிவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்காது அதன் கால எல்லையை நீடிக்கும் இந்தத் திருத்த யோசனைகளுக்குத் தம்மால் ஆதரவு வழங்க முடியாது என்றும் இது குடும்ப ஆட்சியைப் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றும் ரணில் கூறினார்.

அதேபோல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பும் இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இதற்கு எதிராக நாடு பூராகவும் மக்கள் போராட்டங்களை நடத்த அக்கட்சி தீர்மானித்துள்ளது.

எது எப்படி இருப்பினும், அரசமைப்புத் திருத்த யோசனைகளை நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு பெற்றுவிட்டது. (அ-சி)

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து உயர்நீதிமன்ற பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

போர்க் குற்றம் புரிந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பலரை அமெரிக்கா கடந்த காலங்களில் கைதுசெய்து நாடு கடத்தியுள்ளது. அமெரிக்க நாசிக்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பலரை அக்குற்றம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட காலகட்டத்தின் பின்னர் பல ஆண்டுகள் கடந்த பின்னரும் கைதுசெய்திருந்தது.

இருந்தும் இலங்கை நிலைமை வித்தியாசமானது. ஏனெனில், இந்த யுத்தக் குற்றச்சாட்டுகள் நீதிமன்றம் ஒன்றினால் முன்வைக்கப்படவில்லை. மாறாக சர்வதேச மக்கள் அமைப்புக்களான சர்வதேச நெருக்கடிக் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை ஆணையம் போன்றவற்றால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதியின் ஆணைக்கு உட்பட்டு இயங்கும் இராணுவத்தினரால் யுத்தக் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான பல ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக அந்த அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்கள், வைத்தியசாலைகள், தற்காலிக வைத்தியசாலைகள் போன்றவை மீது வேண்டுமென்றே குண்டுவீச்சு நடத்தியமை மனிதாபிமான உதவிகளை யுத்தப் பகுதிகளில் மேற்கொண்டிருந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் எவ்வகையான வரைவிலக்கணங்களின் கீழும் யுத்தக் குற்றங்களாகவே கருதப்படும். சிறைபிடிக்கப்பட்டோர், கைதுசெய்யப்பட்டோர் எவ்வித விசாரணைகளுமின்றி படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. இந்த ஆதாரங்கள் மீது எந்த நீதிமன்றத்தினாலும் இதுவரை விசாரணை செய்யப்படவில்லை. இருந்தும் அமெரிக்க நீதிமன்றமொன்று அவற்றைப் பார்வைக்கு எடுக்க விரும்புமென நாம் நினைக்கின்றோம். இவ்வாறு அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## இடதுசாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வார இறுதிக்குள் கூடி இடதுசாரிக் கட்சிகளின் தீர்மானத்தை கூட்டாக வெளியிடுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் செயற்குழு ஏற்கனவே கூடி அரசமைப்புத்திருத்தங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதத்தில் கலந்துகொள்வதில்லையெனத் தீர்மானித்துள்ளது.

ஆதரவாக வாக்களிப்பதா, எதிர்த்து வாக்களிப்பதா அல்லது நடுநிலை வகிப்பதா என ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் கூடி முடிவு செய்யப்படுமென அக்கட்சி தெரிவிக்கின்றது.

## வன்னிப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ வன்னிப்பகுதியில் பல கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்படாமல் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். சாந்தபுரம், இந்துபுரம், பொன்நகர், திருமுறிகண்டி மற்றும் மன்னார், விசுவமடு போன்ற இடங்களிலுள்ள சில பகுதிகளில் மீளக்குடியேற்றுவதாக அழைத்துச் சென்ற மக்களை அங்குள்ள இடைத் தங்கல் முகாம்களில் அடைத்துவிட்டு, அவர்களின் பூர்வீக நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக இலங்கை அரசு அபகரித்து வருகிறது. இந்த மக்களிடம் தமது சொந்த நிலத்துக்குரிய காணி உறுதிகளும் இருக்கின்றபோது அவற்றையெல்லாம் கருத்திலெடுக்காது, தொடர்ந்தும் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதிலேயே இலங்கை அரசு குறியாக உள்ளது. மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்க அவர்களது நிலங்களில் இராணுவ முகாம் களும், இராணுவ முட்கம்பி வேலிகளும் முளைத்துள்ளன. இதனை தடுத்து நிறுத்தும் வகையில் இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

★ மீள்குடியேறிய மக்களின் நிலங்களிலுள்ள - 50 வருடங்களுக்கும் மேலான வயதுடைய - மரங்களும், செடிகளுமே அவர்களது வாழ்வியலைத் தீர்மானித்தன. அந்த மக்களின் வாழ்வாதாரமே அவர்களது நிலங்களிலுள்ள இத்தகைய பயன்தரு மரங்கள்தான். அவற்றையெல்லாம் அனுபவிக்கவிடாது மக்களைத் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைப்பதை மீள்குடியேற்றம் என்று கொள்ள முடியாது- என்று அவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தோம்.

இதுதொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாடு இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்துக்காக இந்திய அரசு என்றும் துணைநிற்கும் என்றும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

இதேவேளை மீள்குடியமர்ந்த மக்களுக்காக அமைத்துக் கொடுக்கவுள்ள 50 ஆயிரம் வீடுகளுக்கான உதவிகளை மக்களுக்கு நேரடியாகவே இந்திய அரசு வழங்கவுள்ளது என்று தெரிவித்த நிருபமா குறித்த வீடுகளை அமைப்பதற்காக இந்தியாவிலிருந்து 20 ஆயிரம் பணியாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர் என்ற தகவலையும் மறுத்துரைத்தார்.

- என்றார் சுரேஷ் எம்.பி.

## மரண தண்டனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது மனைவியின் கையை வெட்டித் துண்டாக்கினார் என்றும் குற்றஞ்சாட்டப் பட்டு இவருக்கெதிராக வழக்குத்தாக்குதல் செய்யப்பட்டது. சட்டமா அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் இவருக்கு மகனைக் கொன்ற குற்றச்சாட்டுக்குத் தூக்குத் தண்டனையும் மனைவியின் கையை வெட்டித் துண்டாடிய குற்றத்துக்கு 25ஆயிரம் ரூபா தண்டப் பணமும் அறவிடப்பட்டது.

தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டுவருட சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று கூறி மேல்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளித்ததன் பின்னர் குறித்த கைதி மேல்நீதிமன்றஇரண்டாம்கட்டடத்தொகுதியில் இருந்து கீழே குதித்துப் படுகாய மடைந்துள்ளார். வடமராட்சி வல்லிபுரக் கோயிலடியைச் சேர்ந்த இராஜராஜன் இராஜகுமார் (வயது 37) என்பவரே மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் மாடியிலிருந்து கீழே குதித்தவர் ஆவார்.

## சன்சீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்துக்குரிய பயணிகளில் யுத்தக் குற்றவாளிகள் அல்லது துணை ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் கூட இருக்கலாம் என கனடா கருதுகின்றது. இவர்கள் கப்பலின் ஏனைய பயணிகளை அச்சுறுத்தும் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக கனேடியப் பொலிஸாரும், அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர்.

## ஜே.வி.பி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக் கப்படும். அரசமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. நாடு முழுவதிலும் நடத்தி வரும் தொடர் கருத்தரங்குகளின் ஓர் அங்கமே துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை என்று ஜே.வி.பி. மேலும் தெரிவித்தது. (ஒ-சி)


பகுதி நேர வேலைவாய்ப்பு
& பேச்சு ஆங்கில பயிற்சி
இலவசம்
பதிவுகள் : 3/9/10
நேரம் : 9A.m.-1 P.m.
T.P. : 0776654347
0770475739
E. E. C.
கொக்குவில் சந்தி,
K.K.S. Road
கொக்குவில்.





"இன்றைய தொழில் நுட்ப உலகில் ஒருவரின் தகமையைத் தீர்மானிப்பது சான்றிதலோ ஏட்டுக்கல்வியோ அல்ல அவருடைய தொழில்சார் திறமைகளே ஆகும்."
சான்றிதழ் மட்டும்
சான்றிதழ் + தொழில்சார் திறமை = Siat Academy
விரையுங்கள் இணையுங்கள் Siat Academy யின் சர்வதேச தரத்திலான Animation கற்கை நெறியில்
SIAT Academy - Jaffna Center
Franchisee - MAG NET Academy
மக்கள் வங்கி 3ம் மாடி கட்டடம்.
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
Ph:- 021 321 4756, 0777 497186, 021 222 1864



சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு
ஆரம்பம் : நாளை (3/9) வெள்ளி 8.30-2.30 வரை
★ ஐந்து வகை வினாத்தாள்களின் மாதிரியும் எதிர்பார்க்கை வினாக்களும்.
★ யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு. (யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே)



IIS
கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 05.09.2010 |
| பிரிவு 02 | 06.09.2010 |
| பிரிவு 03 | 24.09.2010 |
| பிரிவு 04 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டணச் சலுகை வழங்கப்படுகின்றது
மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்



ஆங்கில மொழியில்
தரமான மூன்று நூல்கள்
Three Guide Books to better Your Writing Skills
ஆக்கியோன்: த.ந.பஞ்சாட்சரம்
01. Beginnings of Writing Composition for Grades Six to Nine
02. Writing Letters in English
03. 165 Model Essays
யாழ்.நகர் முன்னணி புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கும்.



ENGLISH
SPOKEN AND GRAMMAR
BY A.BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
04.9.2010 சனி மாலை 4 மணி
சனி / ஞாயிறு வகுப்புக்கள்.
இடம் :
ஆச்சிரமம் குழந்தை யேசு கோயில்
முன் வீதி



SPECIAL ENGLISH
★ A Comprehensive Course for all
★ Covers all Language skills
★ ஆரம்ப நிலையிலிருந்து தரமான உச்சரிப்புடன் பேச, வாசிக்க, எழுத பயிற்சிகளுடன் கூடியது
★ இலகுமுறையில் பூரண இலக்கண விளக்கம்
★ ஆங்கில இலக்கியத்தை தழுவிய பாட அலகுகள்
★ Intensive Practice with Printed Lessons
★ வார இறுதி வகுப்புகள் - மு.ப : 10.30- 12.30
ஆரம்பம் 04.09.2010
சனிக்கிழமை
ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்
விபரங்களுக்கு: The Director - New Science Hall, Kannathiddi



இன்று மாலை மெகா மெஜிக்
இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி
இருகாட்சிகள்
நேரம்: மாலை 3.30மணிக்கும் 6.30 மணிக்கும்
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
ரிக்கற் மண்டபவாயிலில்..
100/= 200/=

T.P: 077 8060 225



SCC
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற Diploma சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட சலுகைக்கட்டணம் வழங்குகிறது இன்றே எம்முடன் இணைந்து உங்கள் எதிர்காலம் நோக்கி செல்லுங்கள் !
4000/= உடன் இரண்டு பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
2010 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
பயிற்சி நெறிகள் ஆரம்பம் 05,06.09.2010

| | |
|---|---|
| Dip. In MS Office | 4 Months |
| Dip. In Desktop Publishing | 4 Months |
| Dip. In Computer Programming | 6 Months |
| Dip. In Eng. Drawing & Auto CAD | 3 Months |
| Dip. In Computerized Accounting | 4 Months |
| Dip. In Data Base Management System | 4 Months |
| Dip. In Audio & Video Editing | 4 Months |
| Dip. In Visual Basic | 4 Months |
| Dip. In Web Designing | 4 Months |

Free
Dip. In Hardware Engineering
Dip. In Internet e-mail
மேலதிக விபரங்களுக்கு
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
Softview Computer College
43, Arasady Rd, (Thaddatheru Junction), Jaffna.
T.P: 021 2225170



புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing,Kids Programs
*Web Designing * Video Editing *AutoCAD *VB.net,LINUX,ICT,
International Courses...
Computer Engineering-USA,CIMA-UK,Toefl/IELTS
Java programmer, Red Hat Engineer, BCS,CCNA, ICDL, Hacking
90% Scholorship
SMS your name & course to 0772 395 895
Degree Course BIT University of Colombo
MCS Free ICDL,BCS,Hardware,English
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction
Web site : www.mcsitcampus.org
Closing Date 05.09.2010


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org